TAMIL SPEAKING LAWYER
Personal Injury Lawyer
INJURED IN A ROAD ACCIDENT ?
ACCIDENT AT WORK OR PUBLIC PLACE
WE ACT ON "NO WIN NO FEE" BASIS
www.nmflawyers.co.uk
NM NOT MY FAULT F Accident & Injury Claims
Ask for RAJ
Raj Rajamohan - 078 1089 7754

BILINGUAL FORTNIGHTLY
# ஒரு பேப்பர்
ORU PAPER
FREE
PAPER - 12 ♦ ISSUE - 253 ♦ FRIDAY 06 NOVEMBER 2015

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
• Personal injury (Neck,Back & Shoulder Pain)
• Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE *
* Other Insurance charges may apply
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




# இது மரணத்தை வென்றோரின் மாதம்!

வாழக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்
Shop fronts
Vehicle Graphics
Roll up Banners
all ur branding needs..
Leaflets | 3d letters
LED Menu Boxes
Cartec Graphics That creative place 02085202111
74, Rosebank Road, Walthamstow E17 8NJ
57, Boundary Road, Walthamstow E178NQ

• விசா முடிவடைந்து சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்கள்.
• புதிதாக அகதி அந்தஸ்து கோருபவர்கள்.
• ஏற்கனவே அகதி அந்தஸ்து கோரி நிராகரிக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஆலோசனை மற்றும் விண்ணப்பம் செய்து தரப்படும்
• கைது செய்தல் தடுத்து வைத்தல் மற்றும் உயர் நீதிமன்ற விண்ணப்பம்
• ஐரோப்பிய சட்டத்தின் கீழ் உறவினர்கள் மற்றும் துணைகளை Sponsor செய்தல்
• மனிதாபிமானம் மற்றும் Fresh Application விண்ணப்பம் அனுப்புதல்
போன்றவை தொடர்பில் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் குழு தமிழ் மக்களுக்கான இலவச ஆலோசனை வழங்கி வருகிறனர்.
M&S Solicitors
1A Beaconsfield Road Southall Middlesex UB1 1BA
(Southall Stationக்கு அருகாமையில்)
Mob: 078 7076 3570, 075 0874 4038
Tel: 020 8571 7760
Email: fahmy@mandssolicitors.com

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.
We have a flexible schedule, including appointments in the evenings and weekends.
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
134, Harley Street, London, W1G 7JY
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

தீபாவளியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை
அனைத்து புடவை வகைகளும் ஒன்று வாங்கினால் இன்னொன்று முற்றிலும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
நகைகள் அனைத்தும் சிங்கப்பூர் விலையில் விற்கப்படும்
Thinesh Jewellers & Textiles
276 Lewisham High Street, Lewisham,London SE13 6JZ
தொடர்புகளுக்கு : 020 8613 9569

Premier Express Store For Sale
Rochdale, Manchester
• Well Establish Convenience Store
• Weekly Taking 8K to 9K. Plus P/P lottery scratch cards 5K.
• Refitted to high stranded in 2015.
• Large residential area / passing traffic and road side parking
• Fresh 15 years lease
Asking Price : £75000 Plus stock
Rent : £1200 Per month shop + 2 Bedroom flat
Tel : 01704211900
Web : emfgroup.com

சென்னையிலிருந்து UK விசா
தொழிலாளர் விசா
தங்கியிருக்கும் விசா
மாணவர் விசா
சுற்றுலா விசா
இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

R & C PROPERTY LAWYERS LLP & NOTARY PUBLIC
CONVEYANCING SERVICES:
• Residential and Commercial Conveyancing
• Last will
NOTARIAL SERVICES:
• Power of Attorneys, Notarisation of documents
• Affidavits , Oaths/ Statutory Declarations / Affirmations
Contact: SEN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor
Telephone: 020 8772 4920
10a Upper Tooting Road , London SW17 7PG

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

## Uwps
UNIQUE WEDDING & PARTY SERVICES

அனைவருக்கும் இனிய
தீபாவளி வாழ்த்துக்கள் !

திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள்
நிகழ்வுகள் மற்றும் அனைத்து தேவைகளுக்கும்...

Inspire your guests by creating an event that's truly unique, Passion, Experience & Creativity, we have the perfect formula in UWPS where the occasion always exceeds your expectations







Wedding Decoration | Ballons Decoration | Stage Arrangement | Marquee
Banqueting Hall Decoration | Videography & Photography | Catering
LCD Backdrop Hire | Fresh Flower Bouquet | Gifts | Party Planning
Chair Cover | Table & Chair Hire | Table Cloth Hire | Centre Piece Arrangement

அனைத்து மங்களகரமான நிகழ்வுகளுக்கும் சகல வசதிகளுடன்
கூடிய 250, 350 மற்றும் 450 பேர் அமரக்கூடிய மண்டபங்கள் (Halls)
உண்டு மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

**Tel: 0203 086 9915 Mob: 0795 083 3135 – 0787 201 5560**
London, UK, Europe
www.uwps.co.uk | uwps@hotmail.co.uk

---

herbalAid

ஆண்களுக்கான மசாஜ் எண்ணெய்
பார்மசிகளில் பெற்றுக் கொள்ளலாம்

## பாலியல் பிரச்சினை உங்களுக்கு ஏதாவது இருந்தால் எம்மோடு தொடர்பு கொள்ளவும்.

Massage oil for Men to increase strength & vitality
100% safe herbal formulation




**Premium SAANDHHA OIIL**
AN ORIGINAL PRODUCT REGISTERED IN UK
Note: Please beware of counterfeit products for safety reasons.

For more information or buy online
Visit : www.herbalaid.co.uk
Email : herbalaid@hotmail.co.uk
Phone : 020-8843-0330

---

## Meera Arnold & Co.



for all your accounting needs...

- **Accountancy Auditing**
- **Company Information**
- **Payroll**
- **Book Keeping**

**45, Chandos Ave, N14 7ES. Tel: 0208 882 2333**

---

அனைவருக்கும் தித்திக்கும் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

## sarasas
SOUTH INDIAN RESTAURANT

- தென்னிந்திய, இலங்கை, வட இந்திய, செட்டினாட் மற்றும் சைனீஸ் உணவின் ருசியை அனுபவியுங்கள்.
- உங்கள் வீட்டுத் தோட்டத்தில் அல்லது நீங்கள் விரும்பும் இடத்தில் எமது தோசை தயாரிக்கப்படும்.
- சகல பாத்திரங்களும் நாம் கொண்டு வருவோம்.
- நீங்கள் எமது உணவை ருசித்து மகிழவேண்டியது மாத்திரமே




*** Outdoor catering * Function hall * Party orders**

புதிய விழாக்களுக்கான மண்டபம் Bar வசதியுடன் திறக்கப்பட்டுள்ளது






## SARASAS CATERING

எமது சேவை, கற்பனை, ருசியான உணவு, சிறந்த சமையல் ஆகியவற்றின் வெளிப்பாடாகும்

We make 30 different Types of Dosa

630-634 Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RY
TEL : 020 8561 8188 for further enquiries please contact : 07939 246 552
Email: raj@sarasasrestaurant.com www.sarasasrestaurant.com

FREE CAR PARKING UPTO 100 CARS

**Opening Times 12.00 noon to 11.00pm (7 days a week)**

# தூவல்




## நெருக்கடிக்குள் பிரித்தானிய அரசு

650 உறுப்பினர்களைக்கொண்ட பிரித்தானிய பாராளுமன்றத்தில் 7 பின்வரிசை உறுப்பினர்களை சந்தித்து விளக்கம் கொடுத்தார்களாம் பிரித்தானிய தமிழர் பேரவை உறுப்பினர்கள். இதனை 'பிரித்தானிய அரசுக்கு தமிழ் மக்களால் கொடுக்கப்படும் தொடர் நெருக்கடிகள்!' என்று தலைப்பிட்டுச் செய்தியாக்கியிருக்கிறது ஒரு ஊடகம். இது பிரித்தானிய தமிழர் பேரவையே எழுதிக்கொடுத்த தலைப்பா அல்லது அந்த ஊடகம் பரபரப்புக்கு எழுதியதா என்பது தெரியவில்லை. யாராயிருந்தாலும் வாசிக்கிறவர்களை மடையர்கள் என்று எண்ணுகிறார்கள்போல் தெரிகிறது.

*- கயல்விழி*

## குழப்பமே உன் பெயர் கூட்டமைப்பா?

தாம் முதலமைச்சருடன் நல்லுறவில் உள்ளதாக ஐ.தி. சம்பந்தன் எழுதியுள்ளார். அதே பக்கத்திலேயே சிறிவாசு முதலமைச்சர் மீது குற்றச்சாட்டுகளை அடுக்கியிருக்கிறார். இவர்கள் இருவரும் கூட்டமைப்பின் லண்டன் கிளையில் முக்கிய உறுப்பினர்களாக இருக்கிறார்கள். நாட்டிலுள்ள கூட்டமைப்பு மாதிரி இவர்களும் ஆளுக்காள் ஒரு கதையை சொல்லுகிறார்கள்.

*இணுவை சி. இரங்கன்*

## பேய்க்காட்டல்

பிணையில் விடுவெதென்பது ஒரு பேய்க்காட்டல் நடவடிக்கை. அரசாங்கத்துக்கு காசுமாச்சு. எந்த நேரத்திலும் அவர்கள் கைது செய்யப்படலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நாங்கள் சொன்னபடி செய்து விட்டோம் என்று தமிழ்மக்களுக்குப் பிரச்சாரம் செய்ய வசதியாக இருக்கும். அவர்கள் நீண்டகாலம் சிறையில் இருந்து விட்டார்கள். சட்டப்படி அவர்கள் குற்றம் செய்திருந்தால் கூட அதற்கான தண்டனையை அனுபவித்து விட்டார்கள். தேவை பொது மன்னிப்புடன் கூடிய நிரந்தர முழுமையான விடுதலை. இதைக் தட்டிக் கேட்க வேண்டிய தமிழ் பிரதிநிதிகள். தேவையில்லாத பிரச்சினையான முஸ்லிம்களை இனச்சுத்திகரிப்புச் செய்ததற்கு மன்னிப்பு கேட்க வேண்டும் என்றுகதை விட்டு முக்கிய பிரச்சினையிலிருந்து மக்கள் கவனத்தைத் திசை திருப்புகிறார்கள்.

*- தி. மகேந்திரன்*

## கருத்துச்சுதந்திரமும் கத்தரிக்காயும்

நாரயாணனை செருப்பால் அடிச்சது தவறாம் கருத்தை கருத்தால் எதிர் கொள்ள வேண்டுமாம். நல்லது மக்காள் சிறிலங்காவின் இன அழிப்பிற்கு துணைபோவதற்கு முன்னர் நாராயணன் என்ன கருத்துக் கணிப்பு எடுத்தா முடிவெடுத்தவர்? ஆரும் ஒரு அப்பாவி இவங்கள் செய்யிறதை கண்டு பொறுக்காமல்காலிலை இருக்கிறதை எடுத்து அடித்தால்இல வசமாய் வகுப்பெடுக்க வந்திடுவாங்கள்.

*- நடேசதாசன்*

## அருமையான அறிவியல் தகவல்கள்

தொடர்ந்து அறிவியல் தகவல்களை தந்து வரும் மாசிலாமணி அவர்களின் கடந்த வாரக் கட்டுரை மிக சிறப்பாக இருந்தது. அதேபோல் முகநூல் விருப்புக்களுக்காக எந்த வித ஆராய்ச்சிகளுமின்றி 10 இலட்சம் 20 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே புலமை மிக்க தமிழ் மொழி தோன்றி விட்டதாகவும். அதிலிருந்து ஏனைய எல்லா மொழிகளும் தோன்றின என்று சற்றும் உண்மையில்லாத கருத்துக்களைப் பரப்பிவருபவர்களுக்கும் தமிழ் மொழி உண்மையாக எப்போது தோன்றியது என்பது தொடர்பான கட்டுரையையும் அவர் வரையவேண்டும் என்பது அவா.

*- சி.செ.நாதன்*

## தேசியக்கொடியும் அமெரிக்காவும்

தமிழீழ தேசியக் கொடியை சர்வ தேச நாடுகள் தடை செய்திருக்கிறதாம் அதை ஏன் நாடுகடந்த அரசாங்கம் பாவிக்கிறதாம் என்று தமிழ் மக்கள் அங்கலாய்க்கிறார்களாம் இவர் ஏதும் கருத்துக் கணிப்பு நடாத்தினாரோ தெரியவில்லை ஆனால் இப்படியான வெள்ளாந்திகளால் தான் தமிழனம் இப்படியிருக்கிறது. நாடுகடந்த அரசாங்கம் சிறிலங்காவின் ஒற்றையாட்சி முறை ஏற்றுக் கொண்டு செயற்பட்டாலே ஒழிய இந்த so called சர்வதேச நாடுகள் அதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பது ஏன் செல்வரத்தினம் போன்றவர்களுக்கு விளங்குதில்லை என்று தெரியவில்லை. இந்த லட்சணத்தில் கொடியை மாத்துமாறு பங்கிங்கரகக் கடிதம் எழுதுகிறார். நாடுகடந்த அரசாங்கம் ஒரு வெள்ளைப்புறாவை தமது இலச்சினையாக வைத்தாலும் அதனை இவர்கள ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. சர்வதேச நாடுகள் செங்கம்பளம் விரிக்க வேண்டுமென்றால் அவர்களது ஆட்டத்திற்கு இமானுவல் பாதிரியார் போல் ஆடவேண்டு.

*- சிவா. நகுலேந்திரன்*

## நம்பிக்கையில்லாத விசாரணைகள்

ஐ.நா. மனிதவுரிமை அறிக்கையின் பிரகாரம், உள்ளக விசாரணைகளை ஆரம்பிக்கும் முன்னரே தீர்ப்புக் கூறும் இலங்கை அரசின் நிலைப்பாடு உள்ளக விசாரணைகளின் நம்பிக்கை தருவதாக இல்லை. எனினும், இத்தகைய நகர்வுகள் சர்வதேச விசாரணையை நியாயப்படுத்துமென நம்பலாம். எது நடக்குமோ அது நன்றாகவே நடக்கிறது.

*- உமா மகாலிங்கம்*

## உள்ளத்தை இழுக்கும் ஊர் நினைவுகள்

ஊர் நினைவு வந்ததும் எம் அகக் கண்ணில் படுவது அங்குள்ள மரங்கள் காதில் ஒலிப்பவை வைகறைப் பறவை ஓசை. எம் கண் முன்னே ஊரின் வாசத்தை புளியமரம் ஊடாக மனக் கண்ணுள் கொண்டு வந்த ஜெயபாலனுக்கு நன்றி.

*- பாஸ்கரன்*

## விடுறாங்கள் இல்லை

தமிழர்களின் தலைவிதியை தாங்களே தீர்மானிக்க போவதாக கங்கணம் கட்டி நிற்கும் சம்பந்தனுக்கு வயது 82, ஆனந்தசங்கரிக்கு வயது 82. சாதாரண பணியகச் சிப்பந்திக்கே வயது போய்விட்டது என்று அறுபது வயதுக்கு மேல் வேலை கொடுக்க மறுக்கிற நாட்டிலை இவையள் தாங்கள்தான ஏதோ செய்யப் போகிறதாக குத்தி முறியினம்.

- நந்தினி

## அடித்தால் மோதிரம்

தமிழினத் துரோகிகளை செருப்பால் மூன்று முறை அடிப்பவர்களுக்கு அரைப்பவுண் மோதிரம் வழங்குவதாக கோயம்புத்தூரைச் சேர்ந்த ஜெயபால் அய்யா என்பவர் அறிவித்திருந்தார். தற்போது நாராயணனை செருப்பால் அடித்த பிரபாகரனுக்கு அதை வழங்கவுள்ளதாக அவர் உறுதியளித்துள்ளார். இப்படியே போனால் இன்னும் எத்தனைபேர் அடிவாங்கப் போறார்களோ தெரியவில்லை.

*- கோவை கதிரவன்*

*ஒரு பேப்பர் தொடர்பான உங்கள் கருத்துக்களுக்கு.....*
**Tel : 020 7043 4314**

# மக்கள் போராட்டங்களை மறைக்கும் ஊடகங்கள்

நடிகர் சங்கத் தேர்தலுக்கு கிடைத்த ஊடக விவாதங்கள் எம்.கே.நாராயணனுக்கு தெரிவிக்கப்பட்ட எதிர்ப்புகள் குறித்தோ, தி இந்து பத்திரிக்கை தனது அலுவலகத்தில் அசைவ உணவை தடை செய்வது குறித்தோ பேசுவதற்கு கிடைப்பதில்லை.

ஊடகத்திற்குள்ளாக இருக்கும் புரிந்துணர்வு, தம்மைப் போல வணிகம் செய்யும் தி இந்துவினை நோக்கிய அறம் சார்ந்த கேள்விகள் எழும் பொழுதும் எந்த எதிர்வினையையும் உருவாக்குவதில்லை. மிகச்சில ஊடகங்களை தவிர்த்து அசைவ உணவினை தடை செய்திருக்கும் தி இந்துவிற்கு எதிரான போராட்டத்தினை மக்களிடத்தில் இருந்து மறைத்தன. இதே நிலையே எம்.கே. நாராயணன், என்.ராம் குறித்த கேள்விகளுக்கும் நிகழ்ந்தது, ஊடகங்களின் இந்த கள்ள மெளனம், 2009இல் இனப்படுகொலை நடந்த பொழுதில் இருட்டடிப்பு செய்யப்பட்ட காலத்தினை நினைவிற்கு கொண்டு வருகிறது.

நாளை ஒரு நெருக்கடி நிலை வரும் காலத்தில் இதே ஊடகங்களும், ஊடகத்தில் கருத்து கந்தசாமிகளாக உலாவரும் ஞாநி, மனுசியபுத்திரன், வகையராக்களும் கள்ள மெளனத்தினையே பதிலாக தருவார்கள். உண்மையில் இவர்கள் ஒடுக்கும் அரசின் கைக்கூலிகளாகவே தங்களது கருதது மெளனத்தினை கடைபிடிப்பவர்கள். ஏதேனும் ஒரு தேர்தல் கட்சியின் மூலமாக அதிகாரவர்க்கத்தில் பங்கு பெற்று விட முடியும் என்று முடிவெடுத்தவர்கள் இவர்கள். தாங்கள் நம்புகின்ற அரசினையும், அதிகார வர்க்கத்தினையும் எப்படியேனும் பாதுகாத்துவிட முடியும் என நம்புகிறவர்கள்.

இதன் காரணமாகவே ஒரு சாமானியனின் எதிர்ப்பு இவர்களுக்கு அதிர்ச்சியை அளிக்கிறது. ஒரு செருப்புவீச்சு ஆபத்தானதாக இவர்களுக்கு அதிர்ச்சியளிக்கிறது என்றால், கொத்துகுண்டுகளை வீசிய இலங்கை அரசு நெஞ்சு வலியை கொடுத்திருக்க வேண்டும். ரசாயண குண்டுகள் வீசிய செய்திகள் மாரடைப்பை கொடுததிருக்க வேண்டும். அத்தகைய நெருக்கடியான தருணங்களில் ஒருவேளை மானாட மயிலாட பார்த்திருப்பார்களோ என்னவோ.

பிரச்சனை ஒன்று தான்,அதாவது தங்களை 'கருத்து கந்தசாமிகளாக' காட்டுகின்ற 'தி இந்து' எனும் நிறுவனம் மீதும், இந்த நிறுவனங்கள் நிலை பெற்று வளர்ச்சியடைய துணை செய்யும் இந்திய அரசு வர்க்கத்தின் மீதும் சாமானிய மக்களாகிய நாம் மிக வலிமையான சனநாயக எதிர்ப்பினை பதிவு செய்து விட்டோம் என்பதுவே இவர்களுக்கான அதிர்ச்சி. யோசித்து பாருங்கள், இந்த ஊடகங்கள் இல்லையெனில் இவர்கள் கருத்தாளர்களாக மக்களிடத்தில் அறிமுகமாகி இருக்க இயலாது. இந்த போலி கருத்தியலாளர்கள் இல்லையெனில் மொன்னையான விவாதங்களையும் சில ஊடகங்கள் தொடர்ந்து நிகழ்த்தி விடவும் முடியாது.

இவர்களின் இந்த கூட்டணி மிக மிக முக்கியமானது. எப்படியெனில் கால்பந்து விளையாடும் எதிர் எதிர் அணிகளைப் போல இவர்களும், அரசும் விளையாட்டை நடத்தும், நடுநிலையைப் போல ஊடகம் விளையாட்டை ஒருங்கிணைக்கும். ஆனால் இவர்கள், ஒரு பொழுதும் அரசுக்கு எதிராக 'கோல்' போட்டு விடும் வழியை நமக்கு கற்று கொடுத்து விட மாட்டார்கள். கால்பந்து இவர்களது கால்களுக்குள்ளேயே விளையாடப்பட்டுக் கொண்டிருக்கும். எனவே தான் இவர்கள் திட்டமிட்டு ஒரு செய்தி கட்டமைப்பினை ஏற்படுத்துவதை நாம் புரிந்து கொள்வது அவசியமாகிறது. உதாரணமாக

நடிகர் சங்கத் தேர்தலை 24 மணி நேரச் செய்தியாக மாற்றிவிடுவது. அதன் பின்னர் இதன் மீதான விமர்சனத்தினை இதே போலி கருத்தியளாலர்களைக் கொண்டு செய்து தம்மை நடுநிலையானவர்கள் எனக் காட்டிக்கொள்வது. இதை இரண்டு பேரும் திறம்பட செய்து முடிப்பார்கள்.

இந்த யுக்தியின் மூலம் அரசின் கொள்கைகள் குறித்தோ, அதிகார வர்க்கம் குறித்தோ, மக்கள் திரள் அரசியல் குறித்தோ கூர்மையான விவாதத்தினை ஏற்படுத்தும் அவசியம் இல்லாமல் போகிறது. இப்பொழுது நடந்து கொண்டிருப்பதுவும் ஒருவகை 'மானாட மயிலாட' வகையான நிகழ்வுகளே... இதில் அவ்வப்பொழுது நேர்மையான செயல்பாட்டாளர்களை அழைத்து தங்களது நம்பகத்தன்மையை தக்க வைத்துக்கொள்வது ஒருவகை மேற்கத்திய வகைப்பட்ட யுக்தி.

தமிழகத்தின் அடிப்படை பிரச்சனைகள் குறித்து ஆழமான விவாதத்தனை , கேள்விகளை எழுப்ப எந்த ஊடகத்தின் தலைமையும் தயாராக இருக்காது. இதை நாம் புரிந்து கொண்டு நமக்கான விவாத களத்தினை உருவாக்குவது அவசியம். போலிக் கருத்தியாளர்களை மேலும் மேலும் அம்பலப்படுத்த தயாராவோம்.


*திருமுருகன் காந்தி*




| | Economy | Business |
|---|---|---|
| Colombo | £466 | £1879 |
| Chennai | £442 | £1643 |
| Bengaluru | £448 | £1649 |
| Bangkok | £450 | £1916 |
| Kuala Lumpur | £449 | £1964 |
| Perth | £647 | £2937 |
| Sydney | £766 | £3646 |
| Melbourne | £698 | £3298 |
| Brisbane | £689 | £3299 |

FREE STOPOVER in ABU DHABI PERMITTED
Travel between 5 Oct 2015 - 30 Jun 2016
Fares are from, include taxes, subject to availability & conditions apply. Blackout dates apply.

CARLTON LEISURE
Worldwide Travel & Tours



BUDDHIST PILGRIMAGE
Return flights with Etihad Airways
4* Accommodation
Bed & Breakfast - twin sharing basis
fr £1450pp



SYDNEY, BLUE MOUNTAINS & BEYOND SELF DRIVE
Return flights, 4 nights at 3*+ Vibe Hotel Sydney,
5 day Discover Blue Mountains & Beyond Self Drive with 4 nights accommodation
fr £1379pp



ABU DHABI CITY BREAK
Return flights with Etihad Airways
3 nights at 5* Hilton Abu Dhabi,
B&B - twin sharing basis
fr £575pp



SRI LANKA EXPERIENCE
Return flights with Etihad Airways
4* Accommodation
Bed & Breakfast - twin sharing basis
fr £1079pp

Book HOTELS & FLIGHTS on our website now
www.carltonleisure.com
IATA

RAVNERS LANE 020 8426 1266
ILFORD 020 8554 4200
EAST HAM 020 8552 6125
TOOTING 020 8672 5757

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, NOVEMBER 06, 2015, ISSUE 253

## யாரைத் திருப்திப்படுத்த இந்த ஏற்பாடு?

இருபது வருடத்திற்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டமை ஒரு 'இனச்சுத்திகரிப்பு' நடவடிக்கை எனவும் அதற்கு கண்டனம் தெரிவித்து வடமாகாணசபையில் தீர்மானம் கொண்டுவரவேண்டும் எனவும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்ததாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. இவ்வாறான பலவந்தமான மக்கள் வெளியேற்றத்தை இனச் சுத்திகரிப்பு என்ற வகைக்குள் அடக்கலாமா இல்லையா என்பதனை ஆராய்வதை விடுத்து, இந்நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வடமாகாணசபை உதவ வேண்டும் என்று கோருவதில் நியாயமிருக்கிறது. இவ்விடயத்துடன் தொடர்புபட்டிருந்த விடுதலைப்புலிகள் தமது வருத்தத்தைத வெளியிட்டதுடன் முஸ்லீம் தலைவர்களை வன்னிக்கு வரவழைத்து அவர்களுடன் புரிந்துணர்வு உடன்பாடுகளைச் செய்து கொண்டனர். அதன்பின்னர் இத்தகைய சம்பவங்கள் நடைபெறவில்லை.

இவ்வரலாற்றைப் புறந்தள்ளிவிட்டு, வடமாகாணசபையில் தீர்மானம் கொண்டு வருமாறு கோருவது ஏன் என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் எழுவது தவிர்க்க முடியாதது. இக் கோரிக்கையை முன்மொழிபவர்கள்தான் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்படுகிறார்கள் எனக் கூறுவதற்கு அது சர்வதேச நீதிமன்றத்தில் நிருபிக்கப்பட வேண்டும் எனக்கூறுபவர்கள். இது தொடர்பில் தீர்மானம் எதனையும் தமது கட்டுப்பாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் வரவிடாமல் தடுத்தவர்கள். இன்று எந்த நீதிமன்றத்தின் தீர்ப்புமின்றி 'இனச்சுத்திகரிப்பு' பற்றிப் பேசுவதனை இனங்களுக்கிடையிலான நல்லிணக்க முயற்சி எனக் கூறுவது உண்மையான நல்லிணக்க முயற்சியை கேலிக்கு உள்ளாளக்குவதாகவே அமையும்.

மேற்குலக சிந்தனை மையங்களினதும், இராஜதந்திரிகளினதும் நெறிப்படுத்தலிலேயே இவ்வாறு இவர்கள் நடந்துகொள்வது ஒன்றும் இரகசியமானதல்ல. ஆனால் இதனை ஒரு முற்போக்கான நடவடிக்கை எனச் சிலர் நியாயப்படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் நடைமுறையில் இவர்கள் படுபிற்போக்குத்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருதனை எவராலும் அவதானிக்க முடியும். இவ்வாறு வெளித்தரப்புகளின் இழுப்பிற்கு வழைந்துகொடுக்கும் நிலையில் வடமாகாணசபை இல்லை. குறிப்பாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் இக்கோரிக்கையை நிராகரிப்பார் என எதிர்பார்க்கலாம்.

இது ஒருபுறமிருக்க, மண்ணுக்காய் விழுந்த மாவீரர்களை நினைவுபடுத்தி நொவெம்பர் மாதத்தை மரம் நடுகை மாதமாக வடமாகாணசபை பிரகடனப்படுத்தியிருப்பதும் அந்நிகழ்வுகளை முதலமைச்சரே ஆரம்பித்து வைத்திருப்பதும் தமிழ் மக்களுக்கு மகிழ்வளிக்கும் நடவடிக்கையாக அமைந்திருக்கிறது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*போன பேப்பரில் Sri Lankan and Japanese prime ministers declare "comprehensive partnership" என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையை எழுதியவர் கே. இரத்நாயக்க wsws.org இணையதளத்திற்காக அவர் எழுதிய கட்டுரையை மறுபிரசுரம் செய்திருந்தோம். ஆனால் எழுதியவரின் பெயரை தவறுதலாக விஸ்வநாதன் உருத்திரகுமாரன் என்று போட்டிட்டம். தவறுக்கு வருந்துகிறோம்.*

*நாங்களும் சொல்லிக் களைச்சிட்டம் சிலர் இன்னமும் கேட்கிறமாதிரியில்லை. ஆக்கங்களை அனுப்பி வைக்கும் போது எழுத்து வடிவத்தை word கோப்பாகவும் (file). படங்களை தனியாக jpg அல்லது png வடிவத்தில் அனுப்பி வையுங்கள். Pdf கோப்பாக அனுப்பினால் அதை வைத்து நாங்கள் ஒண்டும் செய்ய முடியாது.*

*அட்டைப் படங்களாகப் நாங்கள் போட்டுக் கொண்டு வாறது எங்கடை குழுவிலை இருக்கிறாக்கள் எடுத்த படங்கள். அதுபோல் நீங்களும் உங்களது படங்களை அனுப்பி வையுங்கள அவற்றை பிரசுரிப்போம். அனுப்பக்கு முன்னம் கவனிக்க வேண்டியது. படத்திற்காக உரிமை உங்களுடையதாக இருக்க வேண்டும். படம் பிரசுரத்திற்கு ஏற்ற தரத்திலை இருக்க வேணும். எங்கை எடுத்தது எது சங்கதி எண்ட விபரங்களையும் அறியத் தாருங்கோ. பின்னடிக்கு பிரச்சினை வரக்கூடாது அதாலைதான் இந்த விபரங்கள் தேவை.*

***ஒரு பேப்பர்*** *அடிக்கிறதற்கும் மற்றச் செலவுகளுக்கும் தேவையான பணம் விளம்பரங்களிலிருந்து வருகிறது எண்டது மெய்தான். அது போதாமல் எங்கடை கையால் போடுறதும் வழமைதான். விளம்பரங்கள் தாற ஆட்களில் கனக்கப்பேர்* ***ஒரு பேப்பர்*** *தொடர்ந்து வரவேணும் எண்ட நல்ல எண்ணத்திலதான் தாறார்கள் எண்டதும் மெய்தான். அதுக்காக அவையளுக்கு நாங்கள் நன்றியுடைவர்களாக இருக்கிறம். ஆனால் விளம்பரம் தாறவை எங்கடை எடிற்ரோறியல் விசயங்களில் தலையிடுவதில்லை, அதுக்கு* ***ஒரு பேப்பர்*** *நிர்வாகம் அனுமதிக்கிறதும் இல்லை. இந்த விசயத்தை நாங்கள் முந்தியும் சொல்லியிருக்கிறம். இப்பவும் அதுதான் நிலமை. விளம்பரம் தாறவை மட்டுமில்லை ஒரு பேப்பரின் விளம்பரப்பிரிவில் இருக்கிறவை கூட பேப்பரில் வாற விடயங்களில் தலையீடு செய்யிறதில்லை. அதுபோல் விளம்பர விசயங்களில் ஆசிரியர் குழுவில் உள்ளவர்கள் தலையீடு செய்யிறதில்லை. இந்தப் புரிந்துணர்வுடன்தான்* ***ஒரு பேப்பர்*** *தொடக்கத்திலை இருந்து இயங்கி வருகிறது. இதில் மாற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை.*

*அடுத்த பேப்பர் நொவெம்பர் 20 திகதி மாவீரர் தினச் சிறப்பிதழாக வெளிவரும் உங்கடை ஆக்கங்களை உரிய காலத்திற்கு அனுப்பி வையுங்கள்.*

*வேறை என்ன?*

*அடுத்த பேப்பரில் சந்திப்பம்*

***ஒரு பேப்பர்*** *காரன்கள் + காரிகள்*

# Tamil leadership need not shy away or react to unfair challenge coming from Sumanthiran



The Eezham Tamil leadership should positively consider seeking pardon from the Tamil-speaking Muslims, explaining the dynamics, going back to the root of the evil lying in the mentality of the sections of elite of all sides in upholding the colonially created Colombo-centric genocidal State in the island and its patrons outside, commented Tamil activists for alternative politics in the island. The Muslim grievances, as often highlighted by them, do not begin from the LTTE eviction of Muslims from Jaffna. They start from Sir. P. Ramanathan, lawyering and achieving impunity for the Colombo-centric Sinhala leadership's crimes against Muslims in the Puththa'lam pogrom of 1915. The dynamics of Colombo, now added with international partners in deploying 'lawyers' to seek impunity continues to this day, the activists said.

The activists were responding to Colombo-based TNA parliamentarian Mr. M.A. Sumanthiran urging the Northern Provincial Council headed by Justice C.V. Wigneswaran to pass "a resolution condemning the en masse expulsion of Muslims by the LTTE which amounts to ethnic cleansing" in 1990, "just as it [NPC] passed a resolution in condemning the genocide conducted against the Tamils."

According to Sumanthiran, cited by The New Indian Express reporter in Colombo, "If the NPC does not do it, the world will not take the Tamil's contention that they had been subjected to genocide seriously."

In fact, the world seeing Tamils subjected to genocide will not come through by the added resolution urged by Sumanthiran, as the so-called IC, the UN and Sumanthiran himself showed utter disregards to the earlier resolutions of the NPC as well as the resolutions of the Tamil Nadu State Assembly.

> The LTTE act on Muslims itself, its antecedents and after effects, need careful perusal. The line of talks in 2002 between the LTTE leader V Pirapaharan and SLMC leader Rauf Hakeem also needs consideration in this context.

What Sumanthiran urges amounts to ridicule of the Eezham Tamil claim of a large-scale, internationally engineered genocide, in order to equate the crimes of 'both sides' and ultimately serve the agenda of seeking impunity and integrity of the Colombo-centric genocidal State and its abettors.

But the Eezham Tamil leadership and activists in the island and in the diaspora need not shy away or react to the unfair challenge coming from just a 'lawyer' engaged by international culprits.

Eezham Tamils should be able to see that Tamil and Muslim leadership, at one point or another, and the Sinhala leadership always, trying to uphold the State in Colombo or the agenda of its sponsors outside, is the root cause of all evils.

The LTTE act on Muslims itself, its antecedents and after effects, need careful perusal. The line of talks in 2002 between the LTTE leader V Pirapaharan and SLMC leader Rauf Hakeem also needs consideration in this context.

Eezham Tamil polity seeking pardon from Tamil-speaking Muslims should be unassuming, but it should come in an enlightening way to the edification of the Colombo-centric agenda or the powers-guided agenda, pursued in the past as well as in the present. Otherwise, it may only amount to conferring impunity to the State in Colombo and its abettors.

Answering Mr Sumanthiran is insignificant. The response should be fundamentally revolutionary to impact the agenda-setters behind him as well as the Tamil mindset.

> But the Eezham Tamil leadership and activists in the island and in the diaspora need not shy away or react to the unfair challenge coming from just a 'lawyer' engaged by international culprits.

The apology may first come for Tamil polity in the past securing impunity to Sinhala leaders committing crimes against Muslims in a Colombo-centric State emerging under the British. Seeking pardon for the LTTE act may also follow. But, the game of internationally lawyering impunity to the genocidal State and upholding its integrity continues. This is what that most seriously needs condemnation by Tamil polity.

*- Courtesy: TamilNet*

# Political Participation Of Oppressed Castes & The Need For A Progressive Political Tamil Nationalism



By Thanges Paramsothy

The question of why a single person from oppressed caste groups could not become as a member of parliament in the last parliamentary election held on 17th August 2015 has not yet been asked or answered. Seven members of parliament from Jaffna electoral division were selected as qualified members according to the population ratio. Among them, a single member is not from the oppressed caste groups, while such caste groups occupy more than half of the Jaffna population. However, only two individuals from oppressed caste, Pallar, out of thirty-eight members have become as members of northern provincial council in the last election held on 21st September 2013.

The criticism against the TNA is that they appoint one person from the oppressed castes as a candidate at every parliamentary election in order to show that they are 'casteless' in their selection process of the candidates. However, the past experience shows that the person who was selected as a contesting candidate in the TNA would be as a potential loser than a winner.

The five oppressed castes groups, who are now majority in numerical terms, are in a position to become as potential political leaders in Tamil nationalist politics. Apart from the numerical strength of oppressed castes, they also have a higher record in their educational achievement, socioeconomic mobility. However, they still fail to become as active participants in the Tamil nationalist politics. A number of left movements functioned among Tamils before the armed ethnic conflict had contributed in demolishing "untouchability" to a great extent from Tamil society. However, they did not mobilise the oppressed castes to question/challenge the Vellalar-led Tamil nationalist politics that in number of instances fails to take affirmative actions against internal backwardness and discrimination in terms of caste, gender, class and religion. The question arises why are the oppressed castes unable to enter into the Tamil political mainstream? To what extent does the Vellalar-led Tamil national political system work to include the oppressed caste persons as their potential leaders? In order to answer these questions, we need to analyse the Tamil national political trend and the psyche of both oppressed and dominant caste groups.

> Tamil armed groups particularly the LTTE challenged this caste-oriented politics. Those who were in lower positions in the constructed hierarchical caste order became as leaders taking upper hand in the LTTE movement.

Even though some authors see the origin of Tamil nationalism with the Tamil kingdom before the colonial powers and Saiva revivalist Arumukanavalar (Gunasingam1999; Cheran 2009), the Tamil nationalist politics has been increasingly constructed in relation to defensive or reactive nationalism, which denies identifying the existing internal differences. The Tamil nationalist politics throughout its known history systematically avoid seriously looking at its caste-oriented politics, where oppressed castes rarely or never have a leadership position. As the government of Sri Lanka fails to take an affirmative action to the Tamil national question, the Tamil nationalist politics continuously fails to change the traditional caste domination in its political mobilisation. It has a complete blindness on this issue. The internal differences in terms of caste are expected to continue as such whereas the all Tamils are expected uniting them under the Tamil nationalist project. This political mobilisation creates a scenario where a segment of Vellalar and their close associates take upper hand and others particularly the oppressed castes struggle to be part of such politics. The oppressed castes consistently remain as potential voters rather than potential political candidates/leaders.

Apart from the systematic exclusion of oppressed caste in the Tamil nationalist political movement, there is also a lack of awareness/motivation among the oppressed caste groups in articulating their social capital for a betterment of the underprivileged and marginalised groups in particular and Tamils in general. The educated oppressed caste groups for some reason also avoid participating in Tamil nationalist politics. The younger generation of oppressed castes who mobilised upwardly in terms of education and economy see that caste plays a little role in society. However, most of such generation contradicting to their view either avoid identifying them with a particular caste group or pretend that they belong to dominant caste Vellalar. Their attempt is not simply creating a casteless society but rather achieving status in caste ladder/hierarchical order. This in turn supports the Vellalar political leaders to continue their domination in Tamil politics, where the oppressed castes are simply viewers/voters than participants.

As we know, caste struggle against "untouchability" has much longer history than the ethnic conflict in Sri Lanka. If we count the date, it is one century older in Tamil political and social history. The internal caste differences, which were openly practiced in Tamil areas particularly in Jaffna, had challenged the Vellalar-oriented Tamil political mobilisation. Some Vellalar leaders such as Sivasithamparam, Amirthalingam and Naganathan who contested respectively in Udduppiddy, Vaddukkoddai and Nallur electoral divisions were defeated in the parliamentary election in 1970 due to the opposition of underprivileged caste groups against the Vellalar leaderships. This was also because these Vellalar leaderships were not supportive and in some instances acted against the struggle against castisim, which reached its peak in the 1960s. However, the increasing threat to the notion of homeland (territory), language, citizenship, employment and educational opportunities destroying the nationhood of the Tamil people due to the Southern Sinhala Buddhist extremism and its power were utilised by the Vellalar political leaders in order to unite people under their leadership undermining internal inequality, which went against their political leadership in the previous parliamentary election.

The Sinhala Buddhist extremism threatening to Tamil ethnic identity and political freedom in turn were supportive for those who want to exercise blindness on its own inequality and maltreatment. This was also the period when the oppressed castes and left movements achieved a notable success in demolishing the "untouchability" among Jaffna Tamils. Some authors see the achievement of the struggle against castisim as a symbolic success considering its limitation and boundary (Sivathamby 2007). In order to fulfil the grievances of oppressed castes, "the mobilisation against caste discriminations" also became as part of political manifesto in the Vaddukkoddy election campaign in 1977 along with the demand for a separate Tamil homeland. However, a single step has not yet been taken by such Tamil nationalist leaders in order to fulfil the grievances of oppressed caste groups. They continue their Tamil nationalist project getting a tremendous support from the oppressed caste groups rather than providing an equal opportunity to participate in Tamil nationalist politics.

The Tamil nationalist project led by the Vellalar went to its extreme claiming a separate Tamil state, 'Tamil Eelam' due to the failure of their negotiations with Sinhala extremists for a political solution. This has tremendously helped them to achieve uniting all Tamils irrespective of caste, class, religious and gender differences for their political purpose. Those who previously voted against the Vellalar leadership are now forced to vote such political leaders considering the threats to Tamil ethnic identity and its nationhood. The Vellalar Tamil nationalist politics soon capitalised the extreme positions of the Sinhala Buddhist nationalism in order to unite the Tamils under the Vellalar-led Tamil nationalism. However, the Tamil armed groups particularly the LTTE then challenged this caste-oriented politics. Those who were in lower positions in the constructed hierarchical caste order became as leaders taking upper hand in the LTTE movement.

> They continue their Tamil nationalist project getting a tremendous support from the oppressed caste groups rather than providing an equal opportunity to participate in Tamil nationalist politics.

The LTTE movement, which was in power, to some extent had destroyed this political domination within its movement giving leaderships to all caste groups. Thamilchelvan, for example, who was from one of the oppressed caste groups, Ampattar, became as a leader of the political wings in the LTTE movement. Apart from the debate on success, failure and problems in the political mobilisation of the LTTE, it had the negotiating power where people from different social and caste backgrounds became as participants. Soon after the LTTE was defeated, the Tamil politics is once again been dominated by the Vellalar caste in Jaffna. The oppressed castes have a little or no space to become as potential leaders.

( Continued on page 24)

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

**BBK Partnership**
Croydon.................. 020 8150 9950

**Meera Arnold & Co**
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]
K.Durairajah [Greenford]

**இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.**

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
அ.இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பொறுப்பாசிரியர்
- கோபி -

விளம்பரம்
அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூரன் - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா - சாரங்கன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
அஜந்தா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# அமைதியை விரும்பும் அறத்தின் ஆயுதம் செருப்பு



*(கையில் ஒலிவாங்கியுடன் எம்.கே.நாராயணன், சந்திரஹாசன் மற்றும் இந்து என்.ராம்)*

அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷின் மீது 2008ம் ஆண்டு ஈராக்கில் பத்திரிக்கையாளர் சந்திப்பின் போது ஒரு காலணி எறியப்பட்டது. 'அமெரிக்க நாயே! இது உனக்கு ஈராக் மக்களின் வழியனுப்பும் முத்தம்' என்ற முழக்கம் வந்தது. இரண்டாவது காலணியும் எறியப்பட்டது. 'இது ஈராக்கில் கொல்லப்பட்ட, விதவைகளாக்கப்பட்ட, அநாதைகளாக்கப்பட்ட அனைத்து மக்களுக்காகவும்' என்ற முழக்கம் வந்தது. எறிந்தவர் ஈராக்கின் ஊடகவியலாளர் முன்டசார் அல் சைதி. தனது ஏகாதிபத்திய போர் வெறிக்காக செருப்படி வாங்கிய முதல் அமெரிக்க அதிபர் என்ற பெருமையைப் பெற்றார் ஜார்ஜ் புஷ். ஈராக்கின் மக்களைக் கொன்று குவித்த ஏகாதிபத்தியம், மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுபோல் அம்பலப்பட்டு நின்றது.

அதைப் போன்றதொரு நிகழ்வு தற்போது தமிழக மண்ணிலும் நடைபெற்றுள்ளது. தமிழ் அகதிகள் குறித்த கருத்தரங்கில் கலந்து கொள்ள வந்த இனப்படுகொலை கூட்டாளி எம்.கே.நாராயணின் மீது செருப்பால் அடித்தார் புதுக்கோட்டையைச் சேர்ந்த பிரபாகரன் என்ற தோழர்.

எப்போதுமே தங்களை Moderatorகளாக காட்டிக் கொள்ள விரும்புகிற சிலர் எம்.கே நாராயணனை தோழர் பிரபாகரன் செருப்பால் அவமானப்படுத்தியதை தவறு என்றும், அதைக் கண்டிக்கிறோம் என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஒரு படி மேலே போய் மதவெறி கும்பல் நடத்துகிற தாக்குதலுக்கும் இதற்கும் என்ன வித்தியாசம் என்றெல்லாம் பேசுகிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட சமூக மக்களின் மீது வெறுப்பினை உமிழ்வதற்காக நடத்தப்படுகிற பாசிச தாக்குதலுக்கும், அதிகார வர்க்கத்துடன் சேர்ந்து கொலைகளை செய்துவிட்டு, இன்னும் கொலைகளை செய்வதற்கு ஆயிரம் யானைகள் பாதுகாப்புடன் வலம் வந்து, மக்களை ஒடுக்கும் அதிகாரிகள் மீது எளிய மனிதர்கள் காட்டுகிற எதிர்ப்பிற்கும் இலட்சம் வேறுபாடுகள் உண்டு.

இந்த இரண்டையும் ஒரே தட்டில் வைத்துப் பார்ப்பது மேலோட்டமான வரலாற்றுப் பிழை. செருப்பால் அடிப்பது என்பதையும், சப்பாத்தைக் கழட்டி வீசுவதையும் தாக்குதல் நோக்கில் வகைப்படுத்துவதே முதலில் தவறானது.

அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு அயோக்கிய கொலைகாரனை செருப்பால் அவமானப்படுத்துவது என்பது அவனை, அவன் செய்த குற்றத்தினை, அவனது அதிகார எல்லைகளை மீறி அனைத்து மக்களுக்கும் அம்பலப்படுத்துகிற எளிய மக்களுக்கான ஓர் எளிமையான மற்றும் வன்முறையற்ற ஓர் ஆயுதம்.

### *எம்.கே.நாராயணனுக்கும், இந்து ராமுக்கும் ஏன் இந்த எதிர்ப்பு ?*

கே.நாராயணன் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும், ஐபி எனும் உளவுத் துறையின் இயக்குநராகவும் இருந்தவர். இலங்கையின் இன அழிப்பு போருக்கு இந்தியாவிலிருந்து அனைத்து உதவிகளையும் செய்து, இறுதி யுத்தத்தின் நகர்வுகளை நேரடியாகக் கண்காணித்து தமிழர்களை அழிக்க அனைத்து வேலைகளையும் செய்தவர்.

இலங்கை அரசின் துணையுடன் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழினப் படுகொலையை மறைத்து பொய் செய்திகளை பரப்பி வருகிறார்கள் தி இந்து பத்திரிக்கையும், என்.ராமும்.

இந்த எம்.கே.நாராயணனும், இந்து ராமும் இணைந்து தமிழ் அகதிகளை இலங்கைக்கே திருப்பி அனுப்புவதற்கான சதித்திட்டத்தினை சென்னையில் நேற்று (04-11-2015) நடத்தினர். அந்தக் கூட்டத்தில்தான் எம்.கே.நாராயணனின் உண்மை முகத்தினை அம்பலப்படுத்த தனது செருப்பினை பயன்படுத்தினார் பிரபாகரன்.

எம்.கே.நாராயணனை இலங்கையை அலசும் வல்லுநராகவும், பிரம்மாண்ட நாயகனாகவும் சித்தரித்த தேசத்தின் முன், இன்று அவனது பிம்பங்கள் உடைபட்டு அம்பலப்பட்டு நிற்கிறது. வாய்கள் மூடப்பட்டு, வாயில்கள் அடைக்கப்பட்ட எளிய மக்களின் அறம் சார்ந்த கோபம் இப்படித்தான் வெளிப்படும். இது வரலாறு நெடுகிலும் அனைத்து சமூகங்களிலும் நிகழ்ந்துள்ளது.



ஜார்ஜ் புஷ் முதல் ப.சிதம்பரம் வரை இப்படியான நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

ஜார்ஜ் புஷ்ஷை நோக்கி காலணியை வீசியவர் ஓர் ஊடகவியலாளர். ப.சிதம்பரத்தின் மீது காலணியை வீசியவரும் ஓர் ஊடகவியலாளர். தங்கள் செய்தியை பொதுமக்களிடம் சென்று சேர்க்கும் ஊடகவியலாளர்களே, அயோக்கியர்களை அம்பலப்படுத்தும் உரிமை இல்லாமல் இப்படித்தான் அம்பலப்படுத்தி எதிர்ப்பைக் காட்டும் நிலையில் இருக்கிறார்கள். அப்படியென்றால் சாதாரண மனிதரான பிரபாகரனிடம் இவர்கள் என்ன வன்மத்தை அல்லது வன்முறையைக் கண்டுவிட்டார்கள்? கடந்த 2008ஆம் ஆண்டிலிருந்து மட்டுமே இப்படியான 50க்கும் மேற்பட்ட சம்பவங்கள் உலகம் முழுதும் நடைபெற்றுள்ளன. இவை சுய திருப்திக்காகவோ, தங்கள் வெறியைத் தீர்த்துக் கொள்வதற்காகவோ நடக்கிற நிகழ்வுகள் அல்ல. தங்களிடமிருக்கும் ஒரே வாய்ப்பினை பயன்படுத்தி ஓர் அதிகார யானையை அம்பலப்படுத்தும் அறம்.

எளியவர்களின் கைகளும், வாய்களும் கட்டப்பட, இந்த சமூகத்தின் அறிவுசீவி வர்க்கம் அதிகார வர்க்கத்துடன் சேர்ந்து கும்மாளமடிக்கும் சூழலில் ஓர் எளியவன் தனது செய்தியை உலகுக்குத் தெரிவிக்க ஒன்று அவன் தீக்கிரையாகவோ அல்லது இப்படியான செயல்களிலோ இறங்கும் நிலைக்கோ தள்ளப்படுகிறான். அதற்கு இந்திய அறிவுசீவி வர்க்கத்தின் அழுக்கு வரலாறுதான் காரணமேயொழிய, மக்களின் மன ஓட்டங்கள் மட்டுமல்ல. ஒரு பலம் பொருந்திய ராணுவ டேங்கியை நோக்கி ஒரு சாதாரண மக்கள் சமூகம் கல்லெறிவதை எப்படி பாசிசத்தில் வகைப்படுத்த முடியும்?

மீண்டும் அறிவுசீவி சமூகத்தினையும், அதிகார வர்க்கத்தினையும் பாதுகாத்து மக்கள் சமூகத்தின் மீது குற்றச்சாட்டினை முன்வைத்தல் என்பது இன்னும் பாரிய விளைவுகளைத்தான் ஏற்படுத்துமேயொழிய, மாற்றத்தினை ஏற்படுத்த உதவாது.

காலில் போடும் செருப்பினை கையில் தூக்கி நடக்கச் சொன்னவர்களின் ஆதிக்க மனநிலையை வரலாறு நெடுகிலும் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது செருப்பு எனும் ஆயுதம்.

*- விவேகானந்தன், மே17 இயக்கம்*

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்

## தீவிரவாதம் யாருக்கு எதிராக ?

ஒரு காலத்தில் ஊழல் உலகளாவியது என்று சொல்வார்கள். இன்று தீவிரவாதமும் அந்த இடத்தைப் பிடித்து விட்டது. தீவிரவாதம் தினந்தோறும் நாம் காணும் அன்றாட நிகழ்ச்சி ஆகி விட்டது.

தங்கள் மதத்தின் பெயராலும், சமூகத்தின் பெயராலும், உரிமைகளின் பெயராலும், கோரிக்கைகளின் பெயராலும், இழைக்கப்படும் அநீதியின் பெயராலும் இன்று தீவிரவாதம் ராஜநடை போடுகிறது. உண்மையில் யாருக்கு எதிராக தீவிரவாதம் நடைபெறுகிறதோ அவர்கள் பெரிதாக பாதிக்கப்படுகிறார்களோ இல்லையோ அப்பாவி ஜனங்கள் பல்லாயிரம் மடங்கு பாதிக்கப்படுகிறார்கள் என்பது தான் கசப்பான உண்மை.

ஒரு இடத்தில் வெடிகுண்டு வெடிக்கும் போது இறக்கும் அப்பாவி ஜனங்கள் எத்தனை பேர்? படுகாயம் அடையும் பரிதாபத்திற்குரிய நபர்கள் எத்தனை பேர்? இந்த எண்ணிக்கையைப் பத்திரிக்கைகளில் படிக்கிறோம். இதன் காரணாமாக வாழ்க்கையே திசைமாறி சீர்குலைந்து போகும் குடும்பத்தினர் பற்றி யார் சொல்கிறார்கள்? யார் கவலைப்படுகிறார்கள்?

அரசியல்வாதிகள் மரணத்திற்கு இவ்வளவு, படுகாயத்திற்கு இவ்வளவு என்று ஒரு தொகை நிர்ணயித்து தந்து கைகழுவி விடுகிறார்கள். அந்தப் பணம் இறந்த உறவுக்கு ஈடாகுமா? அந்த மனிதர்கள் இருந்து செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யுமா? இழந்த உறுப்புக்கும், ஊனத்துடன் தொடர்ந்து வாழும் வாழ்க்கைக்கும் ஈடாகுமா? அந்த மனிதர்களைச் சார்ந்திருந்த குடும்பத்தாரின் துக்கத்தையும், இழப்புகளையும் தீவிரவாதிகள் முழுமையாக அறிவார்களா? அவர்கள் மனசாட்சி ஏற்றுக் கொள்ளுமா?

பெரும்பாலான தீவிரவாத நடவடிக்கைகள் அரசியல்வாதிகளுக்கு எதிராகத் தான் நடக்கின்றன. ஆனால் பலத்த பாதுகாப்பு வளையத்தில் இருக்கும் அந்த அரசியல்வாதிகள் பாதிக்கப்படுவது அபூர்வம். அன்றாட வாழ்க்கையே போராட்டமாக இருக்கும் அப்பாவி மக்கள் தான் உண்மையில் அதிகம் பலியாகிறார்கள். அந்த அப்பாவி மக்களும் அவர்கள் குடும்பங்களும் செய்த தவறு தான் என்ன? தீவிரவாதிகளின் எந்த சித்தாந்தத்திற்கு அவர்கள் எதிராக இருந்திருக்கிறார்கள்? தங்கள் தினசரி வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பற்றியல்லாது வேறு சிந்தனைக்கே நேரமில்லாத அந்த அப்பாவிகளைப் பலி வாங்குவது என்ன நியாயம்.

எல்லா மதங்களும் ஏழை எளிய மக்களுக்குத் தீங்கு செய்வதை மிகப்பெரிய பாவமாகவே கூறுகின்றன. எனவே மதத்தின் பெயரால் நடக்கும் தீவிரவாதத்திற்கு எந்த மதமும் அங்கீகாரம் அளிப்பதாகக் கூற முடியாது. உரிமை, நீதி, கோரிக்கைகளின் அடிப்படையில் தீவிரவாதம் செய்யப்படுவதானால் சம்பந்தமில்லாத அப்பாவி மக்களுக்கு இழைக்கும் இந்த மிகப் பெரிய அநீதியை என்ன சொல்லியும் நியாயப்படுத்த முடியாது.

உண்மையிலேயே ஒருவருக்கு சார்ந்திருக்கும் மதம், சமூகம், மொழி, ஜாதி ஆகியவற்றில் அக்கறை இருக்குமானால் அந்தந்த மக்களுக்காக ஆக்கபூர்வமாக ஏதாவது செய்வது தான் சிறந்தது. அவர்கள் வாழ்க்கை மேம்பட உழைப்பது அவசியம். அதற்குத் தான் மன உறுதி அதிகம் தேவை. உழைப்பும், சக்தியும் அதிகம் தேவை. அப்படி செய்யும் போது தான் ஒருவர் அக்கறை காட்டும் மனிதர்களின் நிரந்தர வளர்ச்சிக்கு பாதை வகுத்தது போல ஆகும்.

அதை விட்டு விட்டு தீவிரவாதத்தில் ஈடுபட்டால் பல அப்பாவிகளுக்கு ஒருவன் துன்பம் தரலாமே ஒழிய அவன் அக்கறை காட்டுவதாக நினைக்கும் மக்களுக்கு எந்த நன்மையையும் ஏற்படுத்த முடியாது. உயிரை எடுப்பதும், உயிரை விடுவதும் பிரமாதமான விஷயமல்ல. சமூகத்திற்கு உபயோகமாக வாழ்வதும், உபயோகமாக இருப்பதுமே சிறப்பு.

எந்த தீவிரவாதியும் அன்பினால் உருவாவதில்லை. வெறுப்பினாலேயே உருவாகிறான். வெறுப்பு தான் அவன் சக்திகளையும், அறிவையும் இயக்கும் சக்தியாக இருக்கிறது. தான் சார்ந்திருக்கும் சாரார் மீதுள்ள அன்பினால் அவன் உந்தப்படுவதற்குப் பதிலாக எதிர் சாரார் மேலுள்ள வெறுப்பினாலேயே உந்தப்படுகிறான். தான் சார்ந்த மக்களுக்கு நல்லது செய்வதற்குப் பதிலாக எதிரணிக்கு தீங்கு விளைவிக்கவே முற்படுகிறான். வெறுப்பை அடிப்படையாகக் கொண்ட எந்த செயலும் எவருக்கும் நன்மையை ஏற்படுத்தி விட முடியாது. அவனுடைய செயலை வைத்து அவன் சார்ந்த மக்களையே குற்றப்படுத்த முனையும் முட்டாள்தனத்தை உலகம் செய்வதால் அவன் தான் சார்ந்த மக்களுக்கும் தீங்கே செய்தவனாகிறான்.

எனவே தீவிரவாதத்தில் ஈடுபடுபவர்களும், அதை ஆதரிப்பவர்களும், நியாயப்படுத்த முனைபவர்களும் இந்தத் தீவிரவாதம் யாருக்கு எதிராக? இதனால் உண்மையில் பாதிக்கப்படுவது யார் என்ற கேள்வியை ஆறறிவு படைத்த மனிதர்கள் என்ற அடிப்படையில் தங்களுக்குள் கேட்டுக் கொள்வது தர்மமாகும்.

*- என்.கணேசன்*

# இராஜதந்திரிகள் வெளியிடும் கருத்துகள் அல்லது சாத்தான்கள் ஓதும் வேதம் பற்றியது




**கோபி**
*ஒரு பேப்பர்*

கடந்தவாரம் லண்டன் பல்கலைக்கழகத்தின் ஆசிய, ஆபிரிக்க கற்கை நெறிகளுக்கான கல்லூரியில் (The School of Oriental and African Studies - SOAS) பிபிசி வானொலியில் பணியாற்றிய மார்க் ஸ்லேற்றர் என்ற ஊடகவியலாளரால் இலங்கைத் தீவில் நோர்வேயின் சமாதான முயற்சிகள் பற்றிய 'To End A Civil War' என்ற தலைப்பிலான நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. நோர்வேயின் முன்னாள் வெளிநாட்டு அபிவிருத்தித்துறை அமைச்சரும், பேச்சுவார்த்தைகளில் அனுசரணையாளராகச் செயற்பட்டவருமான எரிக்சொல்ஹெய்ம் இவ்வாறானதொரு நூலை எழுதிவருவதாகவும், இவ்வருடம் அந்நூல் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் மார்க் ஸ்லேற்றரின் மேற்படி தலைப்பிலான நூல் வெளிவந்திருக்கிறது. இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் பெரும்பகுதியானவை சொல்ஹெய்மிடமிருந்து பெறப்பட்டதாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளமையால் இதுவே அவர் எழுத விருப்பதாக முன்னர் குறிப்பிடப்பட்ட நூல் எனக் கருத இடமுண்டு. இந்நூல் பற்றிய எனது விமர்சனத்தை பிறிதொரு நாளுக்கு வைத்துவிட்டு இந்த நிகழ்வில் உரையாற்றியவர்கள் வெளியிட்ட கருத்துகளைப்பற்றிப் பார்ப்போம்.

மேற்படி நிகழ்ச்சியில் எரிக் சொல்ஹெய்ம், விதார் ஹெல்கிசன் ஆகியோருடன் மேற்படி கல்லூரியில் பன்னாட்டு உறவுகள் கற்கை நெறி விரிவுரையாளராகப் பணியாற்றும் கலாநிதி சுதாகரன் நடராஜாவும் உரையாற்றினார். முன்னைய இருவரும் நோர்வேயின் இராஜதந்திரிகளாக சமாதான முயற்சிகளில் பங்குபற்றியதுபோன்று, தமிழர் தரப்பில் பேச்சுவார்த்தைக்குழுவில் முதன்மைப் பங்குவகித்த தேசத்தின்குரல் அன்ரன் பாலசிங்கத்திற்கு உதவியாக சுதாகரன் செயற்பட்டிருந்தார். பிரித்தானியாவுக்கான சிறிலங்காவின் பதில் தூதுவர் சானக தல்பஹேவாவின் பெயரும் உரையாற்றுபவர்களின் பட்டியலில் காணப்பட்ட போதிலும் அவர் கலந்து கொள்ளவில்லை. உரையாற்றியவர்களை வைத்துப் பார்க்கையில் இது வெறுமனே ஒரு நூல் வெளியிட்டு நிகழ்ச்சி என்பதற்கப்பால் இங்கு வெளியிடப்படும் கருத்துகள் இலங்கைத் தீவின் அரசியல் விடயங்களில் அக்கறை கொண்டவர்களுக்களைச் சென்றடைய வேண்டும் என்ற முனைப்புக் காட்டப்பட்டமை தெரிகிறது. இந்நிகழ்ச்சி பற்றிய விளம்பரத்தினை ***ஒரு பேப்பர்*** ல் பிரசுரிப்பது தொடர்பாக விசாரிக்கப்பட்டதாக ***ஒரு பேப்பர்*** ன் விளம்பரப்பிரிவினர் தெரிவித்தனர்.

சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை பரிசாக வழங்கப்போவதில்லை எனவும் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் போராடியே பெறவேண்டும் எனவும், ஆயுதவழியிலின்றி, உண்ணா நிலைப் போராட்டம் போன்ற மக்கள் போராட்டங்களை அவர்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்த கருத்துகளை தமிழ் ஊடகங்கள் பலவும் முக்கியத்துவம் கொடுத்துச் செய்தியாக வெளியிட்டிருந்தன. இவ்றைக் கேட்பவர்கள் 'திரும்பவும் முதலிலிருந்தா' எனச் சலப்பபடையக்கூடும். சொல்ஹெய்ம் இக்கருத்துகளை தெரிவித்திருந்தார் எனினும், இந்நிகழ்ச்சியில் அவர் வெளியிட்ட கருத்துகளின் முழுமையையும் அல்லது முதன்மையான விடயங்களைத்தானும் பிரசுரிப்பதை விடுத்து, தமிழ் மக்களுக்கு ஏற்புடைய ஒரு கருத்தை மாத்திரம் பிரசுரிப்பது எரிக் சொல்ஹெய்ம் போன்றவர்களின் உண்மையான நோக்கத்தை மறைப்பதாகவே அமைகிறது.

## அமைதி வீரர்களும், இடைஞ்சலாக இருந்தவர்கள்

நோர்வேயின் சமாதான முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்ததுமல்லாமல், இந்த நூற்றாண்டின் மாபெரும் மனிதஅவலங்களில் ஒன்றுக்கு வழிகோலுவதாக அது அமைந்தது. இதற்கான பொறுப்பினை அடுத்தவர்களின் தலையில் போட்டுவிட்டு இலகுவில் இவர்களால் கடந்து செல்ல முடிகிறது என்பது சர்வதே இராஜதந்திர செயன்முறையின் பொறுப்பற்ற தன்மையையே காட்டுகிறது.

சமாதான முயற்சிகள் வெற்றிபெறாமைக்கு அம்முயற்சிகளுக்கு இடைஞ்சலாக இருந்தவர்களே காரணம் என சொல்ஹெய்மும், ஹெல்கிசனும் தமது உரைகளிலும். கேள்வி நேரத்தில் அவையிலிருந்துகேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது குறிப்பிட்டனர். தமிழீழக் கோரிக்கையிலிருந்து விட்டு விலகாதிருந்த திரு. பிரபாகரன் ஒரு புறமும் அப்போதைய பிரதமர் இரணில் விக்கிரமசிங்கவிற்கும், ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையிலான மோதலும் சமாதானத்திற்கு தடையாக இருந்ததாகத் இவர்கள் தெரிவித்தார்கள். இவ்விடயம் பற்றி தனதுரையில் சுட்டிக்காட்டிய சுதாகரன் நடராஜா இப்பிரச்சனையை வெறுமனே ஒரு ஆயுத இயக்கத்திற்கும், சிங்களப் பெரும்பான்மை அரசாங்கத்திற்கும் இடையிலான பிரச்சனையாகப் குறுக்கிப் பார்க்கப்படுகிறதே தவிர, ஆழமாக வேருன்றியிருக்கும் சிங்கள பௌத்த பேரினவாதம் பற்றிக் கணக்கில் எடுக்கப்படவில்லை எனக்குற்றஞ்சாட்டினார்.

சிங்களத்தரப்பில் இரணில் விக்கிரமசிங்கவும், தமிழர் தரப்பில் அன்ரன் பாலசிங்கமும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அமைதி வீரர்கள் எனவும் அவர்கள் சமாதானம் ஏற்படுத்துவதில் உண்மையாக உழைத்ததாகவும் நோர்வேஜியர்கள் இருவரும் தெரிவித்தனர். ரணில் விக்கிரமசிங்க ஒரு நரி எனவும் அவர் விடுதலைப்புலிகளை ஒரு சர்வதேச வலைப்பின்னலுக்குள் விழ வைப்பதற்கு முயற்சித்து வந்ததாகவும் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டியதை வைத்துப்பார்க்கையில், இரணில் விக்கிரமசிங்கவிற்கு சமாதானத்தை ஏற்படுத்தவதில் உள்ள ஆர்வத்தைப் எவராலும் புரிந்து கொள்ள முடியும். தமது கைப்பிள்ளை போன்று செயற்பட்ட ஒருவரை அமைதிக்கான வீரராக இவர்கள் காட்டுகிறார்களே தவிர இதில் உண்மை எதுவுமில்லை. அன்றைய நிகழ்ச்சியிலேயே கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் இரணில் விக்கிரமசிங்க ஒரு புனிதர் எனத் தான் நம்பவில்லை என சொல்ஹெய்ம் கூறியிருந்தார்.

## படைவலுச் சமநிலை

2008ம் ஆண்டின் நடுப்பகுதி வரை போரில் இருதரப்பும் வெல்ல முடியாது என்ற நிலையே காணப்பட்டதாக இந்தியா தனது புலனாய்வுத் தகவல்கள் மூலமாகத் தமக்கு அறிவித்து வந்ததாகவும், ஆனால் 2008ம் ஆண்டு ஒகஸ்ட் மாதமளவில் போரில் சிறிலங்காவால் வெல்ல முடியும் என்ற நிலை ஏற்பட்டதாக, அப்போது இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவிருந்த எம். கே. நாராயணன் தமக்குத் தெரிவித்ததாகவும் கூறிய எரிக் சொல்ஹெய்ம், அதன் பின்னர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி சுருங்கிச் சென்றதாகவும் குறிப்பிட்டார். புலனாய்வுத் தகவல்களை விடவும், தாக்குதல் வியூகங்கள் உட்பட பல்வேறு இராணுவ உதவிகளை சிறிலங்கா அரசாங்கத்திற்கு இந்தியா செய்து வந்தது தெரிந்ததே. ஆனால் பேச்சுவார்த்தைகளின் ஆரம்பத்தில் காணப்பட்ட படைவலுச் சமநிலை மாற்றமடைவதற்கு வெளிச்சக்திகள், குறிப்பாக இணைத்தலைமை நாடுகள் எவ்வாறு பங்களிப்புச்செய்தன என்பதுபற்றி சமாதானத்திற்கு அனுசரணையளாராக வந்தவர்கள் எதுவும் தெரிவிக்கவில்லை. சிறிலங்கா அரசாங்கம் தமது ஆயுதப்படைகளின் ஆளணியை அதிகரித்தமை, படைக்கலங்களை வாங்கிக் குவித்தமை பற்றியோ விடுதலைப்புலிகளின் கப்பல்களை தாக்கியளிக்கப்பட்டமைக்கு வெளிச்சக்திகள் உதவியமை பற்றியோ சமாதான அனுசரணையாளர்கள் அறிந்திருக்கவில்லை என யாரும் கருதிவிடமுடியாது.

## சரணடைவுத் திட்டம்

2009ம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, ஐ.நா., சர்வதேச்ச் செஞ்சிலுவைசங்கம் ஆகியவற்றுடன் இணைந்து சரணடைவுத் திட்டமொன்றை நோர்வேத் தரப்பினர் விடுதலைப்புலிகளிடம் முன்வைத்ததாக சொல்ஹெய்ம் குறிப்பிட்டார். இத்திட்டத்தின்படி, விடுதலைப்புலிகள் சரணடையும் பட்சத்தில், தலைவர் பிரபாகரன், புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டமான் ஆகியோரைத் தவிர மற்றையவர்களை பாதுகாப்பதற்கு மேற்படி தரப்புகள் உடன்பட்டதாகவும் தெரிவித்த சொல்ஹெய்ம், தலைவர் அவர்களையும், பொட்டமானையும் பாதுகாப்பதற்கு இந்தியா இணங்கவில்லை எனவும் கூறினார். ஆனால் இத்திட்டத்திற்கு திரு.பிரபாகரன் உடன்படவில்லை எனவும் அவ்வாறு அவர் இணங்கியிருந்தால், பல ஆயிரம் உயிர்களைப் பாதுகாத்திருக்கலாம் எனவும் கூறினார்.

சயனைட் குப்பிகளைக் கட்டியிருக்கும் தற்கொடைக்குத் துணிந்த போராளிகளான விடுதலைப்புலிகள் இவ்வாறான திட்டத்திற்கு உடன்பட்டிருப்பதற்கான சாத்தியமில்லை. அதிலும் உலகத் தமிழ் மக்களினால் போற்றப்படும் ஒரு தலைவரை காவு கொடுக்கும் இத்திட்டம் இயக்கத்தில் மேலும் பிளவுகளை உருவாக்கி அதனை மேலும் பலவீனப்படுத்துவதற்கான உத்தியாகவே பார்க்கப்பட்டிருக்கும். ஏற்கனவே நைஜீரிய பயபிரா போராட்டத்தின் சரணடைவிலிருந்து கற்ற பாடங்களுக்குப் பின்னரும் இவ்வாறான சரணடைவிற்கு விடுதலைப்புலிகள் இணங்கியிருக்க முடியாது. மாறாக சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராக வந்தவர்கள் சரணைவுத் திட்டத்தினை முன்வைப்பது அவர்களது முயற்சி எவ்விதத்திலாவது யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதாகவே (To End a Civil War) இருந்தது என பதனை வெளிப்படுத்துகிறது. விடுதலைப்புலிகள் சரணடைவுத் திட்டத்திற்கு உடன்பட்டிருக்கும் பட்சத்தில் அவர்கள் வரித்துக்கொண்டிருந்த அரசியல் இலக்கினை கைவிட்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் தனித்து ஆயுதங்களை மௌனித்ததாக அறிவித்ததன் மூலம் அரசியல் இலக்கினை அவர்கள் கைவிடவில்லை. இதுவே இன்றைக்கும் விடுதலைப்புலிகள் மீதான தடைநீடிக்கப்படுவதற்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது.

## புலம்பெயர்தமிழருக்கு அறிவுரை

இறுதியாக, புலம் பெயர் தமிழர்களே உலகில் வெற்றிகரமான டயஸ்போறா என அவர்களுக்கு 'ஜஸ்' வைத்த சொல்ஹெய்ம், அவர்களை இலங்கைக்குச் சென்று முதலீடு செய்யுமாறு அறிவுரை வழங்கினார். வெற்றிகரமான டயஸ்போறாவுக்கு உலகில் எங்கு சென்று முதலீடு செய்தால் இலாபம் ஈட்டமுடியும் என்பதனை நோர்வீஜிய இராஜதந்திரி ஒருவர் வந்து ஆலோசனைசொல்ல வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால் தமிழ்மக்கள் விரும்புகிற நிரந்தர அரசியல்த் தீர்வை அவர்களே போராடிப் பெற்றுக்கொள்ள வேண்டுமே தவிர நோர்விஜியர்களோ, அமெரிக்கர்களோ அல்லது வேறெந்த நாட்டினரோ பெற்றுக்கொடுக்கப் போவதில்லை என்ற உண்மையை 'வெற்றிகரமான' தமிழ் அலைந்துழல்வுச் சமூகம் கற்பூரம் போல் பற்றிக் கொள்ளுமா?

*கருத்துக்களுக்கு @orupaper - facebook.com/orupaper*

**ஒரு பேப்பர்**
கிடைக்குமிடங்கள்

**New Malden**
Ayngaran ............... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ................ 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House ........... 020 8767 8585
Selvarajah Gold house 020 8767 3795
Niru Con.Store ........ 020 8672 3200
Ayngaran .............. 020 8540 1500
Suvai Aruvi............. 020 8543 6266
Adchaya .............. 020 8540 8192

**Croydon**
Best Foods............. 020 8684 6269
Haran Bros............. 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video........... 020 8664 8351
Spice Land............. 020 8667 1700

**Lewisham**
Chandra ................. 020 8333 8680
Eelam Shop ........... 020 8690 6545
Katpagam .............. 020 8694 8810
AJ Video ................ 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS Supermarket ... 020 8297 9432
Best Food .............. 020 8692 9811

**Eastham**
Seelans.................. 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food .............. 020 8552 9578
Saiva Munneta Sangam 02085144732
Akilan Enterprise .... 020 8548 0033
Anjappar ................ 020 8552 1155

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan ................... 020 8514 1744
Angels ................... 020 8553 0490
Sri store ltd ........... 020 8553 7737

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas..................... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans .............. 020 7609 1912
Prabas .................. 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
North Harrow C&C .. 020 8863 6160
Prabhas ................ 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.............. 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods.............. 020 8900 0100
Vahizan Disc .......... 020 8795 0648

**Ealing**
Amman kovil........... 020 8810 0835

**Greenford**
Ambiha .................. 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Abi Fast Food ......... 0208 813 9494
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C ......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret .......... 020 8571 4434

## கிறிஸ்மஸ் பொருட்களை UK யிலிருந்து இலங்கைக்கு கப்பல் மூலம் அனுப்ப 50% விலைக் கழிவு




**உங்கள் பொருட்களை எங்களிடம் கையளிக்குமாறு உங்கள் உறவினர்கள், நண்பர்களிடம் கூறுங்கள்!**

**நாமே உங்கள் வீடு வந்து உங்கள் பொருட்களைப் பெற்றுக்கொள்வோம்.**

**AGILOGIX SHIPPING** connecting the world

Sri Lanka 0711 551 551 | info@agilogix.co.uk
UK +44 (0)20 3371 1272 | sales@agilogix.co.uk

---

## வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

MERLYN M · KUDOS · hansgrohe · Hudson Reed

# JSN HEAT SUPPLIES LTD

WIDE RANGE OF BATHROOMS, SHOWERS & KITCHENS

Ideal Standard · GROHE · Armitage Shanks

COMPACT RADIATOR PANELS
Genuine 80% DISCOUNT to trade customers

BEST PRICES AROUND ON VARIOUS DIFFERENT BOILERS AND MEGAFLOW

FLEXIBLE TILE ADHESIVE
with Life time guarantee
£14 inc. VAT

550 CABINET WITH BASIN + FREE MIXER TAP
£85 inc. VAT
450 CABINET WITH BASIN + FREE MIXER TAP
£75 inc. VAT
FREE

FREE
BATHROOM SET
with 550 Cabinet with basin
+ FREE MIXER TAP
£260 inc. VAT

SPECIAL OFFER
Thermostatic 2 way outlet
LIMITED OFFER
£149 inc. VAT
£129 inc. VAT

GROHE
£201.00 inc. VAT
G1000 COSMO BSM WITH NEW TEMPESTA

WC INC. SOFT CLOSE SEAT
£65 inc. VAT

LED LAMP BULB
WITH FITTING FIRE-RATE DOWN LIGHT
Starts from £10 inc. VAT
2 YEAR Guarantee

BATHROOMS • SHOWERS • GRANITE TILES • MARBLE TILES • PORCELAIN TILES ALL AT DISCOUNT PRICES

162 PINNER ROAD, HARROW HA1 4JJ TEL: **020 8427 0553**

# பிரிகேடியர் சு.ப.தமிழ்செல்வனுக்கு

## ஓர் நினைவுக் குறிப்பு..



நினைவுப்பகிர்வு :-

**கு.கவியழகன்.**

இலகுவில் வெளியாரினால் புரிந்துகொள்ள முடியாத புலிகள் இயக்கத்தின் அரசியல் தலைமைப் பாத்திரத்தை வகித்த ஓர் ஆளுமையை ஒரு பக்கத்திற்குள் எழுதிப் புரியவைத்து விடலாம் என்று தோன்றவில்லை.

ஆயினும், ஒரு கோணத்துப் பார்வையில், துருத்தித் தெரியும் அவரது ஆளுமை அம்சத்தை புள்ளிகளிடுவதன் மூலம்ஒரு சித்திரம் தோன்றலாம். அதில் அந்தச்சிரித்த முகத்தோன் உயிர் பெற்றும் வரலாம்.

கல்லறைக்குப் போகுமுன் வணக்கம் செலுத்த வருபவர்களுக்காக காத்திருக்கிறது திருவுடல். அருகே ஐம்பது வயதைத் தாண்டிய அவரது மூத்த சகோதரன் யாரும் அறியா நேரங்களில் அவ்வப்போது அழுகிறார்.

நினைவுகள் எழுந்து இதயத்தில் எங்கோ இருக்கும் ஈரத்தை இழுத்து வந்து கண்களால் கொட்டி விடுகிறது. அவர் சொன்னார், "சின்ன வயதில் எங்களது அப்பா இறந்து விட்டார். அதனால் குடும்பத்தில் வறுமை நிலவிற்று. நானே உழைக்கத் தொடங்கி குடும்பப் பாரத்தை சுமந்து இளையவர்களைப் படிப்பித்தேன். அதிக கண்டிப்புடன் சகோதரர்களை வளர்த்து வந்தேன். ஆனால், செல்வன் எந்த விடயத்திற்கும் தண்டிக்கப்படுவதில்லை. காரணம், தண்டிப்பதற்காக தடியைத் தூக்கும்போதெல்லாம் தன் தவறுக்கு தக்க காரணங்களை கற்பிக்கத் தொடங்கிவிடுவான். அதைக் கேட்டுவிட்டால் தண்டிப்பதற்கான நியாயம் பறிபோய் விடும்" என்று.

இந்திய அமைதிப்படையுடன் நடந்த யுத்தத்தில் ஒரு நாள் தென்மராட்சிப் பொறுப்பாளரான இவரது மறைமுக இடத்தை இராணுவத்தினர் சுற்றிவளைக்க வந்தனர். வெடிக்க வைக்கத் தயாராக கையில் குண்டுடன், வீதியின் இரு புறமும் வந்துகொண்டிருக்கும் இராணுவத்தினரின் நடுவால் தமிழ்ச்செல்வன் சைக்கிளில் கடந்தார் ஒவ்வொரு இராணுவத்தினரையும் பார்த்துச் சிரித்து தலையாட்டியவாறு. புன்னகையை ஆயுதமாக்கி அன்று முற்றுகையை உடைத்துக்கொண்டார்.

இன்னொரு நாள் அமைதிப்படையின் அப்பிரதேசத் தளபதி சடுதியாக இவரது அணியை சந்திக்க நேர்ந்ததும் அந்த இடத்தில் மோதலைத் தவிர்க்குமாறும் உரையாட விரும்புவதாகவும் அழைத்தான். தினேசுடன் (இவரது பழைய பெயர்) கதைக்க விரும்பும் அழைப்பை ஏற்று முன்வந்த இவர் அமைதிப்படைத் தளபதிக்குச் சொன்னார், "தினேஸ் நூற்றுக் கணக்கான போராளிகளுடன் வேறு ஒரு ஊருக்குப் போய்க் கொண்டிருக்கின்றார். உங்கள் செய்தியைச் சொல்லுங்கள் நான் அவரிடம் சொல்கிறேன்." என்று. தினேஸ் பற்றி அவனுக்கிருந்த பிரமையை தானே மேலும் பன்மடங்காக்கித் திரும்பினார்.

அந்தக் 'கோலியாத்' தளபதி தங்களை வீழ்த்தி வரும் அணியின் தலைவன் இந்தத் 'தாவீது' தான் என்று நம்பத் தயாரானமனநிலையில் இருக்கவில்லை. அவ்வளவு இளவயதும், சிறுவுருவமுமுடையவராக இருந்தார் அப்போது தமிழ்ச்செல்வன்.

சமயோசித புத்தி, நெருக்கடிச் சூழலை கையாளும் திறன், தன் மீதான நம்பிக்கை இதுதான் இளவயதில் மிளிரும் இயல்புகளாய் இருந்தன. இவை குறிக்கும் ஆளுமை என்னவெனில் தமிழ்ச்செல்வ்வன் ஒரு தந்திரி. இதைத்தான் இயக்கத்தின் வளமாக தலைவர் வளர்த்தெடுத்திருக்க வேண்டும்.

இந்த ஆளுமைதான் புலிகள் இயக்கத்தின் அரசியற்துறை தலைமைப் பாத்திரத்தை வகிக்க, அவருக்கு இயலுமையைத் தந்தது. புலிகள் இயக்கம் அரசியல் முதிர்ச்சி பெற்ற தொண்ணூறுகளின் (1993) ஆரம்பத்தில் இவர் அரசியற்துறையைப் பொறுப்பேற்றார். இராணுவத் தளபதியாக இருந்த ஒருவர் ஒரு அரசியற் பொறுப்புக்கு முகம் கொடுப்பது இலகுவானதல்ல. அதிலும் அவர் எதிர் கொண்ட காலம், இந்த விடுதலைப்போர் அடுத்தடுத்துநெருக்கடிகளைச் சந்தித்த காலம்.

சந்திரிகாவின் சமாதானப் பேச்சு, அடுத்து கடந்த நூற்றாண்டின் இறுதியில், இந்த உலகம் கண்ட மாபெரும் இடப்பெயர்வான யாழ்ப்பாண இடப்பெயர்வு 'ஐந்து இலட்சம் மக்களின் இடப்பெயர்வை' அதுவும் கோரமாக நடந்த யுத்தத்தின் இடப்பெயர்வை' அவர் முகாமைத்துவம் செய்த ஆற்றல் அசாத்தியமானது. இப்படியான இடப்பெயர்வுகளில் பிணி, வறுமை என்பவற்றாலும், கட்டுப்படுத்த முடியாத தொற்றுநோய்ப் பரவலாலும், ஆயிரக்கணக்கான உயிர்கள் அழிந்துபோவதுதான் சுகாதார நிபுணர்கள் கண்ட உலக அனுபவமாக இருந்தது. ஆனால், அத்தகைய கணிப்புக்களை பொய்யாக்கிய முகாமைத்துவம் ஒருபுறமும், மக்களுக்கேற்பட்ட மகா அவலத்தால் மக்கள் போராட்டத்தில் சலிப்புறுவதற்குப் பதிலாக, மக்களை எழுச்சியடைய வைத்து போராட்டத்திற்கு இளைஞர்களை அணிதிரட்டிய ஆற்றல் மறுபுறமுமாக அவரது ஆளுமை புதுமை படைத்தது.

இக்காலகட்டத்தில் போராட்டத்தில் உள்வாங்கப்படுவோரை மட்டுப்படுத்த வேண்டியளவிற்கு அது அமைந்தது. இதன் விளைவாகத்தான் ஓயாத அலைகள் - 01 வெற்றியின் மூலம் முல்லைத்தீவு விடுவிக்கப்பட்டது. புலிகள் ஒரு தீர்ந்துபோகாத சக்தி என்று நிரூபிக்கப்பட்டது. சர்வதேச கடற்போக்குவரத்துக்கான புலிகளின் வாசலாக முல்லைத்தீவு திறவுண்டது. பின்னாளில் வன்னி மீதான எதிரியின் முற்றுகை உள்ளடக்கத்தில் அர்த்தமிழந்ததும் இதனால்தான்.

வன்னிச்சமர் என்றுமில்லாத புதிய நெருக்கடியை இந்தப் போராட்டத்திற்குத் தந்தது. தொடர்ச்சியாக வருடக்கணக்கில் நீண்ட ஒரு சமராக அது இருந்தது. வன்னிக்காட்டில் தனித்து விடப்பட்ட புலிகள் மீதான இறுதி யுத்தமாக உலகளவில் இது பார்க்கப்பட்டது. வன்னியின் நிரந்தரவாசிகளைவிட அப்போது இடம்பெயர்ந்தவர்களே இங்கு பெரும்பான்மையினராக இருந்தனர். யுத்தம், முற்றுகை, பொருளாதாரத் தடை, யுத்தப் பின்னடைவுகள், ஊரின் மூலைமுடுக்கெங்கும் வரும் யுத்தத்தில் வீழ்ந்த உடல்கள் இவை எல்லாம் சேர்ந்து வறுமையும், பிணியும், பயமும், அவலமும் கொண்ட வாழ்வாக வன்னி மக்களின் சூழலை மாற்றியிருந்தது. நிச்சயமற்ற வாழ்வுக்குள் நாளாந்தம் மக்கள் திணறிக் கொண்டு இருக்கக்கூடிய காலம். இச்சூழல் தந்திருக்கக்கூடிய பரிசு என்னவென்றால் போராட்டத்திற்கு நிச்சயமானதும் முடிவானதுமான தோல்வியைத்தான். ஏனெனில் ஒரு விடுதலைப் போராட்டம் மக்களிலேயே ஆதாரப்பட்டு நிற்கிறது.

முப்பது வருடப் போராட்டத்திற்கு எழுந்த இந்த நெருக்கடிச் சூழலை, தலைவருக்குத் தோள் கொடுத்து தமிழ்ச்செல்வன் என்ற ஆளுமை கையாண்ட விதம், எதிரியின் எதிர்பார்ப்புக்களை முற்றிலும் எதிர்மறையாக புரட்டிப் போட்டது.

வந்த நெருக்கடியை நோக்கி அரசியற்துறையின் வல்லமை அனைத்தையும் திருப்பினார் தமிழ்ச்செல்வன். எல்லா அசாத்தியங்களையும் சாத்தியமாக்கும் தந்திரம் அவருக்கு வசப்பட்டது. செயல் ஒன்று புயலாகும் மையத்தில் நின்றார் அவர்.

மக்கள் தம் வாழ்வை ஏற்றுக்கொண்டு அதற்கு முகங்கொடுக்கத் தொடங்கினர். விடுதலைப் போரிலும் விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்திலும் நம்பிக்கை இழந்தனரல்லர். எதிரியின் மீது கோபமும், எதிரியை எதிர்கொள்வதற்கான திடமும் கொள்ளத் தொடங்கினர். வாழ்வின் அவலமோ நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமென்ற ஆவேசத்தை மக்களுக்குள் கொண்டுவந்தது. களத்தில் விழுகின்ற உடல்கள் நாளாந்தம் கல்லறைக்குப் போய்க்கொண்டேயிருந்தாலும் பாசறைக்குப் போகும் புதியவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து விடாமல் இருந்தது. இது, தான் ஏவிய யுத்தத்தில் தானே சிக்குண்டு எதிரியை காடுகளுக்குள் திணற வைத்தது. வன்னியின் ஊர்களின் ஓரத்து வெளிகளெங்கும் மக்கள் போர்ப்பயிற்சி பெறத் தொடங்கினர். தமிழ்ச்செல்வன் செய்த தவத்தின் பயனாய் எல்லா வன்னியர் கைகளிலும் வஜ்ஜிர ஆயுதம் முளைத்தது. மக்கள்படை திரண்டு புலிகளுக்குப் புது இரத்தம் பாய்ச்சியது. இறுதி யுத்தமென்று வந்தவர்கள் அதில் முழுதாய் தோற்றார்கள்.

வன்னி இயற்றிய இந்த இராணுவ அற்புதத்தால் உலகமே மூர்ச்சையாகிப் போனது. யுத்தத்திற்கு ஆதரவு கொடுத்து, ஆயுதங் கொடுத்து, ஆலோசனை கொடுத்து சிங்கள அரசின் அருகாய் இருந்த உலகம் அதைக் கைவிட்டு சமாதானத்திற்குத் திரும்புமாறு சந்திரிகா அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தது. மக்களுக்கு தீரா அவலத்தைச் சுமத்தி விடுதலைப்போரில் வெறுப்பும், சலிப்புமுறப் பண்ணி அடிபணிய வைக்கும் அரசாங்கத்தின் தந்திரத்தை தலைகீழாக மாற்றி அதன் அறுவடையை விடுதலைப் போராட்டத்திற்கு சம்பாதித்துத் தர தமிழ்ச்செல்வன் இயற்றிய தவமே மாதவம்.

'சமாதானம்' இது முன்பிருந்த சூழலுக்கு முற்றிலும் எதிர்மாறானது. எம்மை தோற்கடிக்கச் செய்யப்பட்ட இந்தச் சூழ்ச்சியின் வியூகம் வேறு. அபிவிருத்தி என்ற மாயை மூலம் மக்களை யுத்த மனப்பாங்கில் இருந்து விடுபடச் செய்வதற்கான வியூகம் இது. சர்வதேச சமாதானக் கற்கைகள் கண்டு பிடித்த கோட்பாடு என்னவெனில், யுத்தத்திற்கெதிரான மனப்பாங்கை அபிவிருத்தி என்ற கருத்தாக்கத்தின் மூலம் உருவாக்க முடியும் என்பதே.

சமாதானம் என்ற வியூகத்தின் அங்கமாக, அரங்காக அபிவிருத்தி என்ற நிகழ்ச்சி முன்னெடுக்கப்பட்டது. சர்வதேச சமாதானக் கற்கைகளின் இந்தக் கோட்பாடு புறந்தள்ளி விடக்கூடியதல்ல என்பது தெரியும். ஆயினும் அபிவிருத்தியை புறந்தள்ளி அல்லது தடுத்துவிடவும் முடியாது. அப்படிச் செய்யவும் கூடாது என்பதில் தமிழ்ச்செல்வன் உறுதியாக இருந்தார்.

உலகில் யாராலும், எங்கிருந்தாயினும் தமிழ் மக்களை நோக்கிக் கொண்டுவரப்படும் அபிவிருத்தியை வரவேற்று, உள்வாங்கி தொடர் யுத்தத்தால் மக்கள் பட்ட அவலத்திற்கு சிகிச்சையாக, புத்தூக்கமாக அதை மாற்றிப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவையிருந்தது. அதே நேரம் விடுதலைப்போராட்டத்தை தோற்கடித்து விடக்கூடிய சூழ்ச்சியாக இது உருவெடுக்க விடாமல் அதனிடமிருந்து தற்காக்க வேண்டியுமிருந்தது. இந்த இரண்டிற்குமிடையில் ஒரு சமன்பாட்டைக் கண்டறிந்து அதனை நிர்வகிப்பதற்கான கட்டமைப்புகளை உருவாக்கி அதை வெற்றிகரமாகக் கையாண்ட ஆளுமையே தமிழ்ச்செல்வன். தமிழ்ச்செல்வன் இயல்பிலேயே ஒரு தந்திரி.

அவரது ராஜதந்திரப் பணியில் சில புள்ளிகளை இடுவது இங்கு முக்கியமானது. சந்திரிகாவின் தீர்வுப்பொதி வெளியிடப்பட்ட காலத்தில் வன்னிக்கு வந்த தெற்கு ஊடகவியலாளர் ஒருவர் இவரைச் செவ்வி கண்ட போது எழுப்பிய கேள்வி, "நீங்கள் இந்தத் தீர்வுப்பொதியை ஏற்காதது, நீங்கள் சமாதான..

(தொடர்ச்சி 20ம் பக்கம்)

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

**Expert in Criminal Defence Services.**
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation
அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்
**Contractual Disputes**
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

**Immigration Law Specialists**
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction
**Civil Litigation**

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service
Community Legal Service
The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk

Emergency
079 4764 1876
079 1225 3418

# கார்த்திகை மாதமும் கல்லறைகளும்



**சுகி**
*(ஒரு பேப்பருக்காக)*

லண்டனில் ஒரு சுடலையின் வாசலில் நின்றுகொண்டு இருந்தேன். அது ஒரு குளிர்கால காலை நேரம், அத்தோடு வானமே திறந்தது போல மழை பெய்து கொண்டிருந்தது. ஊரில் பெண்கள் சுடலைக்கு போகக்கூடாது என்பர். ஒரே இனம் என்பதால் பெண்ணைப்பேய் பிடித்துவிடும் என்று அதற்கு என் நண்பன் விளக்கம் சொன்னான். மழையில் நனைந்தபடி வாசலை கடந்து தனியே நடக்கத் தொடங்கினேன். என்னைச் சுற்றி இறந்தவர்கள் புதைக்கப்பட்டிருந்தார்கள் என் கண்ணில் பட்ட முதலாவது கல்லறையில் 1885 என்று போடப்பட்டிருந்தது. தொழில்நுட்பத்தில் எத்தனையோ மாற்றங்கள் வந்தாலும? இறப்புப் பற்றிய மனிதனின் சிந்தனையில் அவ்வளவு மாற்றங்கள் வரவில்லை என்று எண்ணத் தோன்றியது. மழை என்பதாலோ என்னவோ ஒருவரும் இன்றி நான் தனிய, பரந்த, கண்ணுக்கெட்டிய தூரம்வரை விரிந்திருக்கும் கல்லறைகளில் நடுவே நின்றிருப்பது, எனது சிந்தனையை குவிய வைத்தது. இந்திய இராணுவ பிரச்சனையின் போது எங்கள் மாமா வீட்டு வாசலில் இராணுவம் சுடப்பட்டு இறந்தவரை அதிலேயே எரித்ததும், ஊரே மயானம் போன்று ஆள்அரவமின்றி இருந்ததும். பிறகு நிலமை சரிவந்து அவ்வீதியால் போகும் நேரம் எல்லாம் அன்நிலத்தில் இருந்த கருமை நிறம் எனக்கு அன்நிகழ்ச்சியை ஞாபகப்படுத்திக்கொண்டே இருந்தது.

நான் இப்போ அக்கல்லறைகளில் மத்திய பகுதியில் நின்றிருந்தேன். அழகான, அமைதியொன்று நிலவியது. மிகக்கவனமாக நிலத்தோடு நிலமாக இருந்த ஒரு கல்லறையின் மீதுமிதிக்காது நடந்தேன். எண்ணும்போது ஆச்சரியமாக இருந்தது மனிதர்கள் இருக்கும் போது கொடுக்காத மரியாதையையும், கரிசனத்தையும் ஏன் ஒருவர் இறந்தபிறகு கொடுக்கிறார்கள் என்று, இருக்கும் போது காட்டினால் அது அவர்களை சிலநேரம் இன்னும் கொஞ்ச நாளைக்கு இருக்க வைத்திருக்கும்.. சில, பளிச்சென்று, சின்ன ரோசாசெடியோடு அழகாக, சில கவனிப்பாரின்றி, மங்கி, கொஞ்சம் உடைந்து போய் இருந்தது. ஒருவேளை பராமரிக்கும் அன்பானவர்களும் இறந்துபோயிருக்கலாம். ஒன்று மட்டும் நிச்சயம் அவர்கள் இந்த நாட்டை விட்டு அகதியாக விரட்டப்பட்டிருக்க மாட்டார்கள்.

கல்லறைகளுக்கும் உயிர் உள்ளது. எமது மாவீரர் கல்லறைகளுக்கு ஊடாக நடக்கும் போது எமக்குள் நடக்கும் இரசாயண மாற்றத்தை விபரிப்பதற்கு வார்த்தைகள் இல்லை. இது உண்மையில் விந்தையிலும் விந்தைதான். கல்லறைகளுக்காக வாழும் மனிதர்களும் உள்ளார்கள். தனது ஒரே ஒரு மகன் விடுதலைப் போரில் மரணித்தபோது எனது சிறிய தாயும், தகப்பனும் அப்படித்தான் இருந்தார்கள். அவர்கள் வெளிநாடுவர சந்தர்ப்பம் இருந்தும் அவனது கல்லறைக்கு போய் அவனை காண்பதை வழக்கமாக்கிக் கொண்டார்கள். பின்பு 2009 மே 10ம் திகதி அடாத மழையிலும், சீறிலங்கா இராணுவம் விடாது அடித்த எறிகணைத்தாக்குதலில் முள்ளிவாய்காலில் ஒரே இரவில் கொல்லப்பட்ட 171 பொதுமக்களில், அவர்களும் அநியாயமாகக் கொல்லப்பட்டு விட்டார்கள்.

கல்லறைகளை சுத்திப்பார்க்கிறேன். சிறுவர்களுக்கென தனியான ஒருபகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. இறப்புக்கு வயது வித்தியாசம் இல்லை. ஒரு கல்லறையின் மேல் “ A little voice is hushed and a little Angel is born, All our love Mummy, Daddy and family” என்று எழுதப்பட்டிருந்தது. Mummy, Daddy என்ற சொற்கள் அந்த குழந்தை கூப்பிடுவது போல ஓர் உணர்வை ஏற்படுத்தி, நெஞ்சை நெகிழவைத்தது. இது எல்லாம் முகம் தெரிந்த கல்லறைகள். முகம் தெரியாத எம்மக்களின் கல்லறைகளை நினைக்கிறேன். காணாமல் போனவர்கள் எத்தனை பேர். பத்தாம் வகுப்பில் என்னோடு படித்த குமரகுருபரன் ஆமி எரியூட்டிய கரையோர வள்ளங்களையும், வலைகளையும் அணைத்து உதவிசெய்ய போனவன், ஆமியால் பிடித்துக் கொண்டுபோகப்பட்டான் என்று கதை. இது போல எத்தனை ஆண்கள், பெண்கள். கொழும்பில் அதிகாலை இராணுவத்தால் கலைக்கப்பட்டபோது, தான் பிடிபட்டு முகம்தெரிந்தால் தான் பழகிய, இருந்த, தெரிந்த என்று எல்லோரையும் இராணுவம் விசாரணை என்ற பெயரில் கொன்றொழித்து விடும் என ஒரு பேக்கறிக்குள் ஓடிப் போறணைக்குள் விழுந்து தன்னை மாய்ந்துகொண்டான் ஒரு வேவுப்புலிவீரன். கல்லறையே இல்லாது காற்றோடு கலந்தவர்கள் எத்தனை பேர்.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கைசாத்திடப்பட்ட பல ஐரோப்பிய ஒப்பந்தங்கள் முதலாம், இரண்டாம் உலகப்போரின்போது கொல்லப்பட்ட வீரர்களின் கல்லறைகளை பாதுகாக்கவெனக் கொண்டுவரப்பட்டன. பிரான்ஸ், ஜேர்மன் அரசுக்கிடையிலான 1871 ம் ஆண்டு Treaty of Frankfurt இல் இருந்து 1966ம் ஆண்டு Franco – German உடன்படிக்கை வரை பல மனிதாபிமான அடிப்படையிலான, இறந்த போர்வீரர்களுக்கு இருதரப்பிலும் மதிப்பளிக்கும் வகையில் உருவாக்கிப்பேணப்பட்டது. சில பொதுவான புதைகுழிகள் கூட பல ஆண்டுகளுக்கு பின் கண்டுபிடிக்கப்பட்டன. 2007இல் பிரித்தானிய, அவுஸ்ரேலிய வீரர்களின் புதைகுழி ஒன்று பிரான்சில் Fromellesக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டது. அது 1916 இல் ஜேர்மனிகளால் புதைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. உலகவரலாற்றில், கட்டப்பட்ட பல்லாயிரக்கணக்கான புலிவீரர்களினதும், நாட்டுப்பற்றாளர்களினதும் கல்லறைகளை, அரசாங்க கட்டளையுடன் இடித்து, தரைமட்டமாக்கி அதன் மேல் தமது இராணுவமுகாமை நிறுவும், மிகவும் கண்ணியம் குறைவான, துவேசம்மிக்க செயலை, இந்த 2001 நூற்றாண்டில் செய்ய, சீறிலங்கா அரசு ஒன்றாலேயே முடியும். அங்கு இறுமாப்போடு பவனிவரும் இராணுவத்தை பார்க்க எனக்கு ஒன்று மட்டும் நன்றாக விளங்குகிறது. சீறிலங்காவின் பொருளாதார சீர்கேட்டுக்கும், சிங்களத்தின் அழிவுக்கும், இன்றைய நிலைக்கும், காரணம் அவர்களின் சிங்கள, பௌத்த ஏகாதிபத்திய வெறிதான், வேறு ஒரு புறக்காரணியும் அல்ல. இறந்தவர்களின் கல்லறைகளை விட்டு வைத்து, ஒரு தாயின் மனதை வெல்ல முடியாதவர்கள். என்னென்று உலகத் தமிழர்களின் மனதை வெல்லப்போகிறார்கள். எல்லாம் நன்மைக்கே. தமிழ் ஈழம் நிச்சயம்.

உடல் மழையில் நனைந்தாலும், உள்ளம் உற்சாகமாக வாசலின் வழியை நோக்கி நடக்கிறேன்.

கருத்துக்களுக்கு -
facebook.com/orupaper @orupaper








ஒரு பேப்பர்
ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name:
Address :
Postcode:
Telephone:

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும்,
G11, Lombard House,
PURLEY WAY, CROYDON,
CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# காயங்களை கிளறும் அரசியல்வாதிகள்!



**ப. தெய்வீகன்**

வடபகுதியிலிருந்து முஸ்லிம் மக்கள் விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்பட்ட 25 ஆவது ஆண்டு நிறைவு நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்ட தமிழ் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் - 25 ஆண்டுகளுக்கு முன்னர் வடக்கில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ‘இனச்சுத்திகரிப்பு’ நடவடிக்கை குறித்து தாம் வெட்கப்படுவதாகவும் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைக்கு அன்று எதிர்ப்பு தெரிவிக்காத தமிழர்கள் அனைவரும் இந்த வரலாற்று தவறுக்கு பொறுப்பேற்கவேண்டும் என்றும் கூறியுள்ளார். இந்நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் ரவூப் ஹக்கீம், 25 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற இந்த சம்பவம்கூட ஒரு ‘போர்க்குற்றமே’ என்றும் தெரிவித்திருக்கிறார்.

இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் குறித்து சர்வதேச அளவில் மாநாடு நடத்தி தீர்மானங்கள் நிறைவேற்றி மக்களுக்கு தீர்வு பெற்றுக்கொடுப்பது தொடர்பாக பேசுவதற்கு முன், உள்நாட்டில் நடைபெற்ற துன்பியல் நிகழ்வுகளுக்கு பரிகாரம் தேடிக்கொள்வதென்பது மிகவும் அத்தியாவசியமானதொன்று. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

சிறிலங்காவின் பெரும்பான்மையின பேரினவாத அரசுகள் சிறுபான்மையின மக்களுக்கு எதிராக மேற்கொண்ட குற்றங்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பது தொடர்பாக குரல் கொடுக்கும் இந்த தருணத்தில் சிறுபான்மையின மக்கள் கூட்டத்தில் அங்கம் வகிக்கும் வெவ்வேறு தேசிய இனங்கள் தங்களுக்குள் பரஸ்பரம் நல்லிணக்கத்தையும் நல்லுறவையும் பேணிக்கொள்வதென்பது இரட்டிப்பு அவசியமானது.

அரசியல் இயந்திரங்கள் தமக்கு தேவைப்பட்ட காலப்பகுதிகளில் எல்லாம் தமிழ்-முஸ்லிம் உறவுகளுக்கிடையிலான இந்த பகை கிளறும் துவேச வெறியாட்டத்தினை திட்டமிட்டே நடைமுறைப்படுத்தி வந்திருக்கின்றன. இதுபோன்ற நடவடிக்கையாக வடக்கில் 25 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்று முடிந்த சம்பவம்தான் முஸ்லிம்களின் முற்றுமுழுதான வெளியேற்றம்.

அதற்காக விடுதலைப்புலிகளின் இந்த முடிவை சரியென்று முடித்துக்கொள்வதாக அர்த்தம் கிடையாது. ஏனெனில் விடுதலைப்புலிகளின் முன்னாள் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கமே வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றத்தை ஒரு வரலாற்று தவறு என்று பகிரங்கமாக ஒப்புக்கொண்டிருந்தார்.

இதற்கும் மேலாக, 2002 ஆம் ஆண்டு சமாதான காலப்பகுதியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களை வன்னிக்கு அழைத்த விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றிய நடவடிக்கை குறித்து கரிசனையுடன் பேச்சு நடத்தி, அவ்வாறு இடம்பெயர்ந்த அனைத்து மக்களையும் மீண்டும் வடக்கில் வந்து குடியேறுமாறு கோரி முஸ்லிம் மக்களின் சார்பான பிரதிநிதியாக ரவூப் ஹக்கீமை கருதி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றையும் கைச்சாத்திட்டார்.

வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்களின் விவசாய நிலங்களை மீண்டும் பயிர்செய்கைக்கு பயன்படுத்த வசதி செய்துகொடுப்பது, முஸ்லிம்களிடமிருந்து போராட்டத்துக்கு பணம் பெறுவதை உடனடியாக நிறுத்துவது, வடக்கு - கிழக்கில் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளுடன் பிராந்திய ரீதியில் பேசித்தீர்க்கும் நோக்கில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக ஒவ்வோர் பிரதிநிதியை நியமிப்பது ஆகிய அடிப்படை விடயங்களிலும் -

சிறிலங்கா அரசுடனான சமாதான பேச்சுக்களில் முஸ்லிம்கள் சார்பாக முஸ்லிம் காங்கிரஸை ஒரு தரப்பாக இணைத்துக்கொள்வது என்ற அரசியல் விடயத்திலும் ஆழமான ஒரு உடன்பாடு எட்டப்பட்டது.

12 ஆண்டுகளுக்கு பின்னர் தமிழ் - முஸ்லிம் உறவை வலுப்படுத்துவற்கு விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்ட காத்திரமான நடவடிக்கை இதுவாகும். இதனை முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமல்லாமல் ஏனைய முஸ்லிம் தலைவர்கள், மதப்பெரியார்கள், புத்திஜீவிகள் அனைவரும் பெரிதும் வரவேற்றனர்.

அப்போது வடக்கு - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்மேளனத்தின் பொது செயலராக பதவி வகித்த எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா அவர்கள் “இணைந்த வடக்கு கிழக்கில் தான் முஸ்லிம்களின் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்” என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றினார்.

வடக்கிலிருந்து விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு விடுதலைப்புலிகளே இந்த நல்லெண்ண நடவடிக்கையை முன்னெடுத்து இரு இனமக்களுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்த வழிகோலினார்கள்.

ஒரு தேசிய இனத்திற்கு ஒரு ஆயுதக்குழு இழைத்த குற்றத்துக்கு மேற்கொள்ளப்பட்ட உச்சப்பட்ச பரிகார முயற்சியாக அனைத்துதரப்பினராலும் பாராட்டப்பட்டது.

ஆனால், தற்போது - 25 ஆண்டுகளுக்கு பின்னர் - இந்த விவகாரத்தில் புதிய சர்ச்சையை விதைப்பது போன்ற பாதையில் அரசியல்வாதிகள் கருத்துக்கூற தலைப்பட்டிருப்பது பல தரப்பினரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறது.

வரலாற்று ரீதியாக இடம்பெற்ற நிகழ்வு ஒன்றை நினைவு கூருவது என்பது வேறு. அதனை அரசியலுக்காக பயன்படுத்துவது என்பது வேறு.

மைத்திரியின் வருகையுடன் நல்லாட்சிக்கான காலம் கனிந்திருப்பதாக அறிக்கைக்கு அறிக்கை சந்திப்புக்கு சந்திப்பு பேசிக்கொண்டிருக்கும் இந்த சிறுபான்மை அரசியல்வாதிகள், சிங்கள ஆட்சியாளர்கள் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்கிறார்கள். சிறுபான்மையின மக்களின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் சின்ன சின்ன காரியங்களையாவது செய்யவேண்டும் என்கிறார்கள்.

அவர்கள் செய்கிறார்களோ இல்லையோ எங்கள் தரப்பிலிருந்து செய்யவேண்டும் என்பதற்காக தசாப்தங்களாக புறக்கணித்த சிறிலங்காவின் சுதந்திரதின வைபவத்திலேயே சுமந்திரன் அவர்கள் சென்று ஆஜராகிறார். மறுபுறத்தில், தன்பங்குக்கு நல்லெண்ண சமிக்ஞை காண்பிப்பதற்கு சம்பந்தர் ஐயா சிறிலங்காவின் தேசியக்கொடியை ஏந்திக்கொண்டு நிற்கிறார். இவையெல்லாம்கூட நல்லிணக்க முயற்சியா என்று பொதுமக்கள் மத்தியில் முகம்சுழிக்கும் வகையில் கேள்விகள் எழுந்தாலும், ‘இல்லை. இல்லை. இது இராஜதந்திரம்’ என்று கூறி வாயை அடைத்துக்கொண்டார்கள் என்று புத்திஜீவிகள்.

நல்லிணக்கம் தொடர்பாக இவ்வளவு கரிசனையும் கவலையும் கொண்டுள்ள இந்த தமிழ் அரசியல்வாதிகள் எப்பவோ முடிந்துபோன ஒரு சம்பவத்திற்கு சம்பந்தப்பட்ட தரப்பு மன்னிப்பும் கோரி பரிகாரமும் மேற்கொண்ட பின்னர் -அது ஒரு இனச்சுத்திகரிப்பு என்றும் அதனை தட்டிக்கேட்காத ஒவ்வொரு தமிழனும் வெட்கப்படவேண்டும் என்றும் கூறுவதன் நோக்கம்தான் என்ன?

இவ்வாறு இப்போது நினைவு நிகழ்வில் நின்று நீட்டோலை வாசித்து உணர்ச்சி அரசியல் செய்வதன் மூலம் தமிழ் - முஸ்லிம் உறவுகளுக்கு இடையில் இந்த அரசியல்வாதிகள் எவ்வளவுதூரம் தங்கள் நல்லிணக்க பயணத்தில் முன்நகர்ந்திருக்கிறார்கள்?

வடக்கை விட்டு முஸ்லிம்களை வெளியேற்றும்போது அதனை தடுத்துநிறுத்தாத தமிழ் மக்களை இன்று கடிந்துகொள்ளும் சுமந்திரன் அவர்கள் அப்போது யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த மாவை சேனாதிராசா மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரை பார்த்து இதேகேள்வியை கேட்பதற்கு என்றாவது துணிந்ததுண்டா?

இது போதாதென்று, வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமைக்கு மன்னிப்பு கோரி வட மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று தனது அரசியல் வைரியான முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்திக்கு இழுத்திருக்கும் சுமந்திரன் அவர்கள் முன்னர் தமிழ்மக்களுக்கு எதிரான இனப்படுகொலை தீர்மானத்தை வட மாகாணசபையில் நிறைவேற்றியதற்காக “ஆதாரம் இல்லாமல் தீர்மானம் நிறைவேற்றிய முட்டாள்தனமான முயற்சி” என்று சீறி சினந்தாரே? முஸ்லிம்களின் வெளியேற்றம் தொடர்பாக இவ்வளவு காலத்தில் எவ்வளவு ஆதாரங்களை சேகரித்திருக்கிறார் என்று இவரால் பொதுவெளியில் கூறமுடியுமா?

ஆக மொத்தம், முதலமைச்சருக்கும் தனக்கும் இடையிலான அரசியல் பகைமையையும் ஒரு இனத்துக்கு இடம்பெற்ற வரலாற்று குற்ற நிகழ்வுக்கு வருத்தம் தெரிவிக்கும் சபையில் சாடை மாடையாக குத்திவிட்டு வந்திருக்கிறார். அவ்வளவுதான்.

இதற்கு ஒரு படி மேலே சென்றுள்ள ஹக்கீம் அவர்கள் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட இந்த வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றமும் போர்க்குற்றமே என்று தெரிவித்திருக்கிறார்.

சுமந்திரனாவது பரவாயில்லை. இந்த விடயத்தில் வரலாறு தெரியாமல் பேசுகிறார் என்று வைத்துக்கொள்ளலாம். அன்று தொட்டு இன்று வரை சிறிலங்கா முஸ்லிம்களின் விவகாரத்தில் கூடவே பயணிக்கும் ஹக்கீம் ஏன் இவ்வாறு தவிச்ச முயலடிப்பதற்கு தவியாய் தவிக்கிறார்.

சிறிலங்காவில் தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தில் மூச்சுவிட கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தில் இயலுமானவரை காயங்களுக்கு மருந்தளிப்பதில் அரசியல்வாதிகள் கருமம் ஆற்றினால் பயன்தருமே தவிர, காயங்களை கிளறி பார்ப்பதில் அல்ல.

ஒட்டுமொத்த சிறுபான்மையின மக்களுக்கு எதிராக பேரினவாத அரசுகள் மேற்கொண்ட வரலாற்று ரீதியான அடக்குமுறைகளையும் அட்டூழியங்களையும் அராஜகங்களையும் பாதிக்கப்பட்ட மக்களை ஒருமித்து எதிர்ப்பதற்கு இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும் என்பதைத்தான் அனைவரும் எதிர்பார்க்கிறார்கள். சர்வதேச சமூகமும் அதையே வழிமொழிந்திருக்கிறது.

இந்த வேளையிலும் கூடாதவர்களின் கூடாரங்களில் நின்று அரசியல்வாதிகள் குளிர்காய முயற்சித்தால், அது அனைத்து பிரச்சினைகளையும் மீண்டும் ஆரம்பபுள்ளியில்தான் கொண்டுசென்றுவிடும்.

*நன்றி: மழைமரம்*




அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் உள்ளம் கனிந்த தீபாவளித் திருநாள் நல்வாழ்த்துக்கள்!!

- ✓ Accountancy & Auditing
- ✓ Business Start up Advice
- ✓ Business Plans & Cash Flow Forecasts
- ✓ Personal tax Affairs & Self Assesment
- ✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- ✓ Company Formation
- ✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
- ✓ Attending VAT & PAYE visits
- ✓ Tax Investigations
- ✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# வங்குரோத்து நிலைக்கு சிறிலங்கா, தமிழ் டயஸ்போறாவிற்கு வலை விரிக்கிறது மைத்திரி-ரணில் அரசு



**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

அண்மையில் பிரித்தானியாவிற்கு வந்த சீன அதிபர் ஜி ஜின் பிங்கிற்கு இதற்கு முன்னர் வந்த எந்த ஒரு சீனத் தலைவருக்கும் கொடுக்கப்படாத அரச மரியாதை கொடுக்கப்பட்டது. பிரித்தானியாவில் சீனாவின் நேரடி முதலீட்டினை ஏற்படுத்தும் வகையிலேயே இந்த வரவேற்பு வழங்கப்பட்டது என்பது ஒன்றும் இரகசிமானதல்ல. நரேந்திர மோடி உலகெங்கும் பறந்து திரிந்து, தமது நாட்டில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழமையாகக் கிடைக்கும் சிவப்பு நாடா (red tape) அல்ல சிவப்புக் கம்பளம் விரித்துள்ளோம் பரப்புரை செய்கின்றார். வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்காக நாடுகள் எல்லாம் ஆலாய்ப் பறக்கையில் இலங்கையும் வெளிநாட்டு முதலீட்டிற்காக அலைகின்றது.

### ◆ இலங்கையில் முதலீடு செய்யத் தயக்கம்

வெளிநாட்டு முதலீடுகளை வேண்டிநிற்கும் நாடுகளின் தொகை அதிகமாகவும் முதலீடு செய்பவர்களின் தொகை குறைவாகவும் உள்ள நிலையில் இன்னும் உலகப் பொருளாதாரம் ஓர் உறுதியான நிலையை அடைய முடியாத நிலையிலும் முதலீட்டாளர்கள் தமது தெரிவுகளில் கவனமாகவும் நிதானமாகவும் இருக்கின்றார்கள்.

உறுதியான அரசியல் சூழ்நிலை, ஊழலற்ற ஆட்சி, பாரிய உள்ளூர்ச் சந்தை போன்றவை அவர்களின் விருப்பமானதாக இருக்கின்றது. இதனால் இலங்கையில் முதலீடு செய்யவதற்கு பலதரப்பினரும் தயக்கம் காட்டுகின்றனர்.

### ◆ சீனாவின் பிடி இன்னும் தளரவில்லை

சவுத் சைனா மோர்ணிங் போஸ்ற் என்னும் சீனப் பத்திரிகையில் அண்மையில் வந்த கட்டுரைக்கு இலங்கையில் அமெரிக்கா சீனாவிலும் பார்க்க முன்னணியில் நிற்கின்றது எனத் தலைப்பிடப்பட்டுள்ளது. அதில் ஐக்கிய அமெரிக்கா ஜெனிவாத் தீர்மானத்தை வைத்து இலங்கை மீதான தனது அரசுறவியல் நெம்புகோலை வலுவாக்கியுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அமெரிக்காவின் இலங்கை மீதான செல்வாக்கு தற்காலிகமானதே என்கின்றார் ஐக்கிய நாடுகள் சபைக்கான இனங்கையின் முன்னாள் நிரந்தரப் பிரதிநிதி தயான் ஜயதிலக. அதற்கு அவர் கொடுக்கும் முக்கிய காரணம் குடியரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேனாவின் சுதந்திரக் கட்சி அமெரிக்காவிலும் பார்க்கச் சீனா நம்பகத் தன்மை மிக்க நண்பன் எனக் கருதுகின்றது. அத்துடன் இலங்கையில் சீனா செய்த உட்கட்டுமானங்கள் மீதான முதலீட்டை அமெரிக்காவால் செய்ய முடியாது. இது இலங்கையில் முதலீடு செய்பவர்களுக்கு ஒரு பிரச்சனையைக் கொடுக்கின்றது. அதாவது இலங்கையில் அரசியல் உறுதிப்பாடு இன்னும் உறுதி செய்யப்படவில்லை. அதே சமயத்தில் மனிதவுரிமைகள் போன்ற விடயங்களில் எந்த அக்கறையுமின்றி, புவிசார் அரசியலை மையப்படுத்தி இலங்கையின் அமைவிடத்தினைக் கருத்திற்கொண்டு அங்கு முதலீடுகளைச் செய்வதற்கும் உட்கட்மான மேம்பாட்டுக்கு கடன் வசதிகளைச் செய்வதற்கும் சீனா இன்னமும் தயாராக இருக்கிறது. ஐக்கிய அமெரிக்காவோ, அல்லது ஏனைய மேற்கு நாடுகளோ இலங்கையில் முதலீடு செய்வதற்கோ அல்லது கடனுதவிகளைச் செய்யவோ தயாரக இல்லை. ஆகவே நேபாளம் இப்போது இந்தியாவிடமிருந்து விலகி சீனாவை நோக்கி நகர்வதிலும் வேகமாக இலங்கை சீனாவை நோக்கி நகர்வதற்கு வாய்ப்புக்களே அதிகமாகவுள்ளது. மறுபுறத்தில் இலங்கை சீனாவினை நோக்கிச் செல்லாமல் தடுப்பதற்கு போர்க்குற்ற விசாரணையை என்ற அஸ்திரத்தை அமெரிக்கா பயன்படுத்திவருகிறது. இந்நிலையில் இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஒரு தொகுதி இழித்தவாயர்களைத் தேடுகிறது சிறிலங்கா அரசாங்கம். ஆனால் அதற்கு அவசியமில்லாமல் கைகொடுக்கக்காத்திருக்கிறது ஒருதரப்பு.

### ◆ தமிழர் பேரவைகள்

2015-ம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையில் செய்த ஆட்சி மாற்றத்தை உறுதி செய்ய வேண்டிய நிலையில் அதன் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான ஐக்கிய அமெரிக்கா இருக்கின்றது. அதன் இரண்டாவது கட்டமான பாராளமன்றத் தேர்தலும் வெற்றிகரமாக அரங்கேற்றப்பட்டுள்ளது. இலங்கையில் ஒரு தாராண்மைவாத ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு அங்கு வெளிநாட்டு முதலீடுகள் அவசியம். அதன் மூலம் அங்கு வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கப்படவேண்டும். மக்களுக்கு இனப் பிரச்சனை பற்றிக் கதைக்க நேரமில்லை என்ற நிலை உருவாக்கப்படவேண்டும். அதற்கு ஒரே வழி வெளிநாடுகளில் வாழும் தமிழர்களை இலங்கையில் முதலீடு செய்யப் பண்ண வேண்டும். அதற்காகவே சிறிலங்கா அரசாங்கம் டயஸ்போறா திருவிழாவை நடாத்த முனைகிறது. தாயகத்தில் கடைவிரிக்க அனுமதி பெற்றுத் தருகிறோம் என ஆசைகாட்டியே அமெரிக்க தீர்மானத்தை ஆதரிக்குமாறு தமிழ் அமைப்புகள் கேட்கப்பட்டன. (ஜெனிவாவிற்கு வந்துதான் வெட்டிக்கிழிக்கிறதாக கதைவிடுகிற யூஎஸ்ரிபக் புஸ்பாக்கா கொழும்புக்குச் சென்று கலர் காட்டலாம் என்றால் விடபோகிறாவோ?)

**இலங்கையில் ஒரு தாராண்மைவாத ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு அங்கு வெளிநாட்டு முதலீடுகள் அவசியம். அதன் மூலம் அங்கு வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கப் படவேண்டும். மக்களுக்கு இனப் பிரச்சனை பற்றிக் கதைக்க நேரமில்லை என்ற நிலை உருவாக்கப்படவேண்டும். அதற்கு ஒரே வழிவெளிநாடுகளில் வாழும் தமிழர்களை இலங்கையில் முதலீடு செய்யப் பண்ண வேண்டும். அதற்காகவே சிறிலங்கா அரசாங்கம் டயஸ்போறா திருவிழாவை நடாத்த முனைகிறது.**

ஆகவே வெளிநாட்டுத் தமிழர் பேரவைகள், கொங்கிரசுகள் ஆகியவற்றை இலங்கை அரசு நாடியுள்ளது. இமானுவல் அடிகளாரோ இலங்கைக்கு வரும்படி மங்களவும், மைத்திரியும் அழைத்ததை வைத்துக்கொண்டு பயணச் சீட்டு பெறுவதற்கு காத்திருக்கிறார். ஏனெனில் அவர் மீதான தடை இன்னமும் நீக்கப்படவில்லை. பாதிரியார் யாழ்ப்பாணத்தில் பணிமனையொன்றைத் திறந்தால், அவரை பார்க்கப்போகிறோம் சனத்திற்கு உதவப்போகிறோம் என்று இங்குள்ள முதலாளிகள் கொழும்பில் முதலீடு செய்வதற்குச் செல்வார்கள் என எதிர்பாரக்கப்படகிறது. பிரித்தானியத் தமிழர் பேரவையும் யாழ்ப்பாணத்தில் ஒரு பணிமனை திறக்க விருப்பதாகச் செய்திகள் கசிந்துள்ளன. இன்னொரு ரில்கோ யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டாலும் ஆச்சரிப்பட ஒன்றுமில்லை.

தமிழர்களை இலங்கையில் முதலீடு செய்யப் பண்ணினால் பின்னர் அங்கு ஓர் உரிமைப் போராட்டம் ஆரம்பிக்க முடியாமல் செய்யலாம் என்பது இலங்கை அரசின் சதி. வெளிநாட்டில் இருந்து இலங்கையில் முதலீடு செய்தவர்கள் அங்கு ஒரு போர் மீண்டும் ஆரம்பித்தால் தமது முதலீட்டிற்கு ஆபத்தாக முடியும் என்பதால் முன்பு செய்தது போல் உரிமைப் போருக்கு நிதி வழங்க மாட்டார்கள் என இலங்கை அரசு கருதுகின்றது.

இதில் ஒரு பேரவைக்கு பல தமிழ்ச் செலவந்தர்களுடன் (தயவு செய்து கள்ளமட்டைக்காரர்கள் எனறு எடுத்துக்கொள்ள வேண்டாம்) நெருங்கிய தொடர்பு உண்டு எனக் கூறப்படுகிறது. அதைப் பயன்படுத்த இலங்கை அரசு முயல்கின்றது. பேரவைகளைச் சேர்ந்தவர்கள் சின்னக்கதிர்காமர்? சுமந்திரனுடன் நின்று புகைப்படம் எடுத்துப் படம்காட்டிபோதே அவை திசைமாறிவிட்டன என்பது பல தமிழர்களால் உணரப்பட்டது. ஏற்கனவே பேரவைகளைச் சேர்ந்தவர்கள் மங்கள சமரவீரவுடன் மட்டுமல்ல மைத்திரியுடனும் இரகசியமாகச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளனர். டிசம்பரில் இன்னொரு அமைச்சருடன் கூட்டம் நடக்கவிருக்கிறது. சோனியாவின் மூஞ்சியில் கருணையக் கண்டவர்களுக்கு மைத்திரியின் மூஞ்சியில் காண்பது சிரமம் அல்ல. ஆகவே சிறிசேனாவிற்குப் பின்னல் ஒரு தமிழ் கூட்டம் போகப் போகின்றது வாலை ஆட்டிக் கொண்டு

ஜெனிவா - 2 இறுதியாக நடந்த பேச்சுவார்த்தை. அந்தப் பேச்சுவார்த்தையின் பின் எந்த உத்தரவாதமும் இல்லாமலேயே அடுத்த பேச்சுக்கான திகதி தருமாறு சர்வதேசத்தின் பிரதிநிதியான நோர்வேயால் நிர்ப்பந்தம் விதிக்கப்படுகிறது. அதற்கு இசையாத தமிழ்ச்செல்வனை நோக்கி எரிக்சொல்கெய்ம். 'திகதி குறிக்கப்படாதுவிடில் பேச்சு முறிவடைந்ததாக அர்த்தமாகிவிடும். எனவே திரும்பிப் போகும் உங்களின் பயணத்தின் பாதுகாப்பை எங்களால் உத்தரவாதப்படுத்த முடியாது' என்றார். தமிழ்ச்செல்வன் 'உயிர் அச்சுறுத்தல்களைக் கொடுத்து புலிகளைப் பணியவைத்து விடமுடியாது' என்று பதிலளித்தார். இறுதியில் எரிக் சொல்கெய்ம் சொன்னார் 'நீங்கள் பேச்சுத் திகதி குறிக்காமல் போவது நல்லதல்ல என அமெரிக்கா ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கருதுகிறார்' என்றார். இதற்கு தமிழ்ச்செல்வன் சொன்ன பதில் எரிக் சொல்கெய்மையும், அங்கிருந்த ராஜ தந்திரிகளையும் சங்கடத்தில் ஆழ்த்தியது. 'நாங்கள் அமெரிக்க ஜனாதிபதிகளான, வோஷிங்டன், ஆபிரகாம் லிங்கன், வுட்ரோ வில்சன் ஆகியோரது கருத்துக்களில் தான் கரிசனையாக உள்ளோம். ஜோர்ஜ்புஷ் இன் கருத்திலல்ல'. (மேற்சொன்ன ஜனாதிபதிகள் அமெரிக்க சுதந்திரத்திற்காகவும், சிவில் உரிமைக்காகவும், தேசிய இனத்தவர்களின் சுயநிர்ணயத்திற்காகவும் போராடியவர்கள்)

ஜெனீவா 2 பேச்சுவார்த்தைக்கு அரச தரப்புப் பேச்சுக்குழுவினர் மிகவும் புளகாங்கிதத்தோடு வருகை தந்திருந்தனர். காரணம், புலிகள் தரப்பில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இல்லை என்பதே. மேலும், பேச்சின் நிகழ்ச்சி நிரல் முன்கூட்டியே தீர்மானிக்கப்படாமல் நடக்கப்போகும் ஒரு அசாதாரண சூழல் பேச்சுவார்த்தை இது. இதனால் தயார்படுத்திக் கொண்டுவர வாய்ப்பும் இல்லை. பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் இதற்குத் தலைமை தாங்கினார். அந்தப் பேச்சு மேசையில் தமிழ்ச்செல்வன் கையாண்ட உத்திதான் நியாயத்தை எங்கள் பக்கம் திருப்பி அரச தரப்பு 'மேதைகளை' தலைகுனிய வைத்தது.

முதல்நாள் பேச்சில் கர்வத்தோடு வந்த அரசதரப்பைக் கதைக்கத் தூண்டி அவர்கள் கையிருப்பில் இருந்த விவாதப் பொருளைக்கக்கவைத்து அதற்கு எதிர் விவாதம் செய்யாது அக்கருத்தில் அவர்களை நிலைபெற வைத்து, மறுநாள் அந்த விவாதத்திற்கு எதிர் வியூகம் அமைத்து அரச தரப்பை அம்பலப்பட வைத்தார். அரச தரப்பின் கருப்பொருள் அடிப்படை அரசியல் பிரச்சினை குறித்தே பேசவேண்டும் என்றிருந்தது. அதற்குச் சம்மதிக்காத புலிகள் போலியாகவே சமாதானப் பேச்சைக் கையாளுகின்றனர் என்று விவாதித்தனர். அன்றாடப் பிரச்சினையை விடுத்து அடிப்படைப் பிரச்சினை குறித்த அரசியல்தீர்வு பற்றியே பேசவேண்டும் என்றனர். அவர்களது நோக்கம், தனியரசு இலட்சியத்தில் இருக்கும் புலிகள் அரசியல்தீர்வு குறித்துப் பேச சம்மதிக்கமாட்டார்கள். எனவே புலிகளின் போலித்தனத்தை அம்பலப்படுத்திவிட முடியும் என்பதாகவே இருந்தது.

இதனைச் சரியாகக் கணிப்பிட்ட தமிழ்ச்செல்வன் மறுநாள் "நாங்கள் அதற்குச் சம்மதிக்கிறோம். நீங்கள் கொண்டுவந்த அரசியல் தீர்வு யோசனையை முன்வையுங்கள் பேசுவோம்" என்றார். அரச பேச்சுக்குழு சங்கடத்தில் மாட்டியது. தமிழ்ச்செல்வன் எதிர்பார்த்தது போலவே அப்படி எந்த ஒரு தீர்வு முன்மொழிவையும் அது கொண்டுவந்திருக்கவில்லை. மேலும் தமிழ்ச்செல்வன் அவர்கள் "எங்களது முன்மொழிவாக இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை முன் வைத்துள்ளோம் அரசியல்தீர்வு பற்றியே பேசவந்த உங்களது முன்மொழிவு எங்கே? தொடர்ந்து பேசுவோம்" என்றார். விக்கித்துப்போன அரச குழு "நாங்கள் இப்போதுதான் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியுள்ளோம். விரைவில் தயாரித்து விடுவோம்" என்றனர். அதற்குத் தமிழ்ச்செல்வன் "தயாரித்ததும் வாருங்கள் பேச்சுக்குத் திகதி தருகிறோம்" என்றார். அரச குழுவை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தி அவர்கள் விரித்த பொறியில் அவர்களையே சிக்கவைத்தார் தமிழ்ச்செல்வன். இன்றுவரை அவரெழுப்பிய கேள்விக்கு அரசு பதிலளிக்கவில்லை. மாறாக, தமிழ்ச் செல்வனைக் கொல்வதுதான் அரசின் பதிலாக இருந்தது. இப்படியொரு வல்லமை மிக்க ஆளுமையை வீழ்த்திவிட எதிரியென்று வரும் எவருக்குத்தான் பிரியமிருக்காது. இதில் தர்மம் என்ன? தார்மீகமென்ன ? நவம்பர் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமிழர் வீடுகளெங்கும் முகாரி இசையில் மூழ்கியிருக்க, கோத்தபாய ராஜபக்ச பேட்டியளித்தார். "இன்றுதான் நான் வாழ்வில் மிகவும் சந்தோசமாக இருக்கிறேன்" என்று.

*- விடுதலைப்புலிகள் (ஐப்பசி, கார்த்திகை 2007)*

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

## அறம் தாங்கிப் பிரபாகரா நீ எம் பிரபாகரனே.....

முடிதாங்கி ஆண்ட தமிழினம்
அடிவாங்கி அழிந்தது
போதும் – என
அறங்தாங்கியில்
எழுந்தது ஓர் இடிதாங்கி
கொலை தாங்கியை
அடித்தது பார் – தன்
சுமைதாங்கிப்
பாதணியால்..

தீதாங்கி உயிர் கொடுத்த
முத்துக்குமாரனை
முதல் தாங்கியாய்
கண்ட தியாகிகளே – உங்கள்
வழிதாங்கியாய்
வந்தனன் ஒருத்தன்
அறங்தாங்கி எனும்
அழகிய ஊரினிலே
பழிதாங்கியைப் பாதணியால்
பழிவாங்கிடவே

துயர் தாங்கி
நின்றதனால் வந்த
துணிவோ – தலைவன்
பெயர் தாங்கி நின்றதனால்
வந்த துணிவோ – குனிந்த
முதுகு தாங்கியது
போதுமென்றதனால்
வந்த துணிவோ – வீரத்
தாய் தாங்கிய வயிற்றில்
வளர்ந்ததால் வந்த துணிவோ
அறம்தாங்கிப்
பிரபாகரா நீயும்
என் பிரபாகரனே
பிரபாகரனே....

– வேல் தர்மா

# வன்னியில் ஒரு காலத்தில் தன்னிறைவு கொண்டு விளங்கிய மூன்று கிராமங்களின் கதை




**மகாலிங்கம் பத்மநாபன்**

*பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன். செருக்கன் கிராமங்களின் பொற்காலமும் நீலனாறு, கொல்லனாறுகளால் சூழப்பட்டு பொறிக் கடவை அம்பாளின் அனுக்கிரகத்தால் வாழ்ந்த மக்களின் வரலாறும்.*

மாற்றம் ஒன்றே மாறாதது. வலுவுள்ளவர்களே வாழ்வில் நிலைத்து நிற்பர். வலுவில்லாதவர் அழிந்துபோவர். இந்த இயற்கையின் விதியை படிக்காதவர்களாயினும் மூன்று கிராம மக்கள் அறிந்திருந்தனர்.

### உழவு இயந்திரம் வாங்கலும், சாரதிகளாகச் செல்லலும்

எருமைகளின் யுகம் முடிந்ததும் வாழாவிருக்காது வசதி மிக்கவர் தாமும் உழவு இயந்திரத்தை வாங்கினர். வசதி இல்லாத இளைஞர்கள் சாரதி பயிற்சி பெற்று வெளியூர்களுக்கு வேலைக்குச் சென்றனர். ஆண்கள் வேலை தேடி வெளியூர் செல்வது முதன்முதலாக நடந்தது. வயலில் உவர் நீர் புகுந்ததனாலும் நூறாண்டுகளாக நெற்செய்கை பண்ணப்பட்டதாலும் வயலில் வேளாண்மை இலாபமற்ற தொழிலாக மாறிவிட்டது. பெண்கள், ஆண்களுக்குச் சமமாக வேலை செய்தவர்கள். ஆடு, மாடு, கோழி பராமரிப்பதும் சிறியளவில் வயல் செய்வதுமாகக் காலம் கழித்தனர்.

### மில் நாகலிங்கம்

காரைநகரைப் பூர்வீகமாகக் கொண்டவர். மலேசியாவில் பிறந்தவர். அங்கு நிலமை பொருத்தமில்லை என்று கண்டு தாய்நாடு திரும்பியவர். தொழில் செய்வதற்கு ஏற்றதென்று கருதிப் பழைய கிராமமான பெரிய பரந்தனைத் தேர்ந்தெடுத்தார். இங்கே நீலன் ஆற்றங்கரையில் ஒரு நெல்குற்றும் ஆலையை அமைத்தார். படித்தவர். முதிய வயதினர். பண்பாளர். மக்களுடன் இனிமையாகப் பழகி மூன்று கிராமத்தவர்களில் ஒருவர் ஆனார்.

### பெண்களில் சிலர் அரிசி வியாபாரிகள் ஆயினர்

மத்திய வயதை அடைந்த பெண்கள் குடும்பம் சிறக்க வேண்டுமாயின் தாம் ஏதாவது தொழில் செய்ய வேண்டும் என்று ஆர்வமாயிருந்தவர்கள். அரிசி ஆலை தோன்றியதைத் தமக்குச் சாதகமாக மாற்றினர். எல்லோரிடமும் ஏற்கனவே வண்டில், மாடுகள் இருந்தமையால் துணிந்து காரியத்தில் இறங்கினர். தமது வயலில் விளைந்த நெல் முழுவதையும் அவித்துக், காயப்பண்ணி நாகலிங்கம் ஐயாவின் ஆலையில் குற்றி அரிசி ஆக்கினர். போட்டி போட்டுக் கொண்டு பரந்தன், கரடிப் போக்கு, கிளிநொச்சி முதலிய இடங்களில் உள்ள கடைகள் யாவற்றிற்கும் அரிசியை வழங்கினர். மிகுதி அரிசியை கிளிநொச்சியில் சனிக்கிழமையில் மட்டும் இயங்கிய வாரச் சந்தையில் நெல் அரிசி விற்கும் பகுதியில் வைத்து விற்றனர். அரிசி வியாபாரம் முழுவதும் மூன்று கிராமப் பெண்களின் ஏகபோக உரிமையாயிற்று. தம்வயலில் விளைந்த நெல் போதாது, வேறு இடங்களில் கொள்வனவு செய்யத் தொடங்கினர். நாகலிங்கம் ஆலை மூன்று கிராம மக்களின் நெல்லை குற்றுவதை மட்டும் செய்தும், இரவு பகல் இயங்கித்தான் அவர்களின் தேவையை நிறைவு செய்தது. ஆண்கள் நெல்லை அவித்துக் காயப் பண்ணும் வேலையைச் செய்தனர். நெல், அரிசி வியாபாரம் ஏகபோக உரிமையாக இருக்கும் வரை கிராமத்தில் மீண்டும் செல்வம் புரண்டது. கொஞ்சம் கொஞ்சமாக வேறு கிராம மக்களும் அரிசி வியாபாரத்தில் இறங்கினர். மாவட்டத்தில் பல அரிசி ஆலைகள், மிகப் பெரிய அளவில் ஆரம்பிக்கப்பட்டன. ஆலை உரிமையாளர்கள் தாமே நெல்லைக் கொள்வனவு செய்து, அவித்துக் குற்றத் தொடங்கினர். மூன்று கிராம மக்களின் பொருளாதாரம் மீண்டும் நலிந்தது.

### வைத்தீஸ்வரக் குருக்கள்

மூன்று கிராம மக்களின் கதையை எழுதும் போது முதன் முதலில் இவரைப்பற்றித் தான் எழுதியிருக்க வேண்டும். இவர் மூன்று கிராமமக்களின் இரண்டு தலைமுறையினருக்கு 'கோட்பாதர்' (God Father) போன்றவர். கிளி/பரந்தன் அ.த.க.பாடசாலையின் ஆசிரியராக முதன் முதல் நியமனம் பெற்று வந்தவர். பாடசாலையின் விடுதியில் மனைவி, பிள்ளைகளுடன் தங்கி மூன்று கிராமத்துப் பிள்ளைகளுக்கு இலவசமாக மாலை வகுப்புக்களை வைப்பார். காரை நகரைச் சேர்ந்தவர். வைத்தீஸ்வரக் குருக்கள் அந்தணராகப் பிறந்தவர். உண்மையான அன்பு, பண்பு, ஆற்றல், அறிவு மிக்கவராக இருந்தார். சாதி பார்க்கு மூடத்தனத்தை மாற்றியவர். பாடசாலையில் எல்லோரையும் சமமாக நடத்திக் காட்டியவர். காந்தீயவாதி. மகாலிங்கன், பாலசுந்தரம் முதலியவர்களுக்கு ஆரம்பக் கல்வியை ஊட்டி மகாலிங்கனை யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலைக்கும், பாலசுந்தரத்தைச் சாவகச்சேரிக்கும் சென்று இடைநிலைக் கல்வியைத் தொடர ஊக்குவித்தவர்.

சில வருடங்களுக்கு முன்னர் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் பற்றி பாமாலை இயற்றி வெளியிட்டவர். யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் அதிபராக இருந்த சரவணபவான் இவரது மருகர் எனக் கூறக் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

இவர் பரந்தன் அ.த.க.பாடசாலை விட்டுப் பயிற்சிக் கலாசாலை சென்று, பின் மலைநாட்டில் சேவையாற்றி, முதிய வயதில் மீண்டும் பரந்தன் அ.த.க.பாடசாலையிற்கு அதிபராக வந்தார். நாங்கள் இவரிடம் ஆரம்பக் கல்வியையும், பண்பாடுகளையும், ஒழுக்கத்தையும் கற்றுக் கொண்டோம். யாழ்ப்பாணம் சென்று இடைநிலைக் கல்வியைப் பெறத் தூண்டப்பட்டோம்.



எங்கள் கிராமத்துச் சிகையலங்கார நிபுணர் பெயர் பரமர் என்றுதான் ஞாபகம். அவர் மனைவி மட்டுவிலைச் சேர்ந்தவர். படித்தவர். தனது பிள்ளைகள் படிப்பதற்கு ஏற்றதா என நேரில் வந்து பார்த்து வைத்தீஸ்வரக் குருக்களுடன் கதைத்து திருப்தியடைந்த பின்னரே குடும்பமாக எமது கிராமத்தில் வந்திருக்கச் சம்மதித்தவர். அவரது மகன் என்னுடன் மூன்றாம் வகுப்பு ஆரம்பத்தில் வந்து சேர்ந்தார். நல்ல நண்பராக இருந்தார். எனது சிறுவயது அறியாமையால் அவரை ஒரு நாள் சாதிப் பெயர் சொல்லி அழைத்துவிட்டேன். அவரும் அழுது கொண்டு தன் வீட்டிற்குச் சென்றார். சிறிது நேரத்தில் தாயார் புலிபோல ஆவேசமாக வந்தார். அதிபரிடம் புகார் செய்தார். வைத்தீஸ்வரக் குருக்களும் உடனேயே உதவியாக இருந்த ஒரு ஆசிரியையும், மாணவர்களையும் கூட்டி என் சார்பில் தாயாரிடம் தானே மன்னிப்புக் கேட்டார். மாலை என்னை அழைத்து நான் விட்ட பிழையை அன்பாக, ஆதரவாக எடுத்துரைத்தார். எனது தந்தை, தாயாரும் அவ்வாறு கதைப்பது பிழையெனவும் அடுத்த நாள் காலை வணக்கத்தின் பொழுது அந்த நண்பரிடம் எல்லோர்



முன்னிலையிலும் மன்னிப்புக் கேட்குமாறு கூறினர். அடுத்தநாள் அந்த நண்பரிடம் வைத்தீஸ்வரக் குருக்கள் முன்னிலையில் மன்னிப்புக் கேட்டேன். அன்று தொடக்கம் அந்த ஆண்டு முடியுமட்டும் அவருடன் மிகவும் நட்பாகவும், அன்பாகவும் பழகினேன். அடுத்த ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு கற்பதற்காக முதலிலே சென்றிருந்த மூத்த சகோதரரைத் தொடர்ந்து நானும் செல்ல வேண்டியதாயிற்று.

வைத்தீஸ்வரக் குருக்கள் விவேகானந்தரைப் பற்றி, மகாத்மா காந்தி பற்றி, நாவலர் பெருமாள் பற்றி, சாதி, மத பேதத்தின் அறியாமைபற்றி, கௌதம புத்தர் பற்றி, பஞ்சபாண்டவர் பற்றி, இராம லக்குமணர் பற்றி சிறுவயதில் கூறிய கதைகள் அப்படியே பசுமரத்தாணி போல மனதில் பதிந்துவிட்டது. அதனால் அவரளவிற்கு இல்லாவிட்டாலும் ஓரளவு நல்ல ஆசிரியராகவும், சிறந்த அதிபராகவும் சேவை செய்யக் கூடியதாக இருந்தது.

### உடுக்கடிப் பாடல்கள்

சித்திரை மாதத்தில் எமது கிராமத்தின் எல்லாக் கோவில்களிலும் சித்திரைக் கஞ்சி காய்ச்சுவர். ஆனால் எல்லாக் கோவில்களிலும் அவசரம் அவசரமாகக் காய்ச்சி, படைத்து, குடித்துவிட்டு எல்லோரும் பள்ளமோட்டைப் பிள்ளையார் கோவிலுக்குச் செல்வோம். அங்கும் பகலில் சித்திரைக் கஞ்சி காய்ச்சப்பட்டு விடும். பின் இரவுப் பூசையின் முன்னர் சித்திரைக் கதை பாடப்படும். செல்லையா பூசாரியாரும் மெம்பர் வல்லிபுரமும் மாரியம்மன் கதை, காத்தவராயன் கதை, சிறு தெய்வங்களான அண்ணன்மார் கதை, வீரபத்திரர் கதை முதலியவற்றை உடுக்கடித்தபடி பாடுவர். செருக்கனைச் சேர்ந்த தங்கத்துரை, செல்லத்துரை போன்றவர்கள் உடுக்கு அடிப்பதில் நிபுணர்கள். செல்லையா பூசாரியார் காதில் கடுக்கனும், உருத்திராக்க மாலையும் அணிந்திருப்பார். கிராம சபையின் உறுப்பினரான வல்லிபுரம் கடுக்கன் பூட்டிய காது, குடும்பி, தங்கச் சங்கிலியுடன் காட்சி அளிப்பார். பூசாரியார் சில பகுதிகளைப் பாட, மெம்பர் தொடர்ந்து பாட சித்திரக் கதை இரவிராக நடைபெறும். இவர்களது உடுக்கடிப் பாடல்களுக்கு தங்கத்துரை, செல்லத்துரை ஆகியோரின் உடுக்கடி மேலும் மெருகூட்டும். இளைஞராக இருந்த செல்லத்துரை பின்னாளில் பல நாட்டுக் கூத்துக்களை நடாத்தி செல்லத்துரை அண்ணாவியார் என்று பெயரெடுத்தார். சித்திரக் கதையைக் கேட்டு ரசிப்பதற்காக பூநகரி, மீசாலை, சாவகச்சேரியிலிருந்தெல்லாம் பக்தர்கள் வந்திருப்பர்.

*தொடரும்..*



## திக்கெட்டும் தீபாவளி திக்கட்டும் திணறட்டும்...

திக்கெட்டும் தீபாவளி திக்கட்டும், திணறட்டும்
விக்கட்டும், திகைப்படைந்து விரக்தியுற்று
நிற்கட்டும்.

ஆதித் திராவிடரை அசுரரெனக் கூறி
ஆரியர்கள் சதிசெய்ய அறிவு தடுமாறி
வேதியர்கள் சொன்னதனை வேதமெனப்போற்றி
வீதியிலே நிற்கின்றோம் தீப ஒளியேற்றி

நரகாசுரராக்கி நம்மினத்தார் தம்மை
நல்லவர்கள் போல் நடித்து நம்மை ஏமாற்றி
நிகராக யாருமில்லை ஆரியருக்கென்று
நிலை நிறுத்தி இலக்கியங்கள் பலவும் சமைத்தார்.
ஆரியத்து ராமன் எம் அன்னை மண்ணை வென்று
அயோத்தி நகர் சேர்ந்தநாள் நன்னாளாமென்று
காரியத்தில் கண்ணாக தம் பெருமை போற்றி
காட்டுகிறார் தீப ஒளி நம்மை ஏமாற்றி.

வேறு:

நம்மினத்தை மாற்றினத்தார் அழித்த நாளை
நன்னாளாய் நாம் தூக்கி வைத்துப் போற்றி
இம்மியளவும் சூடு சொரணையின்றி
இவ்வுலகில் பட்டாசு கொழுத்துகின்றோம்.

வடக்கிருந்து வந்தவர்கள் எம்மையாண்ட
வரலாறு பலவுண்டு தோற்றவர்கள் நாமோ
தொடக்கமெது இதற்கெல்லாம் என்று அறியாமல்
தொழுகின்றோம் கடவுளாராய்
எமையழித்தோர் தம்மை
அடக்கியவர் ஆண்டதனால் ஆண்டவராய் ஆனார்
ஆண்டவரே கடவுளராய் பின் அமைந்து போனார்
தடுக்கவொரு தலைவனில்லை குடிமுழுகிப் போச்சு
தமிழ் வீழ ஆரியமே தலையெடுக்கலாச்சு.

வேறு:

ஐயிரண்டு சிரம் நிகர்த்த அறிஞனவன் ராவணனின்
ஆட்சியிலே இருந்ததெங்கள் நாடு – அவன்
பொய்யிருந்த வாயினராம் ஆரியரின் பரப்புரையால்
புகழழிந்தான் கெட்ட பெயரோடு – எங்கள்
கையிருந்து மாறியது நம் தமிழர் தேசம் அதால்
கண்டு விட்டோம் மாற்றமிலாக் கேடு ஶ்ரீ அந்த
மெய்யுணர்ந்து எம் பெருமை மீட்டெடுக்க
வேண்டுமென்றால் வேண்டாததை எறிந்து போடு.
பட்ட வேதனையை நீ எடுத்துப் பாடு.
பாட்டெடுத்துப் பாடுகிறேன் நாம் பட்ட
பழந்துயரைப் பாடுகிறேன்.

வேறு:

சூர்ப்ப நகை என்ற மங்கையாள் – மனம்
சொக்கும் சுடர் நிறக் கொங்கையாள்
போர்க் குணம் கொண்ட இராவணன் – தன்றன்
பொன்னெனப் போற்றிய தங்கையாள்
மூக்கிலடித்து விட்டன்னியர் – அவன்
முன்றலில் நின்றிடு போதிலே
ஆர்க்கும் இத்தீமை பொறுக்குமோ – அண்ணன்
அன்னியன் பெண்டிலைத் தூக்கினான்

காதல் படுத்திய பாட்டினால் – இளங்
கன்னி இராமனை நாடினாள்
தீதெது நன்றெது தேர்ந்திடா – அந்தச்
சின்னஞ் சிறுசு பின் வாடினாள்
பேதையை ஆரிய ராமனும் – தன்றன்
பின்னவன் மீது திருப்பவே – அந்தக்
காதகன் பெண்மையை நோக்கிடாது – அக்
கன்னியின் மூக்கினிற் தாக்கினான்

என்ன ரகசியம் என்று நாம் – இதை
இன்னும் அறிகிலம் நண்பரே
முன்னைய எம் குலப் பெண்டிர்கள் – இந்த
மூடத்தனமதைச் செய்வரோ
கன்னியின் கற்பினைக் காவுகொண்ட பின்
காதகன் செய்த துரோகமோ – இல்லை
மன்னன் இராவணன் தன்னையே – வீண்
வம்புக் கிழுத்த சதியிதோ

ஆரியர் என்றும் செருக்கராம் – தெற்கை
ஆண்ட எம் முன்னோர் அரக்கராம் – என
பாரினில் அன்றொரு மாயையை – அந்தப்
பாசிச வாதிகள் கொண்டதால்
நாரியர் என்றும் மதித்திடார் – எம்மை
நாயிலும் கீழ்க் கடையாக்கினார் – தங்கள்
காரியம் யாவையும் மெச்சியே – எம்மேற்
காறியுமிழ்ந்தனர் எச்சியே

ஆளும் அரசன் கடவுளென்றந்த
ஆரியர் கொள்கை வகுத்ததால் – இந்தப்
பாழு முலகினில் பொய்நெறி – பண்டை
நாளில் பரவிய கீழ்மையால்
நாளும் பொழுதும் வணங்கிடும் – தெய்வ
நாயகராய் இந்தக் காதகர் – எங்கள்
வாழ்வில் புகுந்தனர் அன்றுகாண்
வரலாற்றில் படிந்த கறை இதாம்

ஆரிய ராமன் கடவுளாம் – எம்மை
ஆண்ட இராவணன் மூர்க்கனாம் – என
காரியவாதிகள் கூறியே – பெருங்
காவியம் பற்பல ஆக்கினர்
மாரீசனின் தண்ட காரண்யம் – அந்த
வாலியின் கிட்கிந்தை யாவையும் – இந்தப்
பாரினில் அன்று தமிழ் நிலம் – கொடும்
பாவிகளாற் பறிபோனதே

வேறு:

தாய் மண்ணைத் தனதாக்கி அயோத்தி மீண்ட
தயரதனின் புத்திரனின் வரவால் அன்னான்
தேயத்து மக்களெலொம் எழுச்சியுற்று
தீப ஒளி ஏற்றினராம் அந்நாள் தன்னை
பேயர்கள் நாம் கொண்டாடல் சரியோ! தந்தை
பெரியாரும் இதையேதான் கேட்டார் ஆனால்
வாயில்லாப் பூச்சிகளாய் வடவர் காட்டும்
வழிதனையே பின்பற்றுகின்றோம் நாங்கள்.


எதிரிதனை வாழ்த்துகிறோம் இந்த நாளில்
இது வேண்டாம் தமிழினமே எழுச்சி பெற்று
உலகினிலே ஒரு புதிய புரட்சிப் பாதை
உருவாக்கி சீனமக்கள் செய்துவிட்ட
விதி போன்றே புதிய விதி நாமும் செய்வோம்
வீணர்களாய் அறிவிழந்தெம் பெருமைகெட்டு
கதியான்று மில்லாதா ராகி அந்தக்
கடவுளரைத் துணைக்கெடுக்கும் கயமை வேண்டாம்.

ஆதலினால் தமிழினமே! தீபாவளி எமக்கு
தீராவலியூட்டி சீரழித்த நாள். – வேண்டாம்.
அனைத்து மதத்தவரும் அனுசரித்து மகிழ்ந்திடற்கு
உழவர் திருநாளுண்டு தமிழர் திருநாளதுதான்.

– முற்றும் –

*- யுகசாரதி*

# தமிழறிஞர் பேராசிரியர் வேலுப்பிள்ளை மறைவு



தமிழ் மொழியியல், சமயம் போன்ற துறைகளில் ஆய்வுகளைச் மேற் கொண்ட புலமையாளர் பேராசிரியர் ஆழ்வாப்பிள்ளை வேலுப்பிள்ளை நொவெம்பர் முதலாம் திகதி சான் பிரான்சிஸ்கோவில் காலமானார். இலங்கையில் பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், இந்தியாவில் கேரளா பல்கலைக்கழகம், சுவீடன் உப்சாலா பல்கலைக் கழகம், ஐக்கிய அமெரிக்காவில் வேர்ஜீனியா, அரிசோனா பல்கலைக்கழகங்களிலும் பணியாற்றிய பேராசிரியர் வேலுப்பிள்ளை மொழியியல் தொடர்பான பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

1990 களில் சுவீடன் உப்சாலா பல்கலைக்கழக்கத்தில் அவர் பணியாற்றிய போது பேராசிரியர் பீற்றர் சால்க் அவர்களுடன் இணைந்து தமிழ் புத்தமதக் காவியமான மணிமேகலை பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டார்.

ஈழத்து தமிழ்க் கல்வியாளர்களான பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் பத்மநாதன், பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் சண்முகதாஸ் ஆகியோர் வரிசையில் சமகாலத்தவராக இருந்த பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்களும் பல்கலைக்கழக தமிழ்த்துறைக்கு பெரும் பங்காற்றினார்.

1936ம் ஆண்டு வடமராட்சி புலோலி தெற்கில் பிறந்த பேராசிரியர் வேலுப்பிள்ளை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்றதுடன் , லண்டன் பல்கலைக்கழத்தில் தனது ஆய்வுத்துறை கல்வியை மேற்கொண்டு முவைர் பட்டத்தினையும், பின்னர் இலக்கியத்தில் D Lit பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்.

# எமக்காக ஒலித்த பாடகன் கைது - இந்தியத் தூதரகத்தின் முன்பாகப் போராட்டம்!

கலை என்பது பிழைப்பிற்கானது அல்ல ! மக்களுக்கானது ! நமது காலத்தில் கோவன் என்ற கலைஞன் அதனை எமது கண்முன்னே நிறுவியுள்ளார். தமிழ் நாடு மானில அரசால் கைதுசெய்யப்பட்டு தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கோவன் என்ற கலைஞன் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலித்தவர். தொண்ணுறுகளில் ரஜீவ் கொலையின் பின் ஜெயலலிதா அரசால் ஈழத் தமிழர்களும், ஈழ ஆதரவாளர்களும் தேடித் தேடிக் கைது செய்யப்பட்ட போது, கோவனின் உணர்ச்சிப் பாடல்கள் தமிழகத்தில் ஈழ மக்களின் குரலாக ஒலித்தது. வன்னியில் இனப்படுகொலை நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் கோவன் சார்ந்த மக்கள் கலை இலக்கியக் கழகம் தமிழகம் எங்கும் போராட்டங்களை நடத்திற்று. இன்று குக்கிராமங்களிலும், தெரு முனைகளிலும் தமிழக அரசால் திறந்து வைக்கப்பட்டுள்ள மதுபானக்கடைகள் தமிழர்களை மெல்லக் கொல்லுவதற்கு எதிராக கோவனின் குரல் ஓங்கி ஒலித்தது. அதனைச் சகித்துக்கொள்ள முடியாத தமிழக அரசு கோவனைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளது.

நாளைய சந்ததியின் வாழும் முன்னுதாரணமான கோவன் என்ற புரட்சிகரக் கலைஞனின் குரலை மௌனிப்பதற்காக அவரைச சட்டவிரோதமாக தமிழக அரசு சிறையிலடைத்துள்ளது. இன்றும் ஒடுக்குமுறையின் கோரக் கரங்களுக்குள் வாழும் ஈழத் தமிழர்களின் புலம்பெயர் அங்கங்களான நாம், எமக்காகக் குரல்கொடுத்த அந்த அரிய கலைஞனின் விடுதலைக்காகக் குரல் கொடுக்கத் தவறினால் வரலாறு எம்மீது பழி சொல்லும்.

அமெரிக்காவையும், இந்தியாவையும் மேற்கையும் நம்பி தோற்றுப் போனது போதும் !. கோவன் போன்ற மனிதநேயம் மிக்க போராளிகளுக்காகக் குரல் கொடுப்போம் !! கோவனை விடுதலை செய்யக் கோரி இந்தியத் தூதரகத்தின் முன்னால் (India House, Aldwych, London WC2B 4NA) எதிர்வரும் திங்கள் மாலை 4 மணிக்கு நடைபெறும் போராட்டத்தில் இணைந்துகொள்வோம்.

*- தகவல் - பறை : விடுதலைக்கான குரல்*


தமிழ் நாடகங்கள் பார்ப்பதற்கு TamilHub ஐ டவுன்லோட் செய்யுங்கள்










TAMIL HUB

Available on the App Store
ANDROID APP ON Google play


BRINGING GREAT FOOD TO LIFE...
Niru BRAND
Nelli
Flavour Drink/ Boisson de saveur
ORANGE SODA
Quento
FALUDA
NO 1 Brand
Niru BRAND®
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk

# எல்லோரும் கொண்டாடுவோம்

யார் பெயரைச் சொல்லியாயினும், எதன் பொருட்டாக இருந்தாலும் எல்லோரும் கொண்டாடுவோம். அது தான் மிகமுக்கியமானது. கொண்டாட்டங்கள் சும்மா உருவானவையல்ல. இயல்பு வாழ்விலிருந்து ஒரு போது விலகி, மனதை மகிழ்வித்து, உடலை புத்துணர்வாக்கி, மீண்டும் இயங்குவதற்கான ஒரு எரிபொருள் தான் கொண்டாட்டங்கள். கொண்டாட்ட மனநிலை தான், கொன்றுபோடும் கொடுமைகளிலிருந்து நம்மை மீட்கின்றது.

மனிதரின் அற்புதமான கண்டுபிடிப்புகளில் ஒன்று கொண்டாட்டம். ஒரு நேர்கோட்டில் பயணிக்க முடியாது என்று நினைத்த மனிதர் ஒரு திருப்பத்தை, வளைவை உண்டாக்க அமைக்கப்பட்டது கொண்டாட்டம். அந்தக் கொண்டாட்டங்களுக்கு மதச்சாயம் பூசப்பட்டது. அதுவே நம் மீது திணிக்கப்பட்ட இக்கட்டு. அதனால் தான், சில வற்றைக் கொண்டாட மனம் சுழிக்கின்றது. சிலவற்றை உச்சகட்டமாக கொண்டாடி துலைக்கின்றோம்.

இப்போது காணுங்கள் தீபாவளி வருகின்றது, அதற்கு ***ஒரு பேப்பர்*** - நாங்கள் என்ன செய்தோம் ? யாருக்கும் தீபாவளி வாழ்த்து சொல்லவில்லை, அது கூட பரவாயில்லை, நரகாசுரனுக்கு வீர வணக்கம் செலுத்தினோம். நரகாசுரன் யார்? தெரியாது. அப்படி ஒருவன் இருப்பின் அவன் திராவிடனா? அதுவும் தெரியாது.

யாரோ ஒருவர் சொன்னார், அல்லது ஒரு கூட்டம் சொல்லிற்று. 'நரகாசுரன் திராவிடன்' என்று. பொய்யும் புனைவும் மலிந்ததே புராணம் என்பதை ஏற்க மறுக்கின்றோம். ஆனால், இந்தப் புராணக் கதையை ஏற்கின்றோம் என்றால் எங்கு தவறு? இதுவும் ஒரு புராணம் தான் என்று நிராகரித்து விட்டு நாம் கொண்டாடியிருக்க வேண்டுமல்லவா?

இவ்வாறான முட்டாள்தனமான கருத்துக்களை நானும் முன்னர் கொண்டிருந்தேன். என் தலையில் இப்போதே மூன்று குட்டுப் போட்டுக் கொள்கிறேன். நாங்கள் மாறுகின்ற போது உங்களையும் மாறச் சொல்லிக் கேட்பது நியாயமல்ல. இப்போது ஒரு கருத்தை விதைக்கின்றோம், அது உங்களில் வீழ்ந்து ஒரு கருத்தை உருவாக்குமானால் அதுவே நியாயம்.

சின்னவயதில் நாம் கொண்டாடித்தானே வாழ்ந்தோம். எப்படா திருவம்பாவை வரும், திருவம்பாவை வரும், பொங்கல் வரும், சிவராத்திரி வரும், சித்திராபறுவம் வரும், புதுவருடம் வரும், அம்மன் கோவில் திருவிழா வரும், ஆடிப் பூரம் வரும், ஆடி அமாவாசை வரும், புரட்டாசி சனி வரும், நவராத்திரி வரும் என்று கொண்டாடுவதற்கான நாள்கள் தானே எங்களது நன்நாள். எந்தக் கொண்டாட்டத்தை நாம் இழந்தோம்?

செத்த வீட்டைக் கூட கொண்டாடி மகிந்தவர் தாம் நாம். துக்கம் கலைக்க கூட்டம் கூடி கதை பேசி கவலைகளை மறந்தே இருந்தோம். எட்டுச் செலவில் அன்றிலிருந்து சோகம் குறைகிறது. அந்தியேட்டி நாளை ஒரு கலியாண வீடோ என நினைத்தோம். சாட்டுக்கு ஒரு கண்ணீர் வடிப்போம். துக்கம் எவர் முகத்திலும் ஒட்டிக் கிடந்ததில்லை. சோகத்தை அப்படியே துரத்தியடிக்க கொண்டாட்டத்தால் அல்லல் வேறு எவற்றினால் முடிந்தது?

ஒரு கணம் நினைத்துப் பார்க்கின்றேன், ஆகப்பெரிய கொண்டாட்டமாக தீபாவளியே அப்போது எங்களுக்கு இருந்தது. அப்பாவுக்கு சம்பளம் வருகின்ற நாளையொட்டி, யாழ்ப்பாணப் பட்டணத்திற்கு நாங்கள் நால்வரின் பயணம் அமைகிறது. எனக்கும் அக்காவுக்கும் திறம் உடுப்பு எடுக்கிறார் அம்மா. துணி மணிகள் எடுக்கிறார். திரைப்படம் பார்க்கிறோம்.

வீட்டுக்கு வந்து பெட்டகத்திற்குள் வாங்கிய உடுப்பை வைக்கிறார் அம்மா. வாங்கிய துணி மணிகளை டெயிலரிடம் கொண்டு போய் கொடுபடுகின்றது. அவர் இழுத்தடித்து தீபாவளிக்கு முதல் நாள் இரவிலேயே தைத்த உடுப்பைத் தருகின்றார். தீபாவளி வரும் நாள் வரை எனக்கு எடுத்த உடுப்பில் புது வாசனையை நுகர்ந்தபடி இருக்கிறேன் நான்.

தீபாவளியன்று விடிய எழுந்து அந்த மழைக் குளிருக்குள் ஒரு தோயல். புது உடுப்பு. கொலரில் மஞ்சள். காலையில் எண்ணெயில் பொரித்த குண்டுத் தோசை. தாளித்த சம்பல். மதியம் இறைச்சிக் கறி. மத்தியானத்திற்குப் பிறகு அடுத்த புது உடுப்பு. அன்றைய நாள் போல என்றும் இனித்த ஒரு நாளை நான் உணர்ந்ததில்லை.

கொள்கை, கோட்பாடு, தத்துவம் என்று எம்முள் பல சாத்தான்கள் இறங்கிவிட்டனவா? இப்பொழுது ஏன் அப்படி இனித்த நாள் எமக்கு வருவதில்லை? தத்துவங்கள் எமக்குள் இறங்குகின்றனவா? தத்துவங்கள் எமக்குள் இறங்குகின்றன, ஆனால் அவை செமித்துக் கொடுப்பதில்லை. வாந்தியாக வெளித்தள்ளுகிறது, அதை வாந்தியாக உணர்கின்றோம் இல்லை நாம். வெளித்தள்ளிய வாந்தியை பிறர் மேல் விசிறுகிறோம். அவற்றுக்கும் ஒரு பெயர் உண்டு 'கொள்கை குன்றார் இலட்சியவாதி'

**இரவி அருணாசலம்**

**எழுதுவது என்னவெனில்**

கார்ல்மார்க்ஸ் வகுத்த மார்க்சீய தத்துவத்தை லெனின் தனது நாட்டுக்கு உகந்ததாக மாற்றினார் என்றும், மாசேதுங் தனது நாட்டுக்கு உகந்ததாக மாற்றினார் என்றும் நாங்கள் மெய் சிலிர்க்கின்றோம். ஆனால், எமது நாட்டுக்கு உகந்த விதமாக நாம் அதனை பயன்படுத்தவில்லை. எமது பண்பாடு, நாகரீகம் என்று எதனையும் புரிகின்றோம் இல்லை.

'பாம்பையும் பார்ப்பனனையும் கண்டால் முதலில் பார்ப்பனனை அடி' என்று பெரியார் சொன்னதை எவ்வித கேள்விகளுமில்லாமல் சொல்கிறோம். இது ஓர் இனத்தின் மீது தீ எறிந்த வார்த்தைகள் அல்லவா? ஏன் எவரும் இதனை யோசிக்கவில்லை. அந்த வாக்கியம் நமது ஈழத்து தமிழ்ப் பிராமணர்களுக்கு பொருந்துமா? மற்றும் பார்ப்பனியத்தையும், பார்ப்பனரையும் பிரித்து அறிய தவறிவிடுகின்றோம்.

'எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்றவர் பெயர் வள்ளுவர். 'யார் என்ன சொன்னாலும், ஏன், எதற்கு, எப்படி என்றுகேள்' அதுசோர்க்கிரடிஸ். 'மதம் ஒரு அவின் என்றார் மார்க்ஸ். அதற்கு தத்துவங்களும் எழுதி வைத்தார். மக்களை ஒடுக்குவதற்கு மதத்தை ஆயுதமாக பயன்படுத்திக் கொண்டனர் ஆதிக்க சக்திகள். அது தான் மதம் மீதான மார்க்சீயத்தின் கசப்பான விமர்சனம். மதம் தரத்தக்க செளுமையான பண்பாட்டை மார்க்சீயம் ஒரு போதும் மறுக்கவில்லை.

மீண்டும் சொல்கிறேன், எல்லோரும் கொண்டாடுவோம். மத நீக்கம் செய்யப்பட்டு, நமது பண்பாடுகளை கொண்டாடுவோம். இல்லாதார் இக்கொண்டாட்டங்களின் ஊடு தான் உயிர்த்து வாழ்கின்றனர். அவர்களது மகிழ்வை நமது வரட்டுத் தனமான கோட்பாடுகளைக் கொண்டு ஏன் மறுப்பான்? எமது பகுத்தறிவின் துணை கொண்டு நீக்க வேண்டியவற்றை நீக்கி, எல்லோரும் கொண்டாடுவோம். எல்லாவற்றையும் கொண்டாடுவோம்.

# பிறந்தநாள் கொண்டாடிய சட்டத்தரணி குற்றவாளிக்கூண்டில்

சென்ற மாதம் தன் பிறந்த தினத்தை உறவினர்கள் நண்பர்களை அழைத்துக் கொண்டாடிய ஸ்ரீகாந்தலிங்கம் குற்?றவாளிக்கூண்டில் அடைக்கப்பட்டார். நீதிபதி செல்லத்தம்பி ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் அவர் குற்றவாளியாக காணப்பட்டார். எனினும், மன்னிப்பு வழங்கப்பட்டு நன்நடத்தைப் பிணையில் செல்ல அவர் அநுமதிக்கப்பட்டார். உயர்வாசற் குன்று முருகன் ஆலயத்தில் தன் உறவினர்கள், நண்பர்களைக் கூட்டி ஸ்ரீகாந்தலிங்கம் கொண்டாடிய பிறந்தநாள் நிகழ்வில் இந்த நீதிமன்ற விசாரணை நடத்தப்பட்டது. அவர் குற்றவாளி அல்ல என கவிஞர் பாவை.ஜெயபாலன், ஈலிங் ஆலய அறங்காவலர் எஸ்.ஸ்ரீரங்கன் அனுசரணையுடன் வாதாடினார். அவர் குற்றவாளியென தமிழ் உணர்வாளர் த.ராஜமனோகரன், சட்டத்தரணி அமுதன், ராஜகாரியரின் அனுசரணையுடன் வாதிட்டார்.

சுவையான இந்த வாதத்தை சபை நன்கு ரசித்தது. சட்டத்தரணி ஸ்ரீகாந்தலிங்கம் தான் பிறந்தநாள் கொண்டாடுவது சரியானதா என்று தனக்குள் எழுந்த சந்தேகத்தை இவ்வாறு வழக்காடு மன்றமாக்கி புலம்பெயர் தமிழ் சமூகத்திற்கு உணர்த்தியிருந்தார். தேசிய கேளிக்கை தடுப்புச் சட்டம், சிக்கன வாழ்வு நெறிச்சட்டம் ஆகியவற்றை அவர் மீறியதாக அவர் மீது இந்த வழக்கு விசாரணை குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

ஈழத்தில் சட்டத்தரணி ஸ்ரீகாந்தலிங்கம் அவர்களின் பேருதவியுடன் நடக்கும் Organ இயக்கம் மனநிலை குன்றிய பள்ளி இயக்குநர் வெள்ளையன் சுப்ரமணியம் ஒளிப்பேளையூடாக அவர் குற்றவாளி இல்லை என்ற தரப்புக்காக சாட்சியம் அளித்திருந்தார். கரவை கவியவர்களும் சாட்சியம் அளித்தார். பிறந்த நாள் பரிசாக அன்பளிப்புகளை ஏற்றுக் கொள்ளாத ஸ்ரீகாந்தலிங்கம் அந்த அன்பளிப்புகளை ஓகான் நிறுவனத்திற்கு வழங்குமாறு கூறியிருந்தார். பெருந்திரளாக பலர் கலந்து கொண்ட இந்த விழாவில் பிரதான நிகழ்ச்சியாக வழக்காடு மன்றம், உலங்குவானூர்தி, குதிரைவண்டி என்று பயன்படுத்தி கோலாகலமாக கொண்டாடப்படும் லண்டன் கொண்டாட்டங்களை சமூகம் ஒரு வெறுப்புடன் பார்ப்பதற்கான தூண்டுகோலாக அமைந்தது எனலாம்.

*- பாவை ஜெயபாலன்*

# Political Participation Of ..

*[ Continued from page 05]*

The unsolved prolonged Tamil political issue particularly creates a space where the dominant Tamil political party and their appointed candidates from a similar caste or social background to become as leaders. The prolonged political issues and war related wounds once and again support such political leadership. This makes the task much easier in consolidating the sentiment of Tamils towards the Vellalar Tamil national project. It rarely gives an opportunity for those who do not have such backgrounds. In such a context, if the oppressed castes need to have an equal opportunity in accessing to political power, it is also essential to find a long-lasting political solution for the prolonged ethnic conflict.

By saying this, I do not simply motivate caste-based political mobilisation in Tamil nationalist politics, as it is in India. I also strongly believe that the solution for the contemporary conservative Tamil political mobilisation cannot be achieved simply by inducing the caste-based sentiment in Tamil nationalist politics. Such intention may satisfy those who want to divide the cohesion of Tamil political mobilisation. I do not expect to satisfy those who take advantages by dividing people in the line of caste. I also do not see such a space for engaging caste divided politics in the contemporary Jaffna. My concern in this paper is to lead the Tamil nationalist politics as a progressive movement rather than a conservative one bonding with a particular dominant caste, as it is now.

Coming to the point that I made at the beginning even though the oppressed caste groups are numerically high and mobilising themselves upwardly in socio-economic and educational domains, they consistently fail to articulate their social capital in their political participation apart from voting to the Vellalar candidates. This situation needs to be changed. The contemporary Tamil nationalist politics should create such a space where all people irrespective of caste differences participate for a progressive social change. Even though the Tamil politicians particularly the TNA say that they do not see caste in their selection process of candidates as well as supporting a candidate to become as a potential leader, it is not true. They consciously do it in contrast to what they say.


பிரித்தானியா

TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312



உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?

TEL: 647 724 4188 FAX : 416 438 7855

கனடா

# ஊரில் வளர்ந்த சமய உணர்வு

தாயகத்தைப்போல புலம்பெயர் நாடுகளில் சமய பாடம் பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடம் இல்லை. எங்கள் பிள்ளைகளை ஆலயங்களுக்கு நாங்கள் அழைத்துச் செல்லும்போது அவர்கள் இந்து சமயம் பற்றி கேட்கும் கேள்விகள் சிலவற்றுக்கு எமக்கே பதில் தெரியாது. ஆனால், எங்களிடம் இறை நம்பிக்கை ஊறி வளர்ந்திருக்கிறது. இன்றும் இங்கும் இறை நம்பிக்கையோடே வாழ்கின்றோம். தைப்பொங்கல் முதலாக தமிழ்ப் பள்ளிகளில் நடக்கும் ஆண்டு விழாக்கள் வரை தமிழ் விழாக்களை இன்றும் இங்கும் நாங்கள் இந்து முறைப்படி குத்து விளக்கு நிறைகுடத்துடன் விபூதி சந்தனம் வைத்துத் தான் கொண்டாடுகிறோம்.

ஈழத்தமிழர்கள் அரசியலில் சமய வெறி ஊட்டப்பட்டவர்கள் அல்லர் என்பது ஒரு ஆறுதலான விடயம். அறப்போர் அரசியலில் தமிழர் ஏற்றுக் கொண்ட தலைவர் தந்தை செல்வா மறைப்போர் அரசியலில் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம், ஆகிய இருவரும் கூட கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தவர்கள் தான். ஆனால், ஈழத்தமிழர்களின் அன்புக்கும் பாசத்துக்கும் நம்பிக்கைக்கும் உரியவர்களாக இந்த இருவரும் திகழ்ந்தார்கள். இறை பக்தி, சமய பக்தி என்பன ஒழுக்கமான வாழ்க்கை நெறியை வகுத்துச் செல்ல வழிவகுக்கும் என்பது அனைவரும் ஏற்றுக் கொண்ட உண்மை. நாத்தீயம் பேசிய திராவிடக் கட்சிகளே இன்றே அல்லது என்றோ அவற்றை கைவிட்டு விட்டன.

இந்நிலையில் புலம்பெயர் சந்ததியினரிடையே இறை நம்பிக்கையை வழிப்படுத்தவும் வழிபாட்டு முறை சமய அறிவு என்பனவற்றை அறிய, அழிய வழி செய்யும் நோக்குடனும் சட்டனில் கூட்டு வழிபாட்டு பஜனை ஒன்று பூசையுடன் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது தொடரும் என்றும் கூறப்பட்டது. சட்டன் தமிழ்ப்பள்ளி, சட்டன் மூத்தோர் நிலையம் என்பனவற்றை உருவாக்கி இயக்குபவர்களின் ஏற்பாடு இது. இந்த நிகழ்வின் போது தாயகத்தில் எம்மிடம் சமய அறிவு எம்மிடம் இயல்பாகவே எவ்வாறு ஏற்பட்டது என்ற எண்ணம், என்னுள் பல நினைவுகளை இரை மீட்டன. வீடு, ஊர், சமூகம் என்று பரம்பரை பரம்பரையாக நாங்கள் பேணி வந்த வாழ்ந்து வந்த கிராமிய வாழ்க்கை முறை பெற்றோர் வழியாக எங்களிடமும் ஊறியது. செவ்வாய், வெள்ளி என்றால் உற்சவ நாட்கள் என்றால் சுத்த சைவம் பேணும் வாழ்க்கை முறை வளர்க்கப்பட்டவர்கள் நாங்கள். இன்றும் காலையும், மாலையும் வீட்டில் கடவுள் வழிபாட்டில் தினமும் ஈடுபடும் பழக்கத்தை பெற்றோர் எமக்கு ஏற்படுத்தி விட்டுள்ளார்கள். குறித்த கோவில்களில் உற்சவ காலங்களில் ஊரே விரதம் அனுஷ்டிக்கும். வீடு கழுவி சைவப் பாத்திரங்கள் மினுக்கி, முற்றத்தில் சாணகம் தெளித்து சாம்பிராணி வாசம் மணக்க வீட்டில் ஒரு பக்தி மனம் கமழும். வழமையாக குடிபோதையில் இருப்பவர்கள் கூட உற்சவ காலங்களில் அதனை விட்டு விடுவார்கள். ஐப்பசி வெள்ளி அதிகாலைப் பூசை, உற்சவகால கொடித்தம்ப பூசை என்று அம்மா மாவிட்டபுர கோவிலுக்கு போகும்போது அவவின் கையைப் பிடித்தபடியே கோவிலுக்குப் போவதில் ஒரு அவா வழமையாகப் போக வைத்தது.

ஆடிச் செவ்வாய்ப் பூசைக்கு அம்பனை வயல் வரம்பில் நடந்து மாத்தனை வழியாக துர்க்கையம்மன் கோவிலுக்கும், புரட்டாதிச் சனி என்றால் சிவன் கோவிலுக்கும், திருவம்பாவை அதிகாலை பூசைக்கு அம்பனை வைரவர் கோவில் என்றும் அம்மாவோடு போய் வந்த பழக்கம் வளர்ந்த போதும் இன்றும் வழக்கமாக எங்களில் ஊறிக் கொண்டது. நான் படித்த மகஜனக் கல்லூரிக்குள்ளேயே ஒரு நடராஜர் ஆலயம் இருக்கின்றது. தினமும் காலைப் பூசை குறித்த நேரத்துக்கு ராசாக் குருக்கள் வந்து செய்து வந்த பிறகு தான் பள்ளிக்கூடம் நடக்கும். விசேட சமய நாட்களில் அந்தக் கோவிலிலும் அபிஷேகங்கள் பாடசாலை தொடங்க முன்னர் நடத்தப்பட்டது. அயல் திருக்கோவில்கள் கொடியேறி விரதம் அனுஷ்டிக்கும் ஆர்வம் ஒன்பது வயது முதல் எனக்குள் ஏற்பட்டது. மாவிட்டபுர உற்சவ 25 தினங்களும் குடும்பத்தோடு சேர்ந்து விரதம் இருக்க ஆரம்பித்தேன். ஆவணி ஞாயிறுகளிலும் விரதம் அனுஷ்டிக்கும் பழக்கம் இருந்தது. மதியம் பொங்கல் சாப்பாடு, மாலை இருளும் முன்னர் ஏதாவது பலகாரமோ இடியப்பமோ, புட்டோ சாப்பிடும் முறையாக இருந்தது. கடைசி ஞாயிறு கோலம் போட்டு முற்றத்தில் பொங்கும் வழக்கம் எங்கள் ஊரில் அந்த நாட்களில் ஆவணி விரதமாக கொண்டிருந்தது. பிள்ளையார் சுழி போட்டு எழுத ஆரம்பிப்பது, பரீட்சை எழுது முன்னர் ஆலயத்திற்கு சென்று சிதறு தேங்காய் அடித்து வழிபடுவது, விஷம் கடித்தால் விஷ கடி வைத்தியரை போய் அவரிடம் திருநீறு போட்டு பார்வை பார்ப்பது, வீட்டை விட்டு வெளியே செல்லும் போது நல்ல சகுணம் பார்ப்பது. மிளகாய் உப்பு தடவி நாவூறு பார்ப்பது, வீட்டுக்கு முன்பாக நீத்துப்பூசணி வெருளி கட்சி நாவூறு தவிர்ப்பது. செய்வினை, சூனியம் என்று சின்னச் சின்ன நம்பிக்கை எமக்குள் ஏற்படுத்தப்பட்டடு விட்டது.

பஞ்சமி திதியில் இறப்போர் ஆத்மசாந்திக்கு ஏழு கோழிக்குஞ்சுகளை சவத்துடன் சேர்த்து சுடலையில் கொண்டு சென்று விடும் பழக்கமும் இருந்தது. இவை, பஞ்சாங்கம், திதி, நாள், நட்சத்திரம் என்ற நம்பிக்கை அன்று முதல் இன்றும் எங்களுக்குள் ஒட்டிக் கொண்டு வளர காரணமாகியது. இந்த மத நம்பிக்கைகள், மாந்தீரிகம் உண்மை என நம்பும் நடப்புகளும் இடம்பெற்றன. சாதாரணமாக பாம்பு கடித்து விஷம் ஏறி அடக்கத்தில் இருப்போரை பார்வை பார்த்து விஷம் இறக்கும் பலர் இருக்கின்றார்கள். மானிப்பாயில் ராசதுரை என்பவர் திறந்த நிலையில் விஷம் கடித்தவரை வளர்த்தி மந்திர உச்சாடங்களால் வானத்தில் கருடணை வரவழைத்து அதன் மூலம் விஷக் கடியை குணப்படுத்துவதில் வல்லமை பெற்றிருந்தார். இறக்கும் தறுவாயில் இருப்போர் கூட இவர் மூலம் உயிர் பெற்ற சம்பவங்கள் இடம் பெற்றிருக்கின்றது. இவர்கள் இலவசமாகவே பரம்பரை பரம்பரையாக தாங்கள் பெற்ற சிகிச்சை முறையை செய்து வந்தார்கள். பணம் வாங்கினால் சிகிச்சை பலிக்காது என்று அவர்கள் நம்பினார்கள்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

லண்டனில் வந்திருந்த சாத்திரிகள் இருவரிடம் நானும் போயிருந்தேன். பிறப்பு வளர்ப்பு, பெற்றோர், திருமணம் என்பனவற்றை பெயர் விபரம், ஆண்டு விபரத்தை சரியாக சொன்ன அவர்கள் நான் பிறந்து 6 மாதத்தில் இறந்துபோன தந்தையார், அயல் நாட்டில் பிறந்ததாக சொன்னார்கள். நான் மறுத்தேன். பாரதத்தில் ஒரு சிவ தலத்தின் அருகே பிறந்தவர் என்று உறுதிபடக் கூறினார்கள். அது உண்மை என்றும் தஞ்சாவூரில் பிறந்ததால் தான் அங்குள்ள திருத்தல மூர்த்தியின் வைத்தீஸ்வரன் என்ற பெயர் வைக்கப்பட்டதாகவும் மூத்த அண்ணர் உறுதிப்படுத்தியபோது ஆச்சரியமாக இருந்தது. நம் முன்னோர் இறை பக்தியை எமக்குள் உர்த்தி வளர்த்தார்கள். எளிமையான, ஆரோக்கியமாக வாழ்க்கை முறையை கடைப்பிடிக்க வைத்தார்கள். இன்று மாற்றுக் கலாசார சூழலில் புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்றோம். இங்கேயே எங்கள் வாழ்க்கை நிலைத்து விட்டது. எம் சந்ததியினரிடையே சமய உணர்வும், ஒழுக்கநெறியும் மேம்பட ஆத்மீக உணர்வின் மூலம் அமைதியான வாழ்வை அமைத்துக் கொள்ள நாங்கள் ஆவண செய்து தானே ஆக வேண்டும்.

# சட்டன் தமிழ்ப் பள்ளியின் நவராத்திரி விழா










சட்டன் தமிழ்ப்பள்ளி, சட்டன் மூத்தோர் வட்டம் ஆகியனவற்ற ஆரம்பித்த சட்டன் தமிழ்ச் சங்கம் சென்ற நவராத்திரி மகா நவமி தினத்தில் தமிழ்ப் பள்ளியின் விழாவோடு கூட்டு வழிபாடு நிகழ்வையும் ஆரம்பித்து வைத்தது. பஜனை, பூஜை, சமய நெறி உரைகள் என்பவற்றுடன் வெள்ளிக்கிழமைகளில் தொடரவுள்ள இந்தக் கூட்டு வழிபாடு புலம்பெயர் தமிழ் சந்ததியை இறை பக்தி, சமய அறிவு, ஒழுக்கநெறி என்பவற்றில் ஆர்வமூட்டுவதை நோக்கமாக கொண்டதாக ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டது.



நன்றி - விகடன்

High Commission of India, London has received a notice of intend marriage from Mr.Solvejit Singh, S/o Anoop Singh, holder of Indian Passport No.L1195729 and Miss Mandeep Kaur, D/o Jagdev Singh, Holder of Indian passport No. F6854871 under the foreign Marriage Act, 1969 of India. Objection, if any (along with valid reasons), to the intended marriage may be conveyed to the High Commission of India, London within 30 Days of publication of this notice at the following address:

First Secretary (Consular)
High Commission of India,
India House, Aldywch,
WC2B 4NA

Email :- fs.cons@hcilodon.in

# தமிழர் விவகாரத்தை கையாள்வதற்கான பொதுக்கொள்கை



**A. நிக்சன்**

பரணகம அறிக்கை எந்த அடிப்படையில் முன்வைக்கப்பட்டது என்ற கேள்விகள் தற்போது எழுகின்றன. காணாமல்போனோர், கடத்தப்பட்டோர் பற்றிய விடயங்களை மாத்திரம் விசாரணை செய்து அறிக்கையிடுவதற்காகவே இந்த ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டது. இதன் பின்னர் எல்.எல்.ஆர்.சி. எனப்படும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டது.

### சட்டத்தரணியின் கேள்வி

இந்த ஆணைக்குழுவிலும் பரணகம உறுப்பினராக பதவி வகித்தார். ஆகவே, குறிப்பிட்ட ஒரு சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் ஒருவர் அந்தச் சம்பவங்களுடன் தொடர்புள்ள வேறு விடயங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்படும் ஆணைக்குழுவிலும் எவ்வாறு அங்கம் வகிக்க முடியும் என சட்டத்தரணி காண்டீபன் கேள்வி எழுப்பியுள்ளார். அத்துடன், பரணகமவுக்கு வழங்கப்பட்ட சம்பளம் தொடர்பாகவும், ஆலோசனைகள் பெறப்பட்ட முறையிலும் அவர் சந்தேகத்தை எழுப்பியுள்ளார்.

இந்த நிலையில்தான் பரணகம ஆணைக்குழு அறிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எந்த அடிப்படையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பிள்ளார். பரணகம அறிக்கையின் அடிப்படையில் போர்க்குற்ற விசாரணைகளும் நடைபெறலாம் என்ற சந்தேகத்தையும் அவர் வெளியிட்டுள்ளார். ஆகவே, இனப்பிரச்சினை இருக்கின்றது, அதற்குரிய அரசியல் தீர்வு ஒன்றை முன்வைக்க வேண்டும் என்ற சிந்தனை சிறிதளவு கூட இல்லாத நிலையில் இலங்கை அரசு என்ற கட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ள அபகீர்த்தியை எவ்வாறு நீக்குவது என்பதில்தான் பிரதமர் ரணிலுக்கு அக்கறை என்ற முடிவுக்கு வரலாம்

### வேறுபாடுகள் இல்லை

இந்த இடத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அணுகுமுறைக்கும் மைத்திரிபால சிறிசேன அரசின் அணுகுமுறைக்கும் இடையே பாரிய அளவில் வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை என்பதையும் காணக்கூடியதாக உள்ளது. முடிந்தவரை படையினர் மீதான குற்றச்சாட்டுகளை தவிர்ப்பதுதான் இந்த அரசின் நோக்கம் என கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன கூறியிருந்தார். ஜனநாயகத்தை நிலைநாட்ட சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்க வேண்டும் என கூறிய அவர், அதற்குரிய 19ஆவது திருத்தச் சட்டத்தைக் கூட நடைமுறைப்படுத்த பிரதமர் ரணில் முற்படவில்லை என்றும் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஆகவே, இனப்பிரச்சினையின் வரலாற்றை நோக்கினால் முன்னைய அரசு தமிழர் தொடர்பாக எடுத்த நிலைப்பாட்டை பின்னர் பதவிக்கு வரும் அரசு கையாண்டு வந்துள்ளது என்பதைத்தான் அறியமுடிகின்றது. ஆக, கட்சிகள், தலைவர்கள் வேறுபடுகின்றனர். ஆனால், தமிழர் தொடர்பான செயற்பாடுகளில் மாற்றங்கள் இல்லை என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசிலும் அடையாளப்படுத்தலாம் என்பதை விக்கிரமபாகு கருணாரத்ன சொல்லாமல் சொல்கின்றார்.

### சுயாதீன ஆணைக்குழுக்கள்

19ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் அரச நிறுவனங்களை சுயாதீனமாகச் செயற்படுத்த அனுமதிக்க வேண்டும் என எந்த ஒரு ஆணைக்குழுவின் அறிக்கையிலும் கூறப்படவில்லை. ஆனால், தேர்தலை காண்காணிக்கும் ஐரோப்பிய ஒன்றியம் அந்த அழுத்தத்தை கொடுத்துள்ளது. ஆனால், அதற்கு விளக்கமளித்துள்ள அமைச்சர் ராஜித சேனாரத்ன பரணகம ஆணைக்குழுவும் எல்.எல்.ஆர்.சி. ஆணைக்குழுவும் அரச திணைக்களங்களை சுயாதீனமாக செயற்பட அனுமதிக்க வேண்டும் என எந்த ஒரு இடத்திலும் கூறவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், அரச நிறுவனங்கள் சுயாதீனமாக செயற்பட வேண்டும் என்ற ஆலோசனையை ஐரோப்பிய ஒன்றியம் முன்வைக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியம் 19ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக கூறிய விடயங்கள் நடைமுறை அரசியல் யாப்பில் செய்யப்பட்ட ஒரு திருத்தம்தான். அந்தத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு கோருவதற்கு யாருக்கும் உரிமை உண்டு. அதாவது, ஜனநாயக கட்டமைப்புகள் தொடர்பாக நாடுகளிடையே உள்ள அமைப்புகள், ஒன்றியங்கள் கருத்துக்களை வெளியிட முடியும். குறிப்பாக இலங்கைக்கு உதவி வழங்கும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புகள் பொருளாதார திட்டங்கள் தொடர்பாக முன்வைக்கும் யோசனைகளின் அடிப்படையில் கூட பொருளாதாரச் சட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

**19ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் அரச நிறுவனங்களை சுயாதீனமாகச் செயற்படுத்த அனுமதிக்க வேண்டும் என எந்த ஒரு ஆணைக்குழுவின் அறிக்கையிலும் கூறப்படவில்லை. ஆனால், தேர்தலை காண்காணிக்கும் ஐரோப்பிய ஒன்றியம் அந்த அழுத்தத்தை கொடுத்துள்ளது. ஆனால், அதற்கு விளக்கமளித்துள்ள அமைச்சர் ராஜித சேனாரத்ன பரணகம ஆணைக்குழுவும் எல்.எல்.ஆர்.சி. ஆணைக்குழுவும் அரச திணைக்களங்களை சுயாதீனமாக செயற்பட அனுமதிக்க வேண்டும் என எந்த ஒரு இடத்திலும் கூறவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.**

### பிரதான அரசியல் நோக்கம்

இந்த நிலையில், அமைச்சர் ராஜித சேனாரத்ன ஐரோப்பிய ஒன்றியம் குறித்து கூறிய விடயங்கள் ஏற்புடையவை அல்ல. பரணகம மற்றும் எல்.எல்.ஆர்.சி. ஆணைக்குழுக்கள் இலங்கை அரசால் நியமிக்கப்பட்டவை. ஆனால், அதன் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் உண்டு. பிரதானமாக தமிழர் தொடர்பான விடயங்களில் இலங்கை அரசு என்ற கட்டமைப்புக்கு சேதம் விளைவிக்காமல் அறிக்கையை தயாரிப்பது என்ற அரசியல் இருக்கும். அந்த அடிப்படையில்தான் இரு ஆணைக்குழுக்களும் அறிக்கையை வெளியிட்டுள்ளன. அந்த துணிச்சலுடன் தான் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

**இந்த இடத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அணுகுமுறைக்கும் மைத்திரிபால சிறிசேன அரசின் அணுகுமுறைக்கும் இடையே பாரிய அளவில் வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை என்பதையும் காணக்கூடியதாக உள்ளது.**

ஆகவே, சர்வதேச அணுகுமுறையை அல்லது மத்தியஸ்த்த முயற்சியை தவிர்ப்பது, இலங்கை அரச என்ற கட்டமைப்பில் இருக்கக் கூடிய அதிகாரங்களை பகிராமல் தடுப்பது, வெறுமனே நிர்வாகத்தை மாத்திரம் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு பரவலாக்கம் செய்வது என்ற மூன்று காரணங்களின் அடிப்படையில் இந்த அரசு செயற்படுகின்றது. இந்த அரசியலின் பின்னணில்தான் பரணகம அறிக்கை மற்றும் ஜெனீவா மனித உரிமை பேரவை ஆணையாளரின் அறிக்கை போன்றவற்றை அரசு முக்கியப்படுத்தி பிரச்சாரங்களை செய்கின்றது. இந்த அரசியல் அணுகு முறைக்கு எதிர்ப்பை வெளிக்காட்டினாலும் உள்ளார்ந்த ரீதியில் மஹிந்த ராஜபக்ஷ அணியும் ஆதரவு வழங்கும் நிலை உண்டு.

### தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

இந்த நிலையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எந்த வகையான அரசியல் செயற்பாடுகளை கையாள்கின்றது என்ற கேள்விகளும் எழுகின்றன. அரசின் மேற்படி அணுகுமுறைகள் தூரநோக்கு சிந்தனை கொண்டவை என விமர்சகர்கள் கூறும் நிலையில், இரண்டு பிரதான விடயங்களை கூட்டமைப்பு முதலில் கையாள வேண்டும். ஒன்று, இனப்பிரச்சினையின் சர்வதேச ஆதரவு தளத்தைத் தொடர்ந்து எவ்வாறு பேணுவது என்பதும், புவிசார் அரசியலுக்கு ஏற்ப தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளுக்கான தீர்வை தயாரிக்க வேண்டியதும் அவசியமாகும். இரண்டாவது, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் இலங்கை அரசு என்ற கட்டமைப்பு சார்ந்த தூர நோக்கு சிந்தனைக்கு வலுச்சேர்க்கும் செயற்பாடுகளில் இருந்து விலகி நிற்க வேண்டும்.

ஆக, இந்த இரண்டு விடயங்களிலும் உடனடி கவனம் தேவை. குறிப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்பதை விட சம்பந்தன் - சுமந்திரன் ஆகியோரை உள்ளடக்கிய இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்த இரு விடயங்களிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல் தமிழர் விவகாரத்தை எப்படி கையாள்வது என்பதற்கான ஒரு பொதுக் கொள்கை சிங்கள கட்சிகளிடையே உருவாகிவிடும்.

*நன்றி - maatram.org*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

**seven | zero**
graphic designers
**020 7043 4310**
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP



creative artwork from **concept to design**

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: **info@orumanam.com**



## மணமகள் தேவை

1. 32 வயது, 5’8” Divorced, Born and brought up in UK. Finished degree in MSC IT and PGCE computer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5635.

2. 29வயது, 5’7” work permit, Finished degree in Business management. Working in an American company as a product manager, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5636.

3. 35வயது, 5’8” Student visa, Finished degree in Bsc, Msc in engineering. working as an engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5642.

4. 34 வயது, 5’8” Student visa, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5643.

5. 30 வயது, 6’0” Born and brought up in uk Graduate in actuarial science. working in london, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5644.

6. 29 வயது, 5’7” work permit, Finished degree in Bsc hons in commercial management & quantity surveyor. working as a quantity surveyor, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5646.

7. 34 வயது, 5’8” British citizen, Graduate working in a Lawyer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 611.

8. 37 வயது, 5’8” Asylum seeker, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5615.

9. 35 வயது, 6’0” Doctor, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5617.

10. 32 வயது, 5’8” asylum seeker, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5620.

11. 34 வயது, 5’8” British citizen graduate, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5622.

12. 33 வயது, 5’6” Divorced Asylum seeker, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5623.

13. 38வயது, 5’7” Living in Uk, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5624

14. 38 வயது, 5’9” Graduate work permit. working as a Civil engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5630.

15. 31 வயது, 5’6” Born & brought up in Uk. Doctor, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5406.

16. 39 வயது, 5’6” Post graduate visa. Doctor, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 4532.

17. 38 வயது, 5’8” British citizen. Graduate, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 3737.

18. 38 வயது, 6’1” Finished degree BA honours Accounts & Finance. Now working as an accountant, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5593.

19. 35 வயது, 5’9” Divorced Asylum seeker, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5594.

20. 37 வயது, 5’6” British citizen working in a restaurant, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5595.

21. 29 வயது, 5’11” Born & brought up in Uk Graduate working as an IT consultant for a Banking group, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5599.

22. 29 வயது, 5’10” Born & brought up in Switzerland working as a finance sales controller in swiss, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5604.

23. 47 வயது, 5’5” British citizen, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5605.

24. 32 வயது, 5’5” British citizen Graduate working as a Technical IT, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5607.

25. 51 வயது, 5’4” British citizen now doing a business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5610.

26. 28 வயது, 5’6” British citizen, catholic graduate now working in a credit trading french company as an analyst தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5569.

27. 29 வயது, 5’4” Living in UK working in a shop manager, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5581.

28. 37 வயது, 5’3” British citizen, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5371.

29. 41 வயது, 6’0” British citizen. Finished degree in MA in computer holding a good job in same field, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5550.

30. 37 வயது, 5'6" Temporary visa finished BA economics now working in a petrol station தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5547

31. 33 வயது, 5'6" living in France தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5549

32. 37 வயது, 5'7" British citizen, doctor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5554

33. 31 வயது, 5'8" Living in sri lanka finished degree in Bsc bio technology working in a private company in colombo தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5551

34. 25 வயது, 5'10" student visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5555

35. 29 வயது, 5'3' refugee visa, Graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5558

36. 28 வயது, 5'7" Student visa, Graduated in MA in marketing தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5559

37. 35 வயது, 5'8" British citizen finished degree in computer network engineering working in a IT own company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5565

38. 35 வயது, 6'0" student visa finished degree Msc தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5568

39. 38 வயது, 5'9" British citizen working in a NHS தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5500

40. 47 வயது, 5'6" British citizen Graduate IT software consultant working for leading IT consultancy in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1213

41. 33 வயது, 5'5" Discretionary visa working as an electrical / electronic engineer in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5218

42. 34 வயது, 5'6" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5535

43. 41 வயது, 6'0" British citizen தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5542

44. 33 வயது, 5'11" work permit graduate working in a Information technology தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4579

45. 43 வயது, 5'8" Canadian citizen graduate working as an engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5520

46. 29 வயது, 5'5" British citizen graduate working in a services industry தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 5521

## மணமகன் தேவை

1. 29 வயது, 5’3” Born & brought up in Uk. Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5632.

2. 24 வயது, 5’2” Born & brought up in Uk. Now working in a supermarket manager, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5637.

3. 31 வயது, 5’5” Born & brought up in Uk. Finished master degree in social worker. now working as a social worker, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5639.

4. 27 வயது, 5’2” born & brought up in UK. Finished degree in Msc chemical engineering. Working as a Global multi asset analyst, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5647.

5. 36 வயது, 5’4” British citizen, Studied Phd. Now working as a Consultant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5648.

6. 36 வயது, 5’8” British citizen, Graduate working as an engineer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 4153.

7. 36 வயது, 5’2” Born & brought up in Uk, Graduate, working in a Lawyer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5329.

8. 31 வயது, 5’6” Living in Sri Lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5459.

9. 24 வயது, 5’4” Living in India. Graduate, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5597.

10. 24 வயது, 5’4” Living in sri lanka. Finished degree in medicine graduate, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5625.

11. 43வயது, 5’6” Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5618.

12. 43 வயது, 5’1” Living in Sri lanka. Working as a secretary in a company, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5631.

13. 28 வயது, 5’5” Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5413.

14. 37 வயது, 5’6” British citizen doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5598.

15. 33 வயது, 5’1” Living in sri lanka Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5601.

16. 30 வயது, 5’2” Born & brought up in Uk, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 3627.

17. 26 வயது, 5’4” British citizen Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5376.

18. 23 வயது, 5’1” Graduate Finished degree in computer science now studying MBA masters, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5613.

19. 30 வயது, 5’4” Born and brought up in UK, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5575.

20. 40 வயது, 5’4” British citizen. Graduate working as an Accountant. தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5580.

21. 35 வயது, 5’7” Born and brought up in Uk. Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5582.

22. 27 வயது, 5’6” Born and brought up in Uk. Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5583.

23. 36 வயது, 5’4” Now studying PHD in Norway working in a hospital as a medical researcher, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5584.

24. 26 வயது, 5’0” Divorced temporary visa, தகுந்த மணமகனை Ref 5585.

25. 30 வயது, Divorced british citizen, மணமகனை தேடுகின்றனர் Ref 5588.

26. 30 வயது, 5’3” British citizen. Graduate working in NHS trust as clinical physiologist, மணமகனை தேடுகின்றனர் Ref 5590.

27. 27 வயது, 5’3” Born and brought up in Uk. Graduate. Medical sector, மணமகனை தேடுகின்றனர் Ref 5343.

28. 32 வயது, 5'0" British citizen graduated in computer system & electronic engineering now working in a private bank with insurance broker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5560

29. 29 வயது, 5'5" British citizen finished pharmacist degree now working in a Boots தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5564

30. 20 வயது, 5'5" Divorced living in Sri Lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5567

31. 31 வயது, 5'5" Born and brought up in uk. Graduate working as an Investment Banker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5572

32. 42 வயது, 5'3" Divorced british citizen working in a Food company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5374

33. 32 வயது, 5'2" British citizen graduate working as a clinical coding supervisor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4388

34. 30 வயது, 5'6" work permit, Graduate Administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5543

35. 29 வயது, 5'3" Born and brought up in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5540

36. 28 வயது, 5'3" Graduate living in sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5544

37. 32 வயது, 5'7" Divorced graduate living in Sri Lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5519

38. 27 வயது, 5'0" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5522

39. 24 வயது, 5'4" Born & brought up in uk. Graduate working as a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5526

40. 27 வயது, 5'4" living in sri lanka graduate working in a international school in colombo as a teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4536

41. 25 வயது, 5'3" Born & brought up in uk finished degree working in a pharmaceutical company as a laboratory technician தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5530

42. 26 வயது, 5'6" Living in sri lanka Finished Dance degree grade 6 தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5532

43. 32 வயது, 5'2" Born & brought up in uk. Finished degree in Finance தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3914

44. 27 வயது, 5'3" Finished degree living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5506

45. 33 வயது, 5'4" British citizen Graduate working as an Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5504

46. 28 வயது, 5'6" British citizen working in at Childcare, christian தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5505

47. 25 வயது, 5'4" Studying CIMA at colombo, living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5507

48. 30 வயது, 5'3" British citizen Graduate working as a podiatrist in NHS, christian (catholic) தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5400

49. 36 வயது, 5'2" Born and brought up in uk, working as a marketing manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5494

50. 27 வயது, 5'2" France Citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5481

51. 27 வயது, 5'1" living in Sri Lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5485

52. 25 வயது, 5'4" UK Citizen graduate working as a Financial Sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5487

53. 30 வயது, 5'4" British Citizen medical doctor, Catholic, seeking a UK professional தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5489

54. 33 வயது, 5'4" British Citizen working as a research & policy officer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5493

55. 29 வயது, 4'9" British Citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5495

56. 32 வயது, 5'5" Born and brought up in uk working as a accounts Manager. Graduates in BSC horns தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5497

57. 22 வயது, 5'6" British citizen graduates தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5457

**இணையத்தில் மேலதிக விபரங்கள்**
**www.orumanam.com**

# மெசப்பொட்டேமியா, சிந்துவெளி நாகரிகங்கள்



சிந்து வெளியின் நகர் சூழலில் அமைந்துள்ள பாரிய குளியல் இடம்



தொல்பொருளாளர்கள் போற்றும் வெண்கலச் சிலையொன்று

**மாசிலாமணி**

*(ஒரு பேப்பருக்காக)*

நாகரிகம் என்னும் சொல்லை உச்சரிக்கும் போது இதில் வரும் ரி என்னும் எழுத்து பல ருக்கு ரீ யாகப் படுவதால் அவர்கள் எழுதும் போதும் தவறுதலாக நாகரீகம் என்றே எழுதுகி றார்கள். அது ஒரு புறம் இருக்கட்டும். இந்த நாகரிகம் என்ற சொல்லுக்கு விளக்கம் கொடுப் பதானால் பல கோணங்களிலிருந்து கொடுக் கலாம். வேட்டையாடி நாடோடிகளாக அலைந்த மனித இனம் உணவுக்காக பயிர் செய்யத் தொடங்கி ஒரே இடத்தில் தங்கி குடியிருப்புக்கள் உருவாக்கி வாழத் தொடங்கிய நிலையையே இங்கு குறிக்கின்றோம். இது ஒரு எளிய விளக் கம். ஆனாலும் இக்கட்டுரையைப் பொறுத்த மட்டில் அதற்குமேல் நாம் போகத் தேவை யில்லை.

மனிதர், தாம் தோன்றிய ஆபிரிக்காவிலிருந்து 150 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெயரத் தொடங்கி, எத்தனையோ பனி ஊழி களைச் சந்தித்தனர். இதில் 75 ஆயிரம் ஆண்டுக ளுக்கு முன்பு, தென் ஆசியாவின் பல பகுதி களை அடிக்கணக்கில் மூடிய எரிமலைக் குழம் பும் அதனைத் தொடர்ந்து ஆயிரம் ஆண்டுகள் வரை நீடித்த பனி ஊழியும், அரபிக் குடாவில் தொடங்கி இந்தியா உட்பட மலேசியாவின் தென்முனைவரை, உள்ள பாரிய நிலப்பரப் பில் ஆக 10000 வரையான ஆட்களையே உயிரு டன் விட்டு வைத்தது. 12 ஆயிரம் ஆண்டுக ளுக்கு முன்பு முடிவடைந்த கடைசிப் பனி ஊழி யிலிருந்து விடுபட்ட பின்புதான் மனித இனம் தனக்குத் தேவையான உணவைத் தானே உற் பத்தி செய்யும் ஒரு நிலைக்கு வந்தது. இந்தக் கால கட்டத்தில் மனித இனம் அன்ராற்றிகா போன்ற சில பகுதிகளைத் தவிர உலகம் முழு வதும் பரவி விட்டது.

மெசப்பெட்டேமிய, எகிப்திய, சீன(சாங் அரச பரம்பரை) நாகரிகங்களே உலகின் பழமை மிக்க நாகரிகங்களாக கணிக்கப்பட்டு வந்தன. இற்றைக்கு 6500 (கி மு 4500) ஆண்டுகளுக்கு முன்பு நீர்ப்பாசனத்தை பயன்படுத்தி தென் மெசப்பொடேமியாவில் உணவு உற்பத்தி தொடங்கியதால் அங்கு குடியிருப்புக்கள் உரு வாகின. ஆதலினால் இப்பகுதியே ஆதி நாகரி கத்தின் தொட்டில் என்று அழைக்கப்படுகிறது. அதற்கு அடுத்த சில நூற்றாண்டு காலத்தி லேயே சிந்துவெளி நாகரிகமும் (கி மு 4000) தொடங்கிவிட்டது. இங்கு பல மாற்றங்களின் விளைவாக நகரங்கள் மட்டும் உருவாக வில்லை மொஹென்சதாரோவில் சம்பிரதாய பூர்வமாக குளிக்கும் இடங்களும் அமைக்கப் பட்டது. சிந்துவெளி நாகரிகம் தொடங்கிய காலப் பகுதியை அண்மித்து எகிப்திய நாகரிகமும் அத னைத் தொடர்ந்து சீனாவில் சாங் நாகரிகமும் தொடங்கியது. இவற்றைவிட மூவாயிரம் ஆண் டுகளுக்கு முன்பே அமெரிக்காவின் இன்கா, மாயா போன்ற நாகரிகங்களும் தொடங்கி விட்டன.

மேசப்பொட்டேமிய, எகிப்திய, சாங் (சீன) நாகரிகங்கள் பற்றிய பதிவு நீண்ட காலமாக உள்ளது. சிந்துவெளி பற்றிய பதிவுகள் அண் மைய காலத்தவை. 1856ல் கராச்சி லாகூர் புகை யிரதப் பாதை அமைக்கப் பட்டது. அந்தப் பாதையின் அடித் தளத்திற்கு போடத் தேவை யான செங்கற்கள் அப்பாதையில், இந்து நதி யின் கிளைகளில் ஒன்றான ரவியின் கரைகளில் கரப்பான் என்னும் இடத்தில் தாராளமாகக் கிடைத்தன. பழமை மிக்க கற்களாக அவற்றை அப்போது வியந்தார்களே அன்றி அப் பணியின் நிறைவேற்றாளர்களாகப் பணிபுரிந்த எந்த ஆங்கிலேயரினது மூளையிலும் தாங்கள் பழமை மிக்க ஒரு நாகரிகத்தின் தடயங்களை அழிக்கின்றோம் என்ற ஐயம் உடனடியாக எழவில்லை. அதன்பின் 1921ல் இந்து நதியின் பள்ளத்தாக்கில் உள்ள மொகின்சதாரோ என்னும் இடத்தில் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகளும் அதைத் தொடர்ந்து கரப்பானில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் பல அரிய தடயங்களை அளித்தன. அவற்றின் பெறுபேறு கள் 5000 ஆண்டுகளுக்கு முன்பு செழிப்புடன் திகழ்ந்து அழிந்த நாகரிகம் ஒன்று அங்கு இருந் ததற்கு தேவையான தடயங்களை கொடுத் துள்ளது.

1921 க்கு பின்புதான் உலகுக்கு அறிமுகமான திராவிட நாகரிகமான சிந்துவெளி நாகரிகம் ஏன் அழிந்தது ? அந்த மக்கள் எங்கிருந்து வந்தார் கள்? அவர்கள் என்ன மொழி பேசினார்கள்? அவர்கள் எந்த எழுத்து வடிவங்களை உபயோ கித்தார்கள். தொடர் எழுத்துக்களாக அவை இல் லாவிட்டாலும் ஆயிரக் கணக்கான முத்திரை வடிவங்களாக உள்ளன. அந்த சீல்களில் காணப்படும் உருவங்களுக்கு அர்த்தம் கண்டு பிடிக்கப் படாததால் எந்தக் கேள்விக்குமே சரியான பதில் இதுவரை கிடைக்கவில்லை. சில ஊகங்களை மட்டும் வெளியிடுகிறார்கள். எடுத்துக்காட்டிற்கு தமிழில் நட்சத்திரங்களை விண்மீன்கள் என்றுதானே அழைக்கின்றோம். இந்த முத்திரைகளில் 6 மீன் குறிகள் காணப் படுவதை ஆறாம் மீன் என்று அழைக்கும் கார்த் திகை நட்சத்திரங்களைக் குறிக்கும் அடை யாளம் என்று ஊகத்தின் அடிப்படையில் கூறு கிறார்கள். ஆனால் அங்கு பேசப் பட்ட மொழி ஒரு திராவிட மொழி என்று துணிவுடன் அனை வரும் கூறுகிறார்கள். அதற்கு இன்னுமொரு உறுதியான ஆதாரமும் உண்டு. ஆரியரால் வேதங்களில் பெரிதாகக் கூறப்படும் குதிரைகள் பற்றிய தடயம் எதுவுமே அங்கு காணப்பட வில்லை. பிற்காலத்தில் அவர்களால் இந்தியா வுக்குள் கொண்டுவரப்பட்ட ஒரு மிருகம்தான் இந்தக் குதிரை.

நன்கு திட்மிட்டு அமைக்கப்பட்ட வீதி ஒழுங் குகளும் அதற்கேற்ப அமைக்கப்பட்ட நீர் வடி கால் அமைப்புக்களும், அங்கு வாழ்ந்த மக்கள் நகர நிர்மாண ஆற்றல் கொண்டவர்கள் என்ப தற்கு சான்று பகிர்கின்றது. ஆனாலும் அங்கு அரண்மனைகளோ கோயில்களோ நினைவு சின்னங்களோ அரசர் ஆட்சி நடந்ததற்கு ஆதார மாக இல்லையாம். சுத்தம் ஒழுங்கு பேணப் பட்டதற்கான தடயம் உண்டு. கட்டுப்பாட்டுடன் வாத்தகம் நடந்ததற்கு அதாரமாக படிக்கல் சீல் ஆகியவை காணப்படுகின்றன. அங்கு செல்வம் கொளித்ததற்கு சான்றாக தந்தம், பவுண், செங் கல் கட்டிட அமைப்புக்கள் காணப்படுகின்றன. பெரியதோர் தானியக் களஞ்சியக் கட்டிடம் கூட அடையாளம் காணப்பட்டுள்ளது.

படத்தில் காணப்படும் பொதுக் குளியல் இடம் மட்டுமல்ல நகரில் பரவலாக கிணறுகளும் வீடுகளில் குளியல் இடமும் தகுந்த கழிவு நீர் அமைப்புடன் காணப்படுகின்றன. தொல் பொருள் ஆய்வாளர்களை கவருவது அங்கு கிடைத்த கல்லில் செதுக்கப்பட்ட வடிவங்கள். நடனம் ஆடும் ஒரு பெண்ணின் வெண்கலச் சிலை முக்கிய இடத்தை வகிக்கின்றது. அதை மேலே உள்ள படத்தில் நீங்கள் பார்க்கலாம்.

இந்த நகரம் யுனெஸ்கோவால் அரும்பெரும் செல்வங்கள் பட்டியலுள் அடக்கப் பட்டுள்ளது டன் அதன் பாதுகாப்பிற்கு கணிசமான நிதியை யும் அது அளிக்கிறது. 2014ல் இங்கு விழா ஒன்று நடாத்த எண்ணினார்கள். புராதன சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அங்கு நீங்கள் ஒரு ஆணிகூட அடிக்க முடியாது என தொல்பொருள் திணைக்களத்தினர் எச்சரித்து அந்த ஒழுங்கை இரத்துச் செய்ய வைத்தார்கள்.

ஆதி நாகரிகங்கள் பற்றிய தகவல் இதனுடன் நிற்கவில்லை. தரையில் இருந்து தடயம் எதுவும் புதிதாகக் கிடைக்காவிடினும் கடலில் இருந்து கிடைக்கின்றது. கடலில் இருந்து முதலில் கிடைத்த தடயம் கடலுள் மூழ்கிய கண்ணனின் துவாரகா நகரம். இது தற்போதைய குஜராத் தின் துவராகா நகரின் கடற்கரைக்கு அண்மை யில் நீருள் காணப்படுகிறது. ஆய்வுகள் நீருக்கடி யில் நிகழ்த்தப்படுவதால் முழுமையான தகவல் கிடைக்க கூடுதல் காலம் தேவைப்படும். ஐயா யிரம் அண்டுகளுக்கு முன்பு, மகாபாரதக் கதை யின் இன்னொரு கதா பாத்திரமான அர்ச்சுனன் அங்கு நிற்கும்போது இந்த நகரம் மூழ்கிய தாகக் கதை கூறுகிறது. ஐயாயிரம் ஆண்டுக ளுக்கு முந்திய கதையில் கூறப்பட்ட நிகழ்வுக்கு ஆதாரமாகக் கடலுக்கடியில் இருக்கும் இந்த நகரம் கண்டுபிடிக்கப் பட்டது வியப்பைத் தரும் செய்திதான். சிலவேளை நடந்த சம்பவத்தை வைத்துமகாபாரதம் எழுதப்பட்டிருந்தால் வியப் பதற்கு ஏதும் இல்லை. எது எப்படியோ முழுமை யான தகவல் வந்த பின் இதையே நாகரிகத் தின் தொட்டில் என்று அறிவிக்கும் நிலைகூட ஏற்படலாம்.

அடுத்த தடயம் பற்றிப் பேசுமுன் லெமோரி யாக் கண்டம் பற்றிய ஒரு கோட்பாடு உண்டு. அதுபற்றி சிறிது பார்ப்போம். 1864 ல் ஒரு ஆய் வாளர் மடகஸ்கார் தீவில் கிடைத்த ஒரு ஒரு பாலூட்டியின் உயிர்ச்சுவடு ஆசியாவில் கிடைத்து ஆபிரிக்காவில் கிடைக்காது போனதும் அதை அடிப்படையாக வைத்து லெமோரியாக் கண்டம் என்று ஒன்று இருந்து அழிந்திருக்கலாம் என்ற ஒரு கோட்பாட்டை முன் வைத்தார். புவியோட் டுத் தட்டுக்களின் அசைவு பற்றி போதிய தகவல் குன்றிய அந்நாளில் அவர் கோட்பாட்டை எதிர்க்க வழி இல்லாமல் போய் விட்டது. இன்று புவியோட்டுத் தட்டுக்களின் அசைவு பற்றிய மேலதிகத் தகவல் கைவசம் உள்ளதால் லெமோரியாக் கண்டக் கோட்பாட்டை அறிவு லகம் தூக்கி எறிந்து விட்டது. தூக்கி எறியப் பட்ட கோட்பாட்டை கவ்விப் பிடித்துக்கொண்டு எம்மில் பலர் அப்படி ஒரு கண்டம் இருந்த தாக நம்புவதுடன் அது தமிழ் கண்டம் என்றும் கூறுகிறார்கள். முதலில் நாம் தூக்கி எறியவேண் டியது லெமோரியாக் கண்டம் பற்றிய பேச்சை. காரணம் கிடைத்த தடயம் தமிழ்நாட்டில் என்ப தால் லெமோரியாக் கண்டக் கோட்பாட்டா ளர்கள் மேலும் குழப்பப் பார்ப்பார்கள்.

இப்போ கிடைத்த புதிய தடயம், 12 ஆண்டு களுக்கு முன்பு தமிழ்நாடு நாகபட்டினத்தின் பூம்புகார் கரையை அண்டி 20 அடிக்கு கீழே நீரில் மூழ்கிய நிலையில் காணப்பட்ட ஒரு நகரம் பற்றியது. இந்திய கடல் நீரியல் திணைக்கள மும், தொல்பொருள் ஆய்வு மையமும் சேர்ந்து நடாத்திய ஆய்வுப் பயணத்தில் இதைக் கண்டார்கள். இது கண்டு பிடிக்கப் பட்டதும் இந்த நகரம் குறைந்தது 7000 ஆண்டுகளுக்கு முன் மூழ்கிய நகரமாக இருக்கவேண்டுமென்று அறிவித்தார்கள். அதிலிருந்த நாகரிகமே நாகரி கத்தின் தொட்டிலாக இருக்க முடியும் என்றும் அறிக்கை விட்டார்கள்.

ஆனால் 12 ஆண்டுகள் கழிந்தும் இது தொடர்பான அறிக்கை எதையுமே காணோம். அவர்கள் நம்பிக்கையுடன் அறிக்கை விட்டார் களே இதுதான் நாகரிகத்தின் தொட்டில் என்று. இப்போ மௌனமாக இருப்பது தான் மர்மமாக உள்ளது.

கருத்துக்களுக்கு - facebook.com/orupaper @orupaper


# தமிழ்ப் படங்களைப் பார்ப்பதற்கு TamilHub ஐ டவுன்லோட் செய்யுங்கள்













TAMIL HUB

Available on the App Store

ANDROID APP ON Google play

# நகைச்சுவை நடிகர்கள் இல்லாமல் தத்தளிக்கும் தமிழ் சினிமா



- மதுமதி

ஒரு திரைப்படம் என்றாலே அதில் நகைச்சுவை கட்டாயம் குடி கொண்டிருக்கும் இல்லையென்றாலும் குடியமர்த்தப்படும். 1931ம் ஆண்டு அக்டோபர் 31 ந் தேதி தமிழின் முதல் பேசும் படமான காளிதாஸ் வெளிவந்தது.அன்றிலிருந்து இன்றுவரை தமிழ் சினிமா பல பரிணாமங்களைத் தாண்டி வந்திருக்கிறது.திரையில் ஜொலித்த எத்தனையோ நடிகர்களையும் நடிகைகளையும் நாம் பார்த்து ரசித்துப் போற்றி தத்தம் இதயக் கோயிலில் வைத்து பூசித்திருக்கிறோம். ஒரு திரைப்படத்திற்கு நாயகன் நாயகி அவசியம். அதற்கடுத்ததாக முக்கியத்துவம் வாய்ந்த கதா பாத்திரம் என்னவென்று பார்த்தால் அது நகைச்சுவை பாத்திரம் தான். அந்தப் பாத்திரத்தில் நடித்த நடிகர்களையும் நாம் நாயகனுக்கு இணையாக போற்றியிருக்கிறோம் என்பதில் மாற்றுக்கருத்திருக்காது.

ஒரு படத்தின் வெற்றிக்கு எப்படி நாயகன், நாயகியின் நடிப்பு முக்கியமோ அதைப் போலவே அப்படத்தின் நகைச்சுவை நடிகனின் பங்கும் வெற்றிக்குத் தேவைப்படுகிறது. கறுப்பு வெள்ளைப் படங்களில் நகைச்சுவைக்கு எப்படி முக்கியத்துவம் கொடுத்தார்களோ அந்த முக்கியத்துவம் இன்னும் தமிழ் திரைப்பங்களில் குறையாமல்தான் இருக்கிறது.

கறுப்பு வெள்ளை சினிமாக்கள் ரசிகர்களை சிரிக்க வைப்பதற்கு மட்டும் நகைச்சுவையை பயன்படுத்தாமல் அதன் மூலம் சமுதாயக் கருத்துக்களையும் சொல்லிவந்திருக்கிறது. ஆனால் இன்றைய திரைப்படத்தில் வரும் நகைச்சுவையில் சமுதாயக் கருத்துக்கள் முற்றிலும் காணாமல் போயிருக்கிறது.தமிழில் எத்தனையோ நகைச்சுவை நடிகர்கள் வந்து போயிருந்தாலும் நம் மனதில் இன்றும் நிலைத்து நிற்பவர்கள் என்று சொன்னால் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், சந்திரபாபு, நாகேஷ், கவுண்டமணி செந்தில், விவேக், வடிவேல், சந்தானம் போன்றோர்கள் மட்டுமே..

கறுப்பு வெள்ளைப் படங்களில் கலைவாணரின் ஒவ்வொரு நகைச்சுவையும் பல கருத்துக்களைச் சொல்லும். சந்திரபாபுவின் பாடல்களும் பல தத்துவங்களை சொல்லிபோகும். நாகேஷ் தனது அசாதாரமான நடிப்பால் கொள்ளை கொண்டார். உடல் அசைவுகளின் மூலம் நகைச்சுவையை திரையில் புகுத்தியவர் என்றே சொல்லலாம். கறுப்பு வெள்ளை ஆதிக்கம் முடியும் தருவாயில் திரைத்துறையில் நுழைந்தவர் கவுண்டமணி. அவர் திரயில் நுழைந்த வருடம் முதல் கிட்டத்தட்ட 30 வருடங்கள் தமிழ் சினிமாவின் அசைக்க முடியாத நகைச்சுவை நடிகனாகத் திகழ்ந்தார். அவரோடு ஜோடி சேர்ந்த செந்தில் 25 வருட சினிமாவை ஆட்கொண்டார். அவர்கள் இருவரும் உச்சத்திலிருந்த போது பாலச்சந்தரால் அறிமுகப்படுத்தப்பட்ட விவேக் தனக்கென பாணியை வைத்துக்கொண்டு மெல்ல வளர்ந்து கொண்டிருக்க, ராஜ்கிரணால் அறிமுகப்படுத்தப்பட்ட வடிவேலு அசுர வளர்ச்சி அடைந்தார். நாகேஷைப் போல உடல் அசைவுகளும் அப்பாவித்தனமான அவரது உரையாடலும் பாமரனையும் சிரிக்க வைத்தது.

தமிழ்த் திரையுகலம் ரஜினி கமல் போன்றோரை மூத்த நாயகர்கள் என்று பட்டியலிட இளைய நாயகர்களாக விஜய், அஜீத் உள்ளே நுழைந்தனர். அவர்களின் படங்களில் விவேக்கும், வடிவேலும் இடம் பிடிக்க கிட்டத்தட்ட 20 வருடங்களுக்கு மேலாக இன்னும் இருவரும் நடித்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களின் சம்பளம் அதிகமாக மற்றும் கால்சீட் கிடைக்காமல் போக மாற்று நகைச்சுவை நாயகனை சில இயக்குனர்கள் அறிமுகம் செய்ய அதில் கருணாஸ் மற்றும் கஞ்சாகருப்பு, சந்தானம் போன்றோரே சிரிக்க வைத்தனர். அப்போது நகைச்சுவைக்கும் அடுத்த தலைமுறை உருவாகிவிட்டது என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள்.

மாறாக கருணாஸ் ரசிகர்களை தொடர்ந்து சிரிக்க வைக்க முடியாமல் தடுமாற திடீரென நாயகனாகி இப்போது நடித்து வருகிறார். கஞ்சா கறுப்பு உச்சக்கட்ட காமெடியில் நடித்தால் கூட ரசிகர்கள் சிரிக்க முடியாமல் அவதிப் படுகிறார்கள். இதனால் அவரும் இடத்தை தக்க வைத்துக்கொள்ள முடியாமல் தடுமாறுகிறார்.ஆனால் சந்தானம் யாரும் எதிர்பாராத விதமாக தனது டைமிங் காமெடியில் அசத்தி இளைய தலைமுறையினர் நடிக்கும் எல்லாப் படங்களில் ரசிகர்களை குஷிப்படுத்துகிறார்.

சந்தானம் சென்னை பாஷை மட்டுமே பேசுவதால் மற்ற மாவட்ட ரசிகர்களுக்கு அவரது நகைச்சுவை புரியாமல் போகிறது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் சென்னை சுற்றுப்புற ரசிகர்கள் சந்தானம் என்ன சொன்னாலும் எதைச் செய்தாலும் ரசிக்கிறார்கள்.

கவுண்டமணி செந்தில் இல்லாத வெற்றிடத்தை எப்படி வடிவேலுவும் விவேக்கும் நிரப்பினார்களோ அப்படி விவேக்கும் வடிவேலும் இல்லாத வெற்றிடத்தை சந்தானத்தால் நிரப்ப முடியாது. காரணம் வடிவேலு நகைச்சுவை விவேக் நகைச்சுவை என்று பிரித்து இனம் காட்டலாம் அப்படி சந்தானத்தின் நகைச்சுவை இது என இனம் காட்ட முடியாது. படத்தின் ஏதாவதொரு ஒரு காட்சியைத்தான் காட்ட முடியும்.

இன்னும் சொல்லப்போனால் சந்தானம் தனியாக நகைச்சுவை நடிகனாக எந்தப் படத்திலும் நடிக்கவில்லை. நாயகனின் நண்பனாக நடித்து அவ்வப்போது சிரிக்க வைக்கிறார் என்றே சொல்லலாம். வடிவேல் போலவோ விவேக் போலவோ காமெடிக்கென்று தனியாக ஸ்கிரிப்ட் எழுதப்பட்டு அவர் நடிப்பதில்லை. கதையோடுதான் பயணப்பட்டுக்கொண்டிருக்கிறார்.

பெரும்பாலும் சென்னையில் நடக்கும் கதைப்படி நாயகனுக்கு நண்பனாக வந்தால் மட்டுமே அவரது டைமிங் காமெடி எடுபடுகிறது. இன்றைய சூழலில் இவர் மட்டும்தான் காமெடி நடிகர் என்றொரு நிலை இருக்கிறது. அதனால் அவரும் தொடர்ந்து ஓய்வில்லாமல் நடித்துக் கொண்டிருக்கிறார். அனைத்து முன்னணி இளைய நடிகர்களோடு நடிக்க வேறு காமெடி நடிகர் இல்லாதது சந்தானத்தின் மார்க்கெட் உயர காரணமாகிறது. வடிவேல் பிசியாக இருந்தால் விவேக் நடிப்பார். விவேக் பிசியாக இருந்தால் வடிவேலு நடிப்பார் என்ற நிலை இப்போதில்லை.

வடிவேலு முன்னணி நடிகர்களோடு நடித்தாலும் சின்ன சின்ன கிராமத்துப் படங்களிலும் நடிப்பார். ஆனால் சந்தானம் கிராமத்து படங்களில் நடிப்பதில்லை. அப்படி நடித்தாலும் அவரது சென்னை பாஷை அதற்கு பொருந்தாமல் போகிறது. வடிவேலு சொந்தப் பிரச்சனை காரணமாக நடிக்காமல் இருக்க, கிராமத்துப் படங்கள் சிறிய பட்ஜெட் படங்களில் நடிக்க நகைச்சுவை நடிகர் இல்லாமலேயே இருக்கிறார்.

வடிவேலு நடிக்க வேண்டிய பாத்திரங்களில் இப்போது மைனா படத்தின் மூலம் தேசிய விருது வாங்கிய நடிகர் தம்பி ராமையா நடித்துக் கொண்டிருக்கிறார்.

எப்படி பார்த்தாலும் விவேக் இடத்தை நிரப்ப சந்தானம் என்றாலும் கூட வடிவேலு இடத்தை நிரப்ப ஆள் இல்லாமல்தான் தடுமாறிக் கொண்டிருக்கிறது தமிழ் சினிமா

*- மதுமதி.இணையம்*

## நாங்கள் ஒரு கூட்டுப் பறவைகள்!

கட்டிய கூடு கலைந்து கிடக்கிறது..
எம்மை கொட்டிய குழவிகள்..
குதூ கலித்தன..!

ஆதரிக்க ஆட்கள் இன்றி..
அழுது புலம்பினோம்..
கை இழந்த கணவன்..
கால் இழந்த மகன்.. என்று..
குருதி மழையில் குளித்தவர்கள்
குறை உயிரில் இறுதி மூச்சை
எங்கள் மண்மீது விட்டனர்!

தாயின் மார்பில் பால் குடித்துக்
கொண்டிருந்த குழந்தை..
பாயில் கிடந்து
ஆழுது கொண்டிருந்தபோதே ..
கொத்துக் குண்டால்..
தாயின் உயிர் பிரிந்தது..
யார் கேட்டார்? யார் பார்த்தார்..?

வீதியெல்லாம் ஓடியது
எம்மினத்துக் குருதி..
அணில்.. கோதிய கொய்யாப்
பழம்போல்.. வீதியோரம்..எங்கள்
தமிழர்களின் தலைகள்..
அங்கொன்றும் இங்கொன்றுமாய்..
சிதறிக் கிடந்த கொடுமையை..
கண்டவர்கள் நாங்கள்!

உயிர் தப்ப ஒதுங்கிய
நிலக் கீழ் பதுங்கு குழிகள் பல..
எங்கள் உடன் பிறப்புகளின்
உடல்களை.ஓர் கணத்தில்..
உயிரோடு மூடி கொண்டன.
யார் கேட்டார்..? யார் பார்த்தார்?..

மருத்துவ மனைகள் உடல் நோயை
மாற்றுவதுதான் உலகில் மரபு ..
அதுவே..
மாற்றான் போட்ட குண்டுகளால்.
சிதைந்ததையும் அழிந்ததையும்.. ..
அதற்குள் சிக்கிய
எம் மக்கள்..துடித்ததையும்.
மடிந்ததையும்..
எப்படி மறக்க முடியும்?..

அத்தனையும் கண்டு பித்தனைப்போல்..
கொக்கரித்தான் எதிரி.
கொடூரமாய்ச் சிரித்தான்..
பிணங்களைத் தின்னுங்கள் என்று
சொல்வதுபோல்..
உரிமையை மறுத்த நரி..
உணவைக் கூட தர மறுத்தான்..
அப்போது.. யார் கேட்டார்..?
யார் பார்த்தார்?

அவனைத்தான் இன்று..
செல்லக் காசாய் அம்பாந் தோட்டைக்கு
அனுப்பி விட்டு..நிற்கிறோம்..
இது போதாது என்பது..
எங்களுக்கு தெரியும்..
ஆனால்.. கைக்கு கை..காலுக்கு கால்..
தலைக்குத் தலை..
எடுப்பான் எங்கள் பேரன்..
இது மட்டும் உண்மை

மு.வே.யோகேஸ்வரன்

தமிழில் செய்திகளை பார்த்துக் கேட்பதற்கு TamilHub ஐ டவுண்லோட் செய்யுங்கள்





TAMIL HUB
Available on the App Store
ANDROID APP ON Google play

# சினிமா




## நானும் ரௌடி தான்

ஏற்கெனவே வந்த கதைதான். காதலிக்காக கொலை செய்யத் துணியும் காதலன் பற்றிய படம். ஆனால் இப்போதைய காலக்கட்டத்திற்கேற்றவாறு திரைக்கதை அமைத்திருக்கிறார்கள். கூடவே கொஞ்சம் காம நெடி கலந்த காமெடியும்..!

பாண்டிச்சேரியில் போலீஸ் இன்ஸ்பெக்டரான மீனாகுமாரி என்கிற ராதிகாவின் மகன் விஜய் சேதுபதி. சின்ன வயதில் இருந்தே ரவுடியாக வேண்டும் என்று ஆசைப்படுபவர். போலீஸ், ரவுடி இருவரில் போலீஸ்தான் பெரிய தாதா என்கிற நினைப்பில் தானும் ஒரு தாதாவாகிவிட வேண்டும் என்கிற ஆசையில் தனது தாயின் போலீஸ் ஆசைக்கு இணங்குவதுபோல் நடித்தபடியே தாதா வேலையையும் செய்து வருகிறார். இன்ஸ்பெக்டர் அழகம்பெருமாளின் மகளான நயன்தாராவை ஒரு நாள் தன் தாயைப் பார்க்க வந்த இடத்தில் சந்திக்கிறார் விஜய் சேதுபதி. பார்த்தவுடனேயே வழக்கமான சினிமாத்தனம் போல் அவர் பின்னாலேயே ஓடுகிறார். விரட்டுகிறார். செல்போனை ரிப்பேருக்குக் கொடுத்துவிட்டு 'சரி செய்து தருகிறேன்' என்று சொல்லியே ஏமாற்றுகிறார். நயன்தாராவுக்கு காது கேட்காது. ஒரு குண்டு வெடிப்பில் தனது தாயை இழந்தவர். அந்தக் குண்டுவெடிப்பினால்தான் அவருக்கு காது கேட்கும் சக்தியும் பறி போயிருக்கிறது. ஆனால் உதட்டசைவை வைத்து பேசுவதைப் புரிந்து கொண்டு பேசுவார். அவரது தாயின் சாவுக்குக் காரணமான குண்டுவெடிப்பை திட்டமிட்டு நடத்தியது அதே பாண்டிச்சேரியில் இருந்த கிள்ளிவளவனான பார்த்திபன். இப்போது ரவுடிகளின் அடுத்தக் கட்ட பரிமாண வளர்ச்சியான அரசியலிலும் தலையெடுத்து நிற்கிறார்.

நயன்தாராவின் அப்பா இன்னும் சில நாட்களில் ரிட்டையர்டாகப் போகிறார். பாண்டிச்சேரிக்கு மகளுடன் வந்த இடத்தில்.. அப்பாவுக்காக பீர் வாங்க ஒயின் ஷாப்புக்கு போகும் நயன்தாரா, அங்கே கடையின் உள்ளே பார்த்திபன் இருப்பதைப் பார்த்துவிட்டு வந்து அப்பாவிடம் சொல்கிறார். அப்பா தனது மனதை உறுத்திக் கொண்டிருக்கும் மனைவியின் மரணத்திற்கு பழி வாங்க பார்த்திபனை கொலை செய்யப் போகிறார். ஆனால் குறி தவறுகிறது. பார்த்திபனின் ஆட்கள் அழகம்பெருமாளை கொலை செய்கிறார்கள்.

இந்தக் கொலையை முதலில் விஜய் சேதுபதி நயன்தாராவிடம் சொல்லாமல் விட்டுவிட.. கடைசியில் ராதிகாவால் நயன்தாராவுக்கு தெரிய வருகிறது. விஜய் சேதுபதி இந்த நேரத்தில் நயன்தாராவை காதல் என்று சொல்லி நெருங்கி வர.. "எனது அப்பா, அம்மாவை கொலை செய்த பார்த்திபனை கொலை செய்தால்தான் நான் உன்னைக் காதலிப்பேன். கல்யாணம் செய்து கொள்வேன்..." என்கிறார் நயன்தாரா. அடுத்து விஜய் சேதுபதி என்ன செய்தார் என்பதுதான் இடைவேளைக்கு பின்னான கதை..!

இப்படி படத்தினை பற்றி ஒட்டு மொத்தமாகப் பார்க்கப் போனால் 'பார்க்கலாம்' என்பது போலத்தான் இருக்கிறது. ஆனால் சொல்ல வந்தவிதம் மிக கேவலமாக இருக்கிறது என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். காதல் என்கிற ஒரு விஷயத்தைத் தவிர வேறு எதுவுமே தமிழ்ச் சினிமா ரசிகனிடத்தில் இல்லை என்றுதான் அனைத்து இயக்குநர்களும் இப்போதும் சிந்திக்கிறார்கள். இதை மீறி அவர்கள் வெளியில் வருவதே இல்லை. இந்தக் காதல் என்ற உணர்வு பார்த்தவுடன் வருகிறது என்றுதான் அனைவருமே சொல்லிக் கொடுக்கிறார்கள். பார்த்தவுடன் வருவதா காதல்..? இதை காதலித்து மணமுடித்தவர்களுடன் கேட்டு, பேசிப் பார்த்தால் புரியும்..

காதலிக்காக காதலன் என்னவெல்லாம் செய்வான் என்பதையும் இந்த தமிழ்ச் சினிமாதான் சொல்லிக் கொடுத்தது. இப்போதும் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்தப் படத்தில் சொல்லியிருப்பது போல இத்தனை கொடூரமாக இருக்கவே கூடாது..! முட்டாள்தனமான திரைக்கதையை அமைத்திருக்கிறார் இயக்குநர் விக்னேஷ் சிவன்.

எந்த மனுஷனாவது பெத்த அப்பன் செத்ததை மகளிடம் சொல்லாமல் 'அவள் சிரிச்சுக்கிட்டே இருக்கணும். அதுதான் என் ஆசை' என்று சொல்வானா..? இது எவ்வளவு பெரிய மனித நேயமற்ற செயல்..? இந்த மனித நேயம் கூட இல்லாதவன் எப்படி ஒரு நல்ல மனிதனாக இருக்க முடியும்..? பாலாஜி மூலமாக 'இது தவறு' என்று திருப்பித் திருப்பி சொன்னாலும் ஹீரோயிஸ சினிமாவில் ஹீரோ என்ன சொல்கிறாரோ அதுதான் திரைப்படம் சொல்ல வரும் நீதி என்பது தமிழ்ச் சினிமாவுலகின் மரபு. அந்த வகையில் இத்திரைப்படம் சொல்லியிருக்கும் இந்த திரைக்கதை கேடுகெட்டத்தனம்..!

இப்போதெல்லாம் படங்களில் இரட்டை அர்த்த ஆபாச வசனங்கள் குறைந்து கொண்டே வருவதை நினைத்து சந்தோஷப்பட்ட வேளையில் அதையும் இந்தப் படத்திலும் நிறைவேற்றியிருக்கிறார் இயக்குநர். ஹீரோயினுக்கு நிசமாவே காது கேட்காதா என்பதை சோதிக்க வேண்டி ஹீரோ இரண்டு கெட்ட வார்த்தைகளை சொல்லிவிட்டு இதைத் திருப்பிச் சொல்லும்படி கேட்கிறார். என்ன அழகாக தமிழை வளர்க்கிறார்கள்..? இயக்குநருக்கு திருஷ்டி சுத்தி போடணும்..!

கிளைமாக்ஸில் ஹீரோயினே வில்லனிடம் 'போடணும்' என்று பேசுவது போன்று காட்சியும், வில்லன் அதற்கு நேரடி அர்த்தமே எடுத்து பதில் சொல்வதும்.. உச்சக்கட்ட ஆபாசம்..! ஒரு மாற்றுத் திறனாளி பெண்ணின் வாயில் இருந்து இப்படிப்பட்ட வார்த்தைகளையெல்லாம் பேச வைத்திருக்கும் இந்த இயக்குநருக்கு இந்தாண்டின் சிறந்த இயக்குநருக்கான விருதினை வழங்க வேண்டும். ஒரு பெண்.. அதிலும் ஒரு மாற்றுத் திறனாளி என்றாவது யோசித்திருக்க வேண்டாமா..? இவைகள்தான் இந்தப் படத்தின் வெற்றிக்கான காரணங்களாக இயக்குநர் நினைத்தால், இந்தப் படத்தின் மூலம் கிடைக்கின்ற வசூல் மனிதக் கறியை கூறு போட்டு விற்று அந்தக் காசில் வாழ்வதற்கு சமமானது..! இதனாலேயே இந்தப் படத்தை சிறந்த, நல்ல படம் என்று சொல்ல முடியவில்லை.

வருந்துகிறோம்..

*- உண்மைத்தமிழன்*

## சினித்துளி

### எந்திரன் 2!



ரஜினிகாந்த் நடிப்பில் கபாலி படம் அடுத்த ஆண்டு கோடை விடுமுறையில் வெளிவரவிருக்கிறது. இந்த நிலையில் எந்திரன் 2 படத்துக்கான வேலைகளும் தொடங்கிவிட்டன. கபாலி வெளியான கையோடு, எந்திரன் 2 படத்தின் படப்பிடிப்பு தொடங்குகிறது. டிசம்பர் வரை கபாலி படப்பிடிப்பு நடப்பதால், 2016-ம் ஆண்டு ஜனவரியில் எந்திரன் 2 தொடங்குகிறது. எந்திரன் 2 படத்தில் வில்லனாக நடிக்க அர்னால்ட் சம்மதித் துள்ளதாக தகவல் வெளியாகிறது. சம்பளம் ரூ 35 கோடியாம்

2016–ம் ஆண்டு தொடங்கும் எந்திரன் 2 படப்பிடிப்பு வரும் 2017-ல் முடிவடைகிறது. அந்தாண்டு இறுதிக்குள் அல்லது அதற்கடுத்த ஆண்டு பொங்கல் தினத்தில் எந்திரன் 2ஐ வெளியிடத் திட்டமிட்டுள்ளார்களாம்.

### ஹரி இயக்கத்தில் விஜய்!



விஜய் இப்போது அட்லி இயக்கும் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். அந்தப்படத்தைத் தொடர்ந்து அவர் விஜயாவாகினி நிறுவனத்தின் படமொன்றில் நடிக்கவிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தப்படத்துக்கான கதையை மட்டும், "அழகியதமிழ்மகன்" படஇயக்குநர் பரதன் எழுதியிருக்கிறாராம். திரைக்கதை அமைத்து இயக்க வேறொருவரைத் தேடியிருக்கிறார்கள். ஒரு சில இயக்குநர்கள் இன்னொருவர் கதையைப் படமாக எடுக்கத் தயங்கியதாகத் தெரிகிறது.

இந்நிலையில் அந்தக்கதையை இயக்குநர் ஹரி கேட்டிருக்கிறார். அவருக்குக் கதை பிடித்திருப்பதால் இந்தக்கதையை அப்படியே படமாக்கலாம் என்று சொன்னதாகவும் அதைத் தொடர்ந்து அவரையே இயக்கச்சொல்லியும் இருக்கிறார்கள்.

### ஜில்.. ஜங்.. ஜக்..



நடிகர் சித்தார்த் நடிக்கும் புதிய படத்திற்கு 'ஜில் ஜங் ஜக்' என்று மிக மிக வித்தியாசமாக பெயர் வைத்திருக்கிறார்கள். இந்தப் படத்தை சித்தார்த்தே தயாரிக்கிறார் என்பதும் கூடுதல் ஸ்பெஷல். இந்தப் படத்தின் இன்னொரு ஸ்பெஷல் இதில் ஹீரோயினே கிடையாதாம். படத்தின் கதை மூன்றுவிதமான ஆண்களைப் பற்றிய கதைதானாம். அறிமுக இயக்குநரான தீரஜ் வைடி இந்தப் படத்தை எழுதி, இயக்கவுள்ளார். படப்பிடிப்பு கடந்த வாரம் துவங்கியிருக்கிறது..

நாஞ் 'ஜில்' சிவாஜி, 'ஜங்'குலிங்கம், 'ஜக'ன் ஆகிய மூன்று முக்கிய கேரக்டர்களின் பெயர்களில் இருந்துதான் 'ஜில் ஜங், ஜக்' என்று டைட்டிலை உருவியிருக்கிறார்களாம்.

### இது நம்ம ஆளு தயார்!




பாண்டியராஜ் இயக்கத்தில் சிம்பு – நயன்தாரா நடிப்பில் உருவான படம் இது நம்ம ஆளு. இந்த திரைப்படம் நீண்ட நாட்களாக கிடப்பில் இருந்து வருகிறது, இந்நிலையில் இப்படத்தை குறித்து பாண்டியராஜ் தயாரிப்பாளார் ஒகே சொன்னால், இப்படத்தின் இசை நவம்பர் மாதத்திலும், படம் டிசம்பர் மாதத்திலும் வெளியாகும் என கூறியுள்ளார். விரைவில் இப்படத்தின் இசை வெளியீடு தேதி அறிவிக்கபடும் என்று இயக்குனர் தெரிவித்துள்ளார்.

கெதியெண்டு படத்தை வெளியிடுங்கப்பா..

**Private Tuition in Wallington and Croydon**

- Year 3, 4, 5 and 11+ English and Maths taught by experienced lecturers
- Also GCSE Maths & Physics



Contact - **Balan** BEng(Hons) MSc(Oxon) MBCS TESOL
**Mob : 074 0287 1921**

**Violin, Keyboard G Guitar**



**புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன**

அனுபவம் மிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது

OEBL , OFAL Syllabus,
Trinity college Syllabus க்கு ஏற்ப கற்பிக்கப்படுகிறது.

இடம் : New Malden Centre and Rosehill Roundabout.

For More Datails : 07917 128 581

# Selling or Renting this Autumn ?

இனிவரும் காலங்களில் உங்கள் விருப்பத்திற்கேற்ப விற்க அல்லது வாடகைக்கு கொடுக்கவிருக்கிறீர்களா ?



உங்கள் எண்ணங்களுக்கமைய
வழிகாட்டுதலுடன் கூடிய நாணயமான
சேவைக்கு நம்பிக்கையுடன்
எங்களை அனுகவும்

Let us find
your next Home
Because
We already
have buyer for yours

Book your FREE Market Appraisal quoting "kfoffer12" and get **25 % off** our Standard fee

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

Karan Fossils
229 High Street, Acton London, W3 9BY.
Tel: **020 3725 4242**
Email: **acton@karanfossils.com** Web: **www.karanfossils.com**

karanfossils ESTATE AGENTS




# JPN

Shipper | Movers | Transporters

Shipping: World Wide Door to Door
Air Cargo: Faster and Promised Delivery
Removal Services: Rate Lower - Job Higher

குறைந்த செலவில்
விமான மற்றும் கடல்-தரை
மார்க்கமான பொதி சேவை
பாதுகாப்பு - விரைவு - நம்பிக்கை

யாழ், வன்னி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவான சேவை !

உலகெங்கும் கடல், வான் மார்க்கமாக பொருட்களை அனுப்ப நம்பிக்கையான ஒரே நிறுவனம்

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தித்திக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

- Shipping & Airfreight
- Worldwide Destination
- Import & Export
- Packing & Crating
- Collection & Delivery
- All Sizes & Weights
- Immediate Insurance Cover
- Complete Documentation Service

Now we are Operating the Coaches Europe Wide!







Machinaries & Commercial Cargo Clearances and
Door Deliveries to any Corner of Srilanka @ Best Rates

குறைந்த விலையில் இலங்கைக்கு பொதிகளை மட்டுமல்லாமல் இலத்திரனியல் பொருட்களையும் பாதுகாப்பான முறையில் அனுப்பிக் கொள்ளலாம். உங்கள் பொருட்களை உங்கள் வீட்டிற்கே வந்து பெற்று அனுப்பும் சேவையும் உள்ளது.

Passenger Vehicles Available from 9 to 60 Seater Coaches

**JPN Shipping Ltd.**
**Unit-A2c, Redlands, Coulsdon,**
**CR5 2HT, Surrey.**

Web: www.jpnshippingltd.co.uk
Email: info@jpnshippingltd.co.uk
info@permainternational.co.uk

Call us .........
Tel: **020 8668 0252**
Mob: **079 3119 7571**

# Southall Travel

## *Redefining Travel*

*Why travel with*
## Southall Travel?

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
## சவுத்ஹோல் டிராவல்
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED